
ரோக நிர்ணய சாரம்



தாமரை நூலகம், சென்னை - 600 026.

ரோக நிர்ணய சாரம்

என்னும்

ரோக நிதானம்

ஆசிரியர் :

டி.ஆர். மகாதேவ பண்டிதர்

பதிப்பாசிரியர் :

எஸ்.பி. ராமச்சந்திரன்

வெளியீடு

தாமரை நூலகம்

7, என்.ஜி.ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி எண் : 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 136
முதல் பதிப்பு : 1898
மறுபதிப்பு : ஜனவரி, 1995
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 2016

நூலைப்பற்றி....

நூலின் பெயர்	:	**ரோக நிர்ணய சாரம் என்னும் ரோக நிதானம்**
ஆசிரியர்	:	டி.ஆர். மகாதேவ பண்டிதர்
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	நவம்பர் 2016
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
தாளின் தன்மை	:	16 கி மேப்லித்தோ
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	
பிரதிகள்	:	1200
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ. 75/-
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட் சென்னை - 600034

91/4

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை - 8
நாள் : 12-1-95

க.எண். 14314 / ஆநூ / 94

அனுமதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் - மகாதேவ பண்டிதர் எழுதிய ரோக நிர்ணய சாரம் மறுபதிப்பு செய்தல் - அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம் அரிய தமிழ் நூல்கள் மறுபதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினை தமிழக அரசு கல்வித்துறை அரசாணை (நிலை) எண்.372 (கல்வி) நாள் 20.4.1992 வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின் படி "மகாதேவ பண்டிதர் எழுதிய ரோக நிர்ணய சாரம்" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்துகொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒப்பம்
மு. பரமசிவம்
சிறப்பு ஆணையர் (ம) ஆணையர்
12-1-95

பெறுநர் :
தாமரை நூலகம்,
7, என்.ஜி.ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 26.

பதிப்புரை

இது ஒரு அருமையான நூல். நோய் இன்னதென்று அறிவதற்கு நாடி பரிசோதனையே போதும் என்று சித்தர் கருதினர். நாடி பரிசோதனை பற்றி அநேக நூல்கள் வெளிவந்து உள்ளன.

ஆனால் பிற்கால வைத்தியர்களின் அசட்டை அனுபவமின்மை காரணமாக நாடி பரிசோதனை மூலம் நோய்களை அறியும் திறன் குன்றிவிட்டன எனக் கூறலாம். அக்குறையை நிவர்த்தி செய்வதற்காக புதுமையான முறையிலும் எல்லோரும் எளிதாக கையாளத்தக்க வகையிலும் புதிய நூல்கள் எழுதப்பட்டன.

அவ்வகையில் மிகவும் சிறப்பான உயர்ந்த நூல் இந்த ரோக நிர்யண சாரம் என்று துணிந்து கூறலாம். நாடி பரிசோதனை முறைகளையும் அறியப்படும் நோய்களையும் அட்டவணைப்படுத்தி மருத்துவர்களுக்கு கையேடு போலவும் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கத்தக்க முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதன் சிறப்பை வர்ணிக்கவே முடியாது. ஒவ்வொருவரும் அனுபவ வாயிலாகத் தான் அறிய வேண்டும்.

இந்த அரிய நூலை வெளியிட அனுமதி தந்த ஆவணக் காப்பக ஆணையர் திரு.மு. பரமசிவம், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

பதிப்பாசிரியர்

எஸ்.பி.ராமச்சந்திரன்

கடவுள் துணை

ரோக நிர்ணய சாரம்
என்னும்
ரோக நிதானம்

A compendium of Diagnosis of all Diseases

இஃது

T.A. இராமபண்டிதர் புத்திரராகிய

ஆயுர்வேத பாஸ்கர

T.R. மகாதேவ பண்டிதர் அவர்களால்

அநேக சமஸ்கிருத, தமிழ், இங்கிலீஷ் வைத்தியக் கிரந்தங்களைப் பார்வையிட்டு சகலமானவர்களுக்கும் உபயோகமாகும் பொருட்டு இந்நூல் இயற்றப்பட்டது.

NEGAPATAM
SCOTTISH BRANCH PRESS
1898

முகவுரை

எங்கும் எக்காலத்திலும் வியாபித்துக் கொண்டும் சேதனா சேதனங்களுக்கு ஆதாரமாகவும், நிர்விகாரமாயும், ஸ்வயம் அனாதியாயும் இருக்கின்ற சச்சிதானந்த சொரூபராகிய ஈசுவரனானவர் சிருஷ்டித்த மனிதர்களின் தேகத்தில், வாதம், பித்தம், சிலேஷ்மம், இவைகள் கூட்டமாகவே நிறைந்திருந்தாலும் தோஷரகிதமாகவே இருக்கும். வாதமானது அதி பராக்கிரமத்தை அடைந்து பித்தத்தையும் சிலேஷ்மத்தையும் அதிகரிக்கச் செய்து அவ்விரண்டிலும் உண்டாகின்ற சர்வ ரோகங்களுக்குந்தானே கர்த்தாவாகி அந்த ரோகங்களை பார்க்கிலும் அநேக அதி கடுர ரோகக் கூட்டங்களை அதிசீக்கிரத்தில் உண்டாகச் செய்து தான் எஜமானாக இருக்கின்ற ரோகங்களுக்கு எல்லாம் சிகிச்சை செய்யத்தக்க தேவ சிகிச்சை (ஒன்று), ராக்ஷசசிகிச்சை (ஒன்று), மானிட சிகிச்சை (முப்பது) இச்சிகிச்சைக்குள் அடங்கிய அநேகவித அவுஷதங்களை விரிவாக பிராண ரக்ஷாமிர்த சிந்து என்னும் வைத்திய ரத்தின சங்கிரகத்தில் நம்மால் சொல்லப்பட்டிருப்பதால் அவைகள் கொடுத்து ரோகங்களை நிவர்த்தி செய்வதற்காக ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து அவைகளுக்குத் தகுதியான அவுஷதங்கள் ஏற்படுத்த வேண்டிய விஷயம் முக்கியமானதாகையால் ரோக நிர்ணயசாரம் என்னும் ரோக நிதானம் பதுப்பிக்கப்பட்டது.

இப்புஸ்தகத்தையும் முன் பதிப்பித்திருக்கின்ற பிராண ரக்ஷாமிர்த சிந்துவையும், இனி பதிப்பிக்கப்படும் சரீரவியவக்ஷேத சாஸ்திர மென்னும் அங்கவிபாககுகானவாதம். ஸ்திரீ ஜென்ம சார்த்தகம் என்னும் மருத்துவ நூல். ஸ்திரீதர்ம நிதி என்னும் பாலரோக சிகிச்சை இவைகளையும் விவேகசாலிகள் முறையாக வாசித்து தங்கள் புத்தியால் அவகாசப்படுத்திக் கொண்டு கிரமப்படி சிகிச்சை செய்யின் இம்மை மறுமைக்குரிய பயன்களை இனிதில் அடைந்து வாழ்வார்கள்.

T.R. மகாதேவ பண்டிதர்
கிரந்த கர்த்தா.

உ

கடவுள் துணை

ரோக நிர்ணய சாரம்

என்னும்

ரோக நிதானம்

சச்சிதானந்த சொரூபராகிய சகல புவனகர்த்தாவானவர் 5 வித வாயுக்களும், 5 வித பித்தங்களும், 5 வித சிலேஷ்மங்களும், மனிதனுடைய சரீரத்தில் ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளின் வகுப்புகள், இருப்பிடங்கள், சஞ்சரிக்கும் ஸ்தானங்கள், தொழில்கள் முதலியவை களை அடியில் காண்க.

தோஷம்	வகுப்புகள்	இருப்பிடங்கள்	சஞ்சரிக்கும் ஸ்தானங்கள்	தொழில்கள்
5 வித வாயுக்கள்	பிராணவாயு (சுவாசரூபம்	சிரசு	மார்பு கண்டம்	ஏப்பம், இருமல், நிசுவாசம்
	உதானவாயு (ஊர்த்வஒலி)	மார்பு	நாசி, தொப்புள், கண்டம்	பேச்சி, ஒலி நினைப்பு வன்னம்
	வியானவாயு (வியாபித்தல்)	இருதயம்	பாத முதல் சிரசு வரையில்	விழுதல் நடத்தல் குனிதல் நிமிர்தல் இமைத்தல்
	சமானவாயு (சம)	நாபிஸ் தானம் (தேகத்தின் மத்தியில்)	வயிறு முழுவதும்	சாப்பாட்டை ஜீர்ணிக்கச் செய்து மலமூத்திரம் இறங்கச் செய்யும்
	அபானவாயு (கீழ்)	குதஸ்தானம்	இடுப்பின் பூட்டு, ஆண்குறி, அடிவயிறு அடித் தொடை	மலம், மூத்திரம், சுக்கிலம் சுரோணிதம் கருப்பம் வெளிப்படுத்தும்

5 வித பித்தங்கள்	அனல் பித்தம் (அக்கினி ரூபம்)	சீதக்கட்டு நாபிஸ் தானங் களுக்கு மத்தியில்	பஞ்சபூதங் கள்	ஜீரணிக்கச் செய்யும்
	ரஞ்சகபித்தம் (போஷித்தல்)	சீதக்கட்டு ஸ்தானம்	.....	ரசதாதுவை போஷிக்கும்
	சாதகபித்தம் (துணை)	இதயஸ் தானம்	....	அறிவு, புத்தி, அபிமானம் உண்டாக்கும்
	ஆலோசக பித்தம் (அறிவிப்பு)	கண்கள்	....	ரூபங்களை தெரிவிக்கும்
	பிராசக பித்தம் (காந்தி)	சருமம்	.....	சருமத்தை பிரகாசிக்கும்
5 வித சிலேஷ்மங்கள்	அவலம்ப சிலேஷ்மம் (பற்றுதல்)	இதய ஸ்தானம்	** திருக ஸ்தானம்	அன்னசாரம், ஜலத்தொழில்
	கிலேதக சிலேஷ்மம் (ஈரம்)	* சீதக்கட்டு ஸ்தானம்	......	அன்ன பலாதிகளை மிருதுவாக்கும்
	போதக சிலேஷ்மம் (உணர்தல்)	நாக்கு	.....	அறுசுவைகளை தெரிவிக்கும்
	தருப்பக சிலேஷ்மம் (சுகம்)	சிரசு	கண்கள்	கண்களை குளிர்ச்சிக்கும்
	சந்திக சிலேஷ் மம் (கீல்)	கீல்கள்	.....	கீல்களை தளரச் செய்யும்

* சீதக்கட்டுஸ் தானம் என்பது ஆமாசயம்.

** திருகஸ்தானம் என்பது நடுத்தண்டெலும்பின் மூட்டும் 2 தொடை எலும்பின் மூட்டும் சந்திக்குமிடம்.

இனி ரோகங்களின் வகுப்புகள், காரணங்கள், பொது லக்ஷணங்கள், மருந்துகள் இவைகளை சொல்லுவோம்.

மலட்டு ரோகங்கள் - (7)

காரணம் :-

சுக்கில சோணிதங்களில் வாத பித்த சிலேஷ்ம தோஷங்களாலும் சென்மாந்தர பாவத்தினாலும் மலட்டு ரோகங்கள் உண்டாகின்றன.

நம்பர்		ரோகங்களின் பெயர்கள் ரோகங்கள்	கருக்குழியில் காணும்	புருஷன் புணரும் போது அந்த ஸ்திரீக்குக் காணும் குறிகள்.
1.	பெண் மலடு	வாயுமலடு	வாயு வியாப்பித்திருக்கும்	சர்வாங்க நோவு
2.		பாசிமலடு	பாசி பற்றியிருக்கும்	தலைநோவு
3.		சதைமலடு	சதை வளர்ந்திருக்கும்	நெஞ்சுவலி
4.		கிருமி மலடு	கிருமி நிறைந்திருக்கும்	முதுகுவலி
5.		ரத்தமலடு	ரத்தங் கட்டியிருக்கும்	சண்டசதை வலி
6.		மதமலடு	கொழுப்படைந்திருக்கும்	ஏப்பங் காணும்
7.		ஆண்மலடு	புருஷர்களின் விந்து ஜலத்தில் விட்டால் கரைந்து மிதக்கும் தித்திப்பு இராது.	

மருந்து :- பிராண ரக்ஷாமிர்தசிந்துவில் நாம் சொல்லிய விழுதியெண்ணெய் முதலியவைகள் கொடுக்க

மலட்டு ரோகங்கள் குணமாகி கர்ப்பம் உண்டாகும்.

ரஜஸ்வல காலத்தில் காணுகிற ரத்தமானது சிவந்தும் கறுத்துமிருந்தால் வாததோஷ மென்றும், மஞ்சளாயும் நீலமாயுமிருந்தால் பித்த தோஷ மென்றும், சீழைப் போல வெளுப்பாயிருந்தால் சிலேஷ்ம தோஷமென்றும், பிரேத ரத்தம் போலும் உருண்டை யாயும் விழுந்தால் வாத சிலேஷ்ம தோஷமென்றும் சுத்த சீழ்போல் விழுந்தால் ரத்தபித்த ரோக தோஷமென்றும், கண்டு மறைந்தால் வாதபித்த தோஷமென்றும், மல மூத்திரநிறமாக விழுந்தால் சந்நிபாத தோஷமென்றும் அறிக. இவைகளில் திரிதோஷம் அசாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

கர்ப்ப ரோகங்கள் - (9)

நம்பர்	ரோகங்களின் பெயர்	காரணங்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	சூதஜன்னி	ரஜஸ்வல காலத்தில் திரவம் (ரத்தம்) திடீர் என்று நின்று போகும்.	அடிவயிற்றில் அதிநோவு, சுரம் பிதற்றல்
2.	நிதம்பச் சூலை	போக காலத்தில் யோனியில் வாயு அடைந்து உண்டாகும்	ரத்தம் ஜலம் வெளிப்படாமல் யோனியில் தேங்காய் முனை போல் காணும்.
3.	சூதகவாயு (சூசிகாவாயு சூதக்கட்டு)	போகத்தால் உஷ்ணமும் வாயுவும் சூதகத்தில் சேர்ந்து கருக் குழி துந்து மூலத்தில் வாயுவும் தேகத் தில் உதிரமும் சேர்ந்து உண்டாகும்.	வயிற்றுவலி தலைவலி சூதகந்தங்கிக் காணும்.

4.	கர்ப்பவிற் புருதி	சூதகத்தைத் தங்குவதா லுண்டாகும்	வயிற்றுவலி, தலைவலி, துடைவலி
5.	ரத்தசூலை	உதிரம் நாள்பட அடிவயிற்றில் சேர்ந்து உண்டாகும்.	ராஜஸ்வலகாலத்தில் வயிற்றுவலி அதிசூதகம் இடுப்புவலி
6.	கர்ப்பசூலை	அதி உஷ்ண முண்டாகி கருக்குழியில் வாயுசேர்ந்து சூதகங்கட்டி தேகத்தில் புரண்டும்.	வயிற்றுவலி பலஹீனம்
7.	பெரும்பாடு	போகத்தால் உஷ்ணம் வெட்டை உண்டாகி உந்தி கருக்குழி புண்ணாகும்	உதிரம் இளநீர் ஜலம் போல் காணும் வயிறு வலிக்கும்.
8.	கர்ப்பம் விருத்தி அடையாமலிருத்தல்.		
9.	கர்ப்ப ஸ்திரீக்கு 1-வது மாத முதல் 10 மாதத்தில் காணும் கர்ப்ப வலி.		

மருந்து : ஸ்ரீ தேவி எண்ணெய், கும்மட்டிக்காய் குழம்பு, போஜன குடாரி மாத்திரை முதலியவைகளை பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

மாந்த ரோகங்கள் (8)

காரணம் : குழந்தைக்கு முலைப்பால் கொடுக்கும் ஸ்திரீகள் வாயு பதார்த்தங்களைச் சாப்பிடுவதால் குழந்தைக்கு மாந்த ரோகங்கள் உண்டாகின்றன.

பொதுலக்ஷணம் பலவித நிறத்துடன் பால் ஜலம் சீதம் இவைகளைப் போல் பேதி, சுரம், மயக்கம், கால் குளிர்ச்சி, கண்களில் வெதுப்பு காணும்.

நம் பர்	பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	பால்மாந்தம்	பால்போல் பேதி, வயிறுபொருமல், வாந்தி
2.	சுரமாந்தம்	சுரம், மலஜலக்கட்டு
3.	விஷமாந்தம்	பயந்தபார்வை, கால்கள் சீதளம்
4.	செரியாமாந்தம்	சுரம், மாவைக் கரைத்ததுபோல் பேதி, வயிற்றுப்பல்.
5.	நீர்மாந்தம்	அதிவியர்வை, சீதளம், வீக்கம்
6.	தலைமாந்தம்	கைகால் சீதளம், சுரம், வலிப்பு, பற்கிட்டல், (கடித்தல், இசிவு)
7.	ஊதுமாந்தம்	சுரம், கைகால் வீக்கம்
8.	சுழிமாந்தம்	இரைப்பு, சுரம், சுவாசம், வாந்தி

மருந்து : பால சஞ்சீவி மாத்திரை, கோரோசன மாத்திரை, கஸ்தூரி மாத்திரை முதலிய அனேக மருந்துகளை, பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

மேல் சொல்லிய 8 மாந்தங்கள் தவிர மலங்கட்டினால் மலமாந்தமென்றும், வயிறு உப்பினால் உப்புமாந்தமென்றும் பலவாறு சொல்லுவார்கள்.

கரப்பான் ரோகங்கள் (18)

காரணம் : ஆகாரம் பிசகுதல், பழுக்காத பழங்கள், பருப்பு வகைகள், பலவித மாமிசங்கள் அஜீர்ண

வஸ்துகள் இவைகளை குழந்தைகளின் தாய் புசிப்பதால் குழந்தைகளுக்கு கரப்பான் ரோகங்கள் வருகின்றன. மாமிச தாதுவை ஒட்டி செவ்வாப்பு கட்டிகள் உண்டாகி பழுக்கும்போது பள்ளம் விழும்.

பொது லக்ஷணம் : தேகத்தில் எரிச்சல், நமைச்சல், அரைப்பு துடிப்பு காணும்.

நம் பர்	பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	கருங்கரப்பான்	தேகங்கருக்கும், தாபணங்காணும்
2.	செங்கரப்பான்	தேகஞ்சிவக்கும், வெடித்து நீர்கசியும், பாங்காரம்
3.	வரக்ஷி கரப்பான்	சர்வாங்கம் சிரங்கு, வெடிப்பு தினவு காணும்.
4.	வரிகரப்பான்	தேகத்தில் வரிவரியாக காணும்.
5.	அரிக்கரப்பான்	லிங்கம் யோனி முதலிய இடங்களில் புற்று புண் உண்டாகி சதையை அரித்து தின்னும்.
6.	சொறி கரப்பான்	தேகத்தில் சொறி காணும்.
7.	ஊது கரப்பான்	தேகம் வீங்கும், புண்ணாகும்.
8.	ஆனந்த கரப்பான்	தேகத்தில் தினவு காணும்
9.	பால கரப்பான்	கண்டம் வெடித்து கடிவிஷம் போல் நீர் கசியும்.
10.	மண்டை கரப்பான்	சிரசில் சிறுசிரங்கு, தடிப்பு காணும்.
11.	சூலை கரப்பான்	தேகவெடிப்பு முழங்கால் கை சூலை காணும்.
12.	வாத கரப்பான்	தேகவெளுப்பு, தாபனம் கண்சிவப்பு
13.	பித்த கரப்பான்	தேகத்தினவு, வாந்தி, சுரம், சிவப்பு மூத்திரம்

14.	வாதசெவ் வாப்பு	கருத்த நிறக்கட்டிகள், சுரம், குத்தல் காணும்.
15.	பித்த செவ் வாப்பு	மஞ்சள் சிவப்பு நிறக் கட்டிகள், எரிச்சல், ரத்தம் வடிதல்
16.	சிலேஷ்ம செவ்வாப்பு	வெளுப்பு கனக்கட்டிகள் காணும்.
17.	தாலுபாகம்	தாடையில் முள்ளு உறுத்தல் போல் காணும் (சிலேஷ்மத்தாலுண்டானது)
18.	சடைகரப் பான்	சர்வாங்கம் வேர்க்குருக் கொப்பளங்கள் காணும் (பித்தத்தாலுண்டானது)

மருந்து : உலகோத்தம செந்தூரம், கரப்பான் எண்ணெய் முதலியவைகளை பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

கரப்பான் ரோகங்கள் உண்டாகும் ஸ்தானங்களை சாரவியவ க்ஷேத சாஸ்திரம் என்னும் அங்க விபாக சுகரணவாதம் (Anatomy with Physiology) என்ற புஸ்தகத்தில் அறிந்து கொள்ளவும்.

குழந்தையின் தோஷங்கள் (9)

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	காரணங்கள் பிரதான லக்ஷணங்கள்
1.	நாய்முள் தோஷம்	குழந்தையின் வாயிலும் தொண்டையிலும் துர் மாமிசம் வளரும். முலை உண்ணாது. தலை நடுக்கும், சுரங்காயும்.
2.	தூரஸ்திரீ பரிசதோஷம்	தூரஸ்திரீ பிறர் குழந்தையைத் தொடுவதால் அந்த குழந்தையின் சரீரம் இளைத்து பால் குடியாது.

3.	குளிச தோஷம்	கருப்பமடைய வேணுமென்ற ஸ்திரீ குளிசங் கட்டிக் கொள்ளுகையில் எதிரிலுள்ள குழந்தையானது இளைத்து சுரம், பேதி, தாகம், உச்சியில் பள்ளம், கண் குழி விழுந்து ஜலம் வடிதல் காணும்.
4.	சையோக ஸ்திரீ பரிச தோஷம்	சையோகஞ் செய்த ஸ்திரீ குழந்தையைத் தொடுவதால் குழந்தையின் கண்களில் குழி விழுந்து தேகம் இளைத்து பால் குடியாது, நித்திரை செய்யாது.
5.	சையோக புருஷன் பரிசதோஷம்	சையோகஞ் செய்த புருஷன் குழந் தையைத் தொடுவதால் குழந்தையின் கண்களிலும், உச்சியிலும் குழி விழுந்து தேகம் பச்சை நிறமாகி பக்ஷி குரலை ஒத்த அழுகை, பால் கக்குதல் காணும்.
6.	எச்சில் தோஷம்	குழந்தைக்கு அதிமயக்கம், பால் குடியாது. கடூர சுரம், சீறியழுதல் தேகம் பல நிறத்துடன் துர் வாசனை.
7.	தேரை தோஷம்	குழந்தையின் மேல் தேரை விழுந்து பீச்சுவதினால் குழந்தையின் கால்கைகள் கட்டிப் போட்டதுபோல் கிடக்கும். முலை உண்ணாது. குரல் நெரிதல்.
8.	அளி தோஷம்	குழந்தையின் கைகால் நோவு, பால் கக்குதல், தேகத்தில் துர்வாசனை வீசுதல்.
9.	குளித்தவள் எடுத்த தோஷம்	தூர ஸ்திரீ ஸ்நானஞ் செய்தவுடனே யாதொன்றுஞ் சாப்பிடாமல் குழந் தையை யெடுத்தால் அக்குழந்தையின் கண்களிலும் உச்சியிலும் குழி விழுந்து தேகம் இளைக்கும் பாலை கக்கும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மாத்திரை தோஷம் 9க்கும் கொடுக்க குணமாகும்.

கணரோகங்கள் (8)

காரணம் : - தாய் தந்தைகளின் நாதவிந்துக்குள் அடங்கிய வாதபித்த சிலேஷ்மங்களால் உண்டாகி கருப்பாசயத்து சிசுவைப் பற்றி விருத்தியை அடைவதால் கணரோகங்கள் உண்டாகின்றன.

பொதுலக்ஷணம் : தாபனம், வெளிசுரம், உட்சுரம், மயக்கம், சரீரவாட்டம், மார்புவீக்கம் காணும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	மூலகணம்	வயிற்றுக்கடுப்பு சீதரத்தம் விழுதல்
2.	சூலிகணம்	இருமல், மேல்மூச்சு காணும்
3.	வறள் கணம்	தேகம் வறளல், இருமல் காணும்
4.	சுழி கணம்	கண் சொருகுதல், அலறுதல், சுரம் கைகால் சீதளம்
5.	கழி கணம்	ஜலம் பால் சீதம் அல்லது மலம்போல் பேதி சீதளம்.
6.	தேரை கணம்	நாபி புண், உட்சுரம், சரீர வாட்டம்
7.	மகா கணம்	புரங்கை கால் முகம் மினுக்கும், தேகம் வெதுப்பும், விழி வெளுக்கும், நாக்கு உதடு புண்ணாகும்.
8.	ஆமகணம்	தேகம் வெதுப்பும், கண் விழியாது, கால் சீதளம், சீறியழும்.

மருந்து : - வெங்காய எண்ணெய், வெந்திய எண்ணெய், கணத்தெண்ணெய் முதலியவைகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

கிரந்திரோகங்கள் (11)

காரணம் : - பகந்தர விரண ஸ்தானங்களிலாவது மற்றைய ஸ்தானங்களிலாவது சிலேஷ்மம் அதிகரிப்பதால் உண்டாகும்.

பொதுலக்ஷணம் : குத்தல், அதிரல், எரிச்சல், நமைச்சல் காணும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	கருங்கிரந்தி	கீழ் உதடு கைகால் கறுப்பு, குரல் கம்முதல், மூர்ச்சை, வயிறு உப்பல் வலி, தேக வெதுப்பு, முலை உண்ணாது.
2.	செங்கிரந்தி	பிள்ளை பிறந்தவுடனே தொண்டைக் கட்டி பூனை குரல் போல் அழும், மலஜலக்கட்டு, கைகால் சிவப்பு, வயிறு உப்பல்.
3.	ரத்தகிரந்தி	ரத்த தாதுவின் கெடுதியால் கிருமிகள் கண்டு, நரம்பு மாமிசம் இவைகளை அனுசரித்து உண்டாகி அதி எரிச்சலை காணும். உடைந்தால் உஷ்ணமான ரத்தம் வடியும்.
4.	மேதோகிரந்தி	சருமம் மாமிசம் இவைகளில் வாயு சேர்ந்து உண்டாகி வெண்மையாயும் மினிமினிப்பாயுமிருக்கும் உடைந்தால் சிவப்பு கருப்பு வெண்மை நிறமான குழம்பாய் வடியும்.
5.	மாமிசகிரந்தி	நரம்புகளால் சூழப்பட்டு பெரிசாயும் மினுமினுப்பாயும் கெட்டியாயுமிருக்கும்.
6.	அஸ்திகிரந்தி	எலும்புகள் நொறுங்குவதாலுண்டாகி பருத்து உயருவதும் தணிவதுமா யிருக்கும்.

7.	நரம்பு கிரந்தி	ரத்ததாது அடைப்படுவதால் வாயு ரத்த நரம்புகளை சுட்கித்து முடக்குகளில் நரம்புகளை வெளியாக்கும்.
8.	விரணகிரந்தி	மாமிச தாதுகளின் மாமிசத்தில் வாயு சேர்ந்து கருப்பு நிறமுள்ள ரத்தமுண்டாகி உலர்ந்து ரணங்களாகி எரிச்சல் தினவு காணும்.
9.	வாத கிரந்தி	கருப்பு நிறமாயும் உயருவதும் அமங்கு வதுமாயிருக்கும். அதிரல், குத்தல் காணும் உடைந்தால் சுத்தரத்தம் வடியும்.
10.	பித்தகிரந்தி	மஞ்சள் சிவப்பு நிறமாயும் அதி எரிச்சலாயும் இருக்கும். உடைந்தால் உஷ்ணமான ரத்தம் சீழ் வடியும்.
11.	சிலேஷ்மகிரந்தி	வெண்மையாயும் கனமாயும் இருக்கும். உடைந்தால் சீழ் வடியும்.

மருந்து : சடாக்ஷர செந்தூரம், உலகோத்தம செந்தூரம், ஆனந்த ரசவினோத சூர்ணம் முதலிய அநேக மருந்துகளை பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

வாதம், பித்தம், சிலேஷ்மம், ரத்தம், மேதோதாது, இவ்வைந்தால் உண்டாகின்ற கிரந்திகள் சாத்தியம். கண்டம், வயிறு மர்ம ஸ்தானம் இவ்விடங்களில் கிரந்திகள் கண்டால் அசாத்தியம்.

கர்ணரோகங்கள் (25)

காரணம் : வாதாதிகள் காதுக்குளுள்ள நரம்புகள் ரத்தம் இவைகளில் வியாபிப்பதாலும், சில கருவியைக் கொண்டு காதுக்குள் குடைவதாலும் உண்டாகும்.

பொது லக்ஷணம் : காதுக்குள் வீக்கம், எரிச்சல், குத்தல், வேதனை, இரைச்சல், நீர்வடிதல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1	கர்ணபால கஷ்கம்	வாயு காதுக்குளுள்ள நரம்புகளில் சேர்வதால் நெற்றி உலர்ந்து கஷ்கிக்கும்.
2.	கர்ணலிகியம்	காதுக்குளுள்ள ரத்தம் சிலேஷ்மத்துடன் சேர்ந்து கிருமிகளுண்டாகிறதினால் சிறு கொப்பளங்கள் கண்டு அதி வேதனை செய்யும்.
3.	துக்கவர்த்தனம்	காது குத்தும்போது காதின் நரம்பில் தெரியாமல் குத்துவதால் வீக்கம் அதிவேதனை உண்டாகும்.
4.	கர்ணோன் மந்தம்	வாதமும் சிலேஷ்மமும் காதில் அதிகரித்து வீக்கம், வேதனை, மந்தம் உண்டாகும்.
5.	கர்ணோற் பாதம்	அதிகனத்த காதணிகள், ரத்த பித்த ரோகம் இவைகளால் காதுக்குள் சிறிதும் பெருதுமான கொப்பளங்களுண்டாகி வீக்கம், ரத்தம், எரிச்சல், வேதனை உண்டாகும்.
6.	கர்ணபரி போடகம்	காதுக்குள் வாயு அதிகரித்து சிறு வீக்கத்துடன் கொப்பளத்தை உண்டாக்கி அதிவேதனை செய்யும்.
7.	கர்ண தந்திரிகா	காதுக்குள் சீழை உண்டாகி வெளியில் ஒழுகும்.
8.	கர்ண வித்திரதி	சில கருவியைக் கொண்டு குடைவதினால் காதில் புண்ணாகி வித்திரதிக்கட்டியின் லக்ஷணத்தை உண்டாக்கும்.
9.	கர்ண பிதாரிகா	காதில் திரிதோஷத்தால் ஒரு சிறு கிழங்கைப் போல மாமிசம் உண்டாகி, வீக்கம், குரும்பி முடங்குதல், மரத்தல், அதிதேனை உண்டாக்கும்.

10.	கர்ணபிப்பலி	காதுக்குள் ஒன்று அல்லது பல திப்பிலி போல் மாமிசமுண்டாகி அதிவேதனை செய்யும்.
11.	கர்ணகூசிகா	காதுக்குள் வாயு, சேர்ந்து குரும்பை முடக்க செய்து அதி வேதனை யுண்டாக்கும்.
12.	கர்ணாற்புதம்	காதுக்குளெல்லாம் ஏகமாய் வீக்கம் உண்டாகி துர்க்கந்தம் அதிவேதனை, செவிடு செய்யும்.
13.	கர்ணாரசோற் புதம்	மூலரோகத்தைப் போல அதிவேதனை காதில் மூலத்தில் கண்டு செவிடு துர்க்கந்தம் உண்டாக்கும்.
14.	கர்ணசோவை	காதில் அதி வீக்கம் மாத்திரம் காணும்.
15.	கர்ணகண்டு	காதில் சிலேஷ்மம் அதிகரித்து சதாகாலமும் நமைச்சல் காணும்.
16.	கர்ணபூதி	காதில் பித்தம் அதிகரித்து சிலேஷ்மத்தை கெடுத்தி குரும்பியின் சருமத்தில் அதிநோவு, மாறாத ஜலம் வடிதல்.
17.	பிரதிநாகம்	வாயு அதிகரித்து சிலேஷ்மத்தை உலர செய்து அதிக நோவுடன் சத்தங் கேட்கும்.
18.	பரதிரியம்	வாயு சிலேஷ்மத்தோடு சேர்ந்து சத்த நரம்புகளில் வியாபித்து நாதத்தை கொஞ்சம் கெடுதி செய்வதால் கொஞ்சங் கேட்கும்.
19.	கர்ணநாதம்	சத்த நரம்புகளில் வாயு சேர்ந்து தாதுக்குள் பலவித நாதங்கள் உண்டாகும்.
20.	ரத்த கர்ண சூலை	காதுக்குள் வீக்கம், எரிச்சல், குத்தல், அதிநோவு, உண்டாக்கும்.
21.	வாதகர்ணசூலை	காதுக்குள் குச்சி முதலியவைகளைக் கொண்டு குடைவதால் திரி தோஷங்கள்

		அதிகரித்து நரம்புகளில் சேர்ந்து அதிவேதனை குத்தல், காதுக்குள் பூச்சிகள் பறப்பது போல தோற்றுதல்.
22.	பித்தகர்ண சூலை	காதுக்குள் வீக்கம், எரிச்சல் நோவு, சீதள ஜலம் வடிதல்.
23.	சிலேஷ்மகர்ண சூலை	வெண்மை நிறமாயும் குழம்பாயும் ஜலம் வடியும், சிரசு பிடரி தாடை கனத்தல், நமைச்சல், வீக்கம்.
24.	திரிதோஷகர்ண சூலை	கரம், கேளாமை, வீக்கம் காணும்.
25.	கர்ணகிருமி	காதுக்குள் திரிதோஷங்கள் அதிகரித்து கிருமிகள் உண்டாகி, அதி வேதனை செய்யும்.

மருந்து : காதுக்குள்ள நரம்பு முதலிய சகல விஷயங்களையும் சரீமவிபவக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் சொல்லப்பட்ட ரசானந்த சஞ்சீவி எண்ணெய், முசறுமுட்டை எண்ணெய், அமர்தவல்லி தயிலம் முதலியவைகள் உபயோகிக்க குணமாகும்.

கர்ண சூசிகை, கர்ணபிப்பலி, கர்ணபிதாரிகா இவைகள் அசாத்தியம் : மற்றவைகள் சாத்தியமாம்.

* தந்தரோகங்கள் (31)

காரணம் : மீன், சீதளவஸ்து, பன்றி மாமிசம், அதிசூடான அன்னம், கரும்பு ரசம் இவைகளை அகாலத்தில் அதிவிசேஷமாக புசிப்பதாலும் தந்தசுத்தி செய்யாததினாலும், புகை பிடிப்பதாலும் உண்டாகும்.

* இதில் தாடை ரோகமும், தந்த மூலரோகமும் சேர்ந்திருக்கின்றன.

பொதுலக்ஷணம் : பற்களில் நோவு, குத்தல், ரத்தம் ஒழுகுதல், சிலுசிலுப்பு.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	தந்தசலனம்	வாயு தந்தங்களில் சேர்ந்து அவைகளை அசையச் செய்யும்.
2.	தந்தகராளம்	ஈறுகள் கெடுதி அடைவதால் பற்கள் வெளிப்புரத்தில் சாயும்.
3.	கிருமிதந்தம்	பற்களில் அதிநோவும் கிருமியும் ஈறுகளில் ரத்தமும் சீழும் காணும்.
4.	தந்தசியாவம்	வாயு பற்களில் சேர்வதால் பற்கள் கரிநிறம் அல்லது நீல நிறமாயிருக்கும்.
5.	தந்தகபாலிகா	பற்களின் தலையை கெடுக்கும்.
6.	தந்தசருக்கரா	பற்களின் நடுவில் சிலேஷ்ம மலத்தை அடைந்து வாயுவால் உலர்ந்து உதிரும்.
7.	அதிதந்தம்	பற்களின் நடுவில் ஒரு சிறு பல் முளைக்கும்.
8.	தந்தபேதம்	பற்களில் அதி நோவு, குத்தல் அசைவு.
9.	தந்தத்தாளனம்	பற்கள் பிளந்து போவது போல குத்தல் சீதள வஸ்துக்கள் பற்களுக்கு பட்டால் அதிவேதனை.
10.	தந்தஹரிஷம்	சீதள அல்லது புளிப்பு வஸ்துகள், காற்று இவைகள் பட்டால் அதிவேதனை மிக கூசுதல்.
11.	தந்த மகா சுஷிரம்	ரத்தபித்தத்தினாலுண்டாகி ஈறுகளில் வீக்கமும் சிரு துவாரங்களும் கண்டு ரத்தம், சீழ் வடியும், சுரம் காயும்.

12.	க்ஷததந்தமூலம்	பற்கள் அடிபட்டு முறியுதலாலும் அல்லது பிடுங்குதலாலும் உண்டாகி தாடை ஈறு இவைகளில் குத்தல், வீக்கம், நோவு, சுரம்.
13.	தந்தசுஷீரம்	ரத்த பித்தத்தினால் உண்டாகி ஈறுகளில் அதிவீக்கமும் சிறு துவாரங்களும் கண்டு ஜலம் வடியும்.
14.	தந்தவித்திரதி	திரிதோஷம், ரத்தம் இவைகளால் உண்டாகி பற்களின் சதைகளில் வீக்கங்கண்டு எரிவு, நோவு, ரத்தம் சீழ் வடிதல்.
15.	சிதாதம்	ரத்தமும் சிலேஷ்மமும் பற்களின் வேற்களில் சேர்ந்து உண்டாகி அவ்விடத்திய மாமிசத்தை கரைத்து துர்க்கந்த ரத்தம் வடியும், வேர்கள் வெளிக்குத் தெரியும்.
16.	உபகிருஷம்	பற்களின் வேர்களில் ரத்தபித்தம் வியாபித்து பற்கள் அசைதல், ஈறுவீக்கம், துர்க்கந்தம்.
17.	தந்தபுப்புடம்	2-3 பற்களின் மத்தியில் ஈறு வளர்ந்து அதி வேதனை செய்யும்.
18.	அதிமாமிசம்	பற்களின் வேர் சந்துகளில் நீண்ட கட்டிகள் உண்டாகி தாடைகளிலும் காதுகளிலும் அதிநோவு, சுரம்.
19.	தந்தவிதர்ப்பம்	பற்களின் வேர் சதை கரைந்து பற்கள் அசைதல், நோவுதல்.
20.	பித்ததந்தமூலம்	பித்தம் பற்களின் வேர்களில் சேர்ந்து வேர்களையும் அங்குள்ள ரத்தத்தையும் மஞ்சள் நிறமாக்கி அதி எரிச்சலைத் தரும்.
21.	வாததந்தமூலம்	வாயு பற்களின் வேர்களில் சேர்ந்து வேர்களையும் அங்குள்ள ரத்தத்தையும் கறுப்பாக்கும். காற்று புகுந்தால் கூசும்.

22.	சிலேஷ்ம தந்த மூலம்	சிலேஷ்மம் பற்களின் வேர்களில் சேர்ந்து வேர்களை வெளியாக்கி ஓயாது சீழை ஒழுக செய்யும்.
23.	திரிதோஷதந்த மூலம்	வாதாதி மூன்று தந்த மூலரோகங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாகும்.
24.	தாளுபாகம்	பித்தத்தால் உண்டாகி தாடைக்குள் ரணமாகி சீழ் ஒழுகும். அதிநோவு.
25.	தாளுசோஷம்	சுரம், வாதம், பித்தம், இவைகளால் உண்டாகி 1-2 தாடைகள் ஒடுக்கு விழுந்தது போலிருக்கும்.
26.	தாளுபிடகம்	வாதபித்த சிலேஷ்மங்களால் உண்டாகி தாடைகளுக்குள்ள மாமிசம் தடிப்பாகும். வெளிப்புறம் வீக்கம் காணும்.
27.	தாளாற்புதம்	தாடைக்குள் சீவந்த வடிவமான வீக்கம் காணும்.
28.	தாளுசம்ஹதி	தாடைக்குள் துர்மாமிசம் வளர்ந்து நிறையும்.
29.	தாளுகள கண்டிகா	தாடைவேரில் நீண்ட தடிப்பு உண்டாகி கோழைவிழும், மூக்கின் வழியாய் சாப்பிட்ட போஜனம் விழும், வாந்தி இருமல் காணும்.
30.	தாளுகச்சம்	சிலேஷ்மத்தால் உண்டாகி தாடையின் மத்தியில் தடிப்பு உண்டாகும்.
31.	தாளுபுப்புடம்	சிலேஷ்மம், மேதோதாது இவைகளால் உண்டாகி தாடைக்குள் மத்தியில் வீக்கம் உண்டாகும்.

மருந்து : பல், தாடை இவைகளின் வேர்கள் முதலிய அநேக விஷயங்கள் சரீர வியவக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து பிராணரக்ஷாமிர்த சிந்துவில் பிராயம்பட்டை களிம்பு முதலிய

அநேக மருந்து சொல்லியிருப்பதால் அவைகளை கொடுக்க குணமாகும்.

பற்களின் வேர் நுனிகளில் ரணமானாலும் சரி, சீழ் வடிந்தாலும் சரி, சருமமும் மாமிசமும் அழுகி விழுந்தாலும் சரி அசாத்தியம். இக்குணங்களில்லாவிடில் சாத்தியம்.

வாய்ரோகங்கள் (8)

பொதுலக்ஷணம் : வாயில் ரணம், நோவு, துர்கந்தம் உண்டாகும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதமுகபாகம்	வியான வாயுவினால் வாயிக்குள் சிவப்பான ரணம் உண்டாகி உதடு உப்புவதும் நாக்கு கனத்து வெளுத்து வெடிப்பதும், வாயானது முள்ளு பொத்துக் கொண்டதுபோல் அருகுவதுமாக இருக்கும்.
2.	பித்தமுகபாகம்	பித்தத்தினால் வாயிக்குள் ஆவியைப்போல் புகை எழும்புதல், நோவு.
3.	சிலேஷ்மமுக பாகம்	கபத்தினால் நாக்கில் ரணம் உண்டாகி தினவும் வாயிலினிப்பும் காணும்.
4.	திரிதோஷமுக பாகம்	வாதாதி மூன்று முகபாக ரோகங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் காணும்.
5.	ஊர்த்துவகுதம்	அபானவாயு மலஜலாதிகளில் தோய்ந்து மேல் நோக்கலால் வாயில் துர்க்கந்தம் உண்டாகும்.
6.	கண்டாற்புதம்	ரணம் கண்டத்திலுண்டாகி கபாலத்தில் அதன் வேகம் சேர்வதால் அங்கிருக்கும் கபம் கறுத்து அல்லது வெளுத்து ஜலமாய் நாசி அல்லது தொண்டை வழியாக வடியும்.

7.	பூத்தியாசியம்	நெஞ்சில் துர்க்கந்தம் பற்கள் கறுப்பு-நோவு.
8.	ரத்தமுகபாகம்	பித்தத்தினால் வாய்க்குள் ஆவியைப் போல் புகை, வாய் ரத்தம் போல் சிவந்த நிறமாயிருக்கும்.

மருந்து : வேம்பாடம்பட்டை எண்ணெய், நட்செத்திர மாணிக்ககிருதம், சடாக்ஷர செந்தூரம் முதலிய அநேக மருந்துகளை பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

ஊர்த்துவகூதம் கஷ்டத்தின் மேல் சாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

ஜிக்வா ரோகங்கள் (6)

பொதுலக்ஷணம் : நாக்கில் வீக்கம், மரத்தல், தடித்தல், அருகுதல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	ஜிக்வாகஜகம்	பித்தம் சிலேஷ்மம் இவைகளால் உண்டாகி நாக்கின் அடியில் வீக்கம் கண்டு நாக்குத் தடித்து மரத்து விடும்.
2.	உபஜிக்வா	உண்ணாக்கில் வீக்கம் கண்டு மரத்து விகுத்து தினவு நோவு உண்டாகி இருமல் அருகுதல் காணும்.
3.	அதிஜிக்வா	அடிநாக்கின் கீழ் தடித்து வீங்கி நுனி நாக்கைப் போல் கண்டு மரத்து விகுத்து பிறகு சிறு கொப்பளங்கள் எழும்பி தினவு நோவுகண்டு சூடான நீர் வாயில் வடியும்.
4.	பிதஜிக்வா	நாக்கு முழுவதும் சிவப்பாகி மாமிசநிற சிறு கொப்பளங்கள் கண்டு நாக்கில் மழுங்கிய முள்ளுகள் நிறைந்தது போலிருக்கும்.

5.	வாதஜிக்வா	நாக்கு முற்றிலும் வெடிப்பு கண்டு முள்ளுகள் தைத்தது போல அருகுதல், மரத்தல் காணும்.
6.	சிலேஷ்ம ஜிக்வா	நாக்கு முழுவதும் இலவ முள்ளுகளைப் போல் தடிப்புகண்டு வெளுத்து கொப்பளங்களாகி நோவும்.

மருந்து : நட்செத்திர மாணிக்க கிருதம், வேம்பாடம்பட்டை எண்ணெய் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும். நாக்கின் உறுப்புகளையும் தொழில்களையும் சரீர வியவக்ஷத சாஸ்திரத்தில் காண்க.

உபஜிக்வா, ஜிக்வாலஜகம் இவ்விரண்டும் கஷ்டத்தின் மேல் சாத்தியம் மற்றவைகள் சாத்தியமாம்.

கண்டரோகங்கள் (18)

காரணம் : மீன், தளவஷ்து, பன்றிமாமிசம், அதிக சூடான அன்னம், இவைகளை அகாலத்தில் அதி விசேஷமாக புசிப்பதாலும், தந்தசுத்தி செய்யாமலிருப்பதாலும், புகை பிடிப்பதாலும் வாதாதிகள் அதிகரித்து முகத்தின் 7 தாதுகளில் பரவி உண்டாகின்றன.

பொது லக்ஷணம் : - கழுத்தின் உட்புறத்தில் வீக்கம், சுவாச அடைப்பு சுரம், அதிவேதனை.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	கண்டசாலிகம்	கழுத்துக்குள் வீக்கங்கண்டு அதன் மேல் நெல்முள்ளுகளைப் போல் முள்ளுகள், அதிவேதனை.
2.	துண்டகேரிகா	கழுத்துக்குள் வீங்கி மினிமினித்து வேதனை செய்யும்.

3.	களபிருந்தம்	கழுத்துக்குள்ளும் வெளியிலும் துர்மாமிசம் வளர்ந்து கழுத்தின் துவாரம் அடைக்கப்பட்டு சுரம் காயும்.
4.	அலாபுகம்	கழுத்துக்குள் சுரைப்பிஞ்சியைப் போல துர்மாமிசங்கள் வளர்ந்து சுவாச அடைப்பும் வேதனையும் காணும்.
5.	கள ஒகம்	கழுத்தின் உட்புறமும் வெளிப்புறமும் அதி பயங்கரமான வீக்கங் கண்டு சுரம், தலை பாரம், அதிவேதனை காணும்.
6.	கண்டவாத ரோகணி	கழுத்துக்குள் துர்மாமிச முளைகள் வளர்ந்து நாக்கை அசைய ஒட்டாமலும், கழுத்திலும், காதிலும் அதிநோவும் காணும்.
7.	கண்டபித்த ரோகணி	கழுத்துக்குள் துர்மாமிசம் வளர்ந்து சுரம், அதிநோவு மேல்புறத்தில் தொடக்கூடாத வேதனை காணும்.
8.	கண்ட சிலேஷ்ம ரோகணி	கழுத்துக்குள் துர்மாமிசம் வளர்ந்து சிற்றாமணக் கெண்ணையைப் போல் ஜலம் சதாகாலமும் வாயில் இருந்து வடியும்.
9.	கண்டரத்த ரோகணி	கழுத்துக்குள் துர்மாமிசம் வளர்ந்து கரிநெருப்பைப்போல் கொப்பளங்கள் கண்டு செவிக்குள் அதிநோவு உண்டாகும்.
10.	கண்ட திரிதோஷ ரோகணி	கண்டவாதாதி ரோகணிகளின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாகும்.
11.	சுரக்கினி	தாடை, கழுத்து இவைகளில் உட்புறத்தில் ரணப்புடைகள் கண்டு தொனியை அடை பட்டு கபம் விழும், மேல் மூச்சு காணும்.
12.	சதக்கினி	கழுத்துக்குள் துர்மாமிசம் வளர்ந்து கழுத்து வீங்கி சுரம், தலைவலி அதிவேதனை காணும்.

13.	களவித்திரதி	கழுத்து முற்றிலும் அதிசீக்கிரத்தில் வீங்கி வேதனை செய்யும்.
14.	களாற்புதம்	கீழ் கழுத்து, நாக்கின் முடிச்சு இவைகளில் வீங்கும், நோவு இராது. உடைத்தால் தடிப்பான ரத்தம் வடியும்.
15.	மேதோ கள கண்டம்	கழுத்துக்கு உட்புறமும் தாடைக்குள்ளும் கறுப்பு நிற ரணப்புடைகள் கண்டு கோழை விழும். சரீரம் ஸ்துலிக்கும்.
16.	வாதகள கண்டம்	தாடை கழுத்து இவைகளின் மத்தியில் துர்மாமிசம் வளர்ந்து தொங்கும்.
17.	பித்தகள கண்டம்	தாடை கழுத்து இவைகளின் உட்புறங்களில் கறுப்பு நிற ரத்தப்புடைகள் கண்டு அதிவேதனை செய்யும்.
18.	சிலேஷ்மகள கண்டம்	தாடை கழுத்து இவைகளின் உட்புறங் களில் வெண்மை நிற ரணப் புடைப்புகள் கண்டு அதிநமைச்சல் காணும்.

கண்டமாலை என்பது கண்டத்தைச் சுற்றி மாலையைப் போல் சிறிதும் பெருதுமான கட்டிகள் உண்டாகி வெடித்து புண்ணாகி சீழ்க்கட்டிப் புரையோடும்.

மருந்து : கண்டத்திலுள்ள ஸ்தானத்தை சரீரவியக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் சொல்லப்பட்ட காலபயிரவ எண்ணெய், குஷ்டகுடாரி எண்ணெய் முதலியவைகள் செய்து கொடுக்க குணமாகும்.

3-5-11-12-14-16-17-18 இந்த நம்பர்களுள்ள கண்டரோகங்கள் கஷ்டத்தின் மேல் சாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

*உதடு ரோகங்கள் (11)

காரணம் : பன்றி மாமிசம், மீன், சீதளவஸ்து அதிசூடான அன்னம் இவைகளை அகாலத்தில் அதிவிசேஷமாக புசிப்பதாலும், தத்தசுத்தி செய்யாமலிப்பதாலும், புகை பிடிப்பதாலும் வாதாதிகள் அதிகரித்து முகத்தின் 7 தாதுக்களில் சேர்ந்து உண்டாகின்றன.

பொது லக்ஷணம் : - உதட்டில் வீக்கம், தினவு, எரிச்சல், மரத்தல் காணும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	மேதோஷ்டம்	உதடுகளின் மேல் மினுமினுப்பு தினவு, வீக்கங் காணும்.
2.	சலாற்பு தோஷ்டம்	உதடுகளில் வாதம் சிலேஷ்மம் சேர்வதால் சிறு கொப்பளங்களைப் போல் மாமிசங்கள் வளரும்.
3.	க்ஷதோஷ்டம்	உதடுகளில் காயங்கள் உண்டாகுமாகில் அவ்விடங்களில் ரணமாகி வெடிப்பு, தினவு, காணும்.
4.	கண்டோஷ்டம்	வாயு உதடுகளில் சேர்ந்து வெடிப்பை உண்டாக்கும்.
5.	மாமிசோஷ்டம்	உதடுகளில் சிவந்த ரணம் உண்டாகி கிருமிகள் விழும்.
6.	வாதோஷ்டம்	உதடுகளில் மரத்தல், கருக்கான வெடிப்புக் காணும்.
7.	பித்தோஷ்டம்	உதடுகளில் மஞ்சள் நிறமான வெகு சிறு கொப்பளங்கள் காணும்.
8.	சிலேஷ் தோஷ்டம்	உதடுகளில் சீதளம், மிக வியாபிப்பதால் வீக்கம், சிறு கொப்பளங்கள், அதிநோவு காணும்.

* உதட்டுக்கு ஒக்ஷ்டம் என்று பெயர்

9.	அற்புதோஷ்டம்	உதடுகளில் சிவந்த நிறமான பெரியதும் நீண்டதுமான வீக்கங்கள் காணும்.
10.	சந்நிபா தோஷ்டம்	உதடுகளில் வெடிப்பு, பலவித கொப்பளங்கள், மரத்தல் சர்வகாலமும் ஜலம் வடிதல், துர்கந்தம் காணும்.
11.	ரத்தோஷ்டம்	உதடுகளில் ரத்தம் பூசினதாயும் அவ்விடத்திலிருந்து ரத்தம் கக்குவதாயு மிருக்கும்.

மருந்து : வேம்பாடம்பட்டை எண்ணெய் முதலிய அவுஷதங்கள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

நாசிகாரோகங்கள் (18)

காரணம் : அதி ஸ்திரீ சையோகம், அகால நித்திரை, சீதள காற்று, பனி இவைகளால் வாதாதிகள் அதிகரித்து நாசியில் பரவி உண்டாகும்.

பொது லக்ஷணம் : - நாசியில் துர்க்கந்தம், சுவாசயடைப்பு, தலைவலி காணும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	நாசிகாபடகம்	பித்த சிலேஷ்மங்களால் உண்டாகி சளி வறண்டு கட்டியாய் விழும்.
2.	சிறாயபீனசம்	ஈருள்ளிக்கூட்டைப் போல் உண்டாகி துர்க்கந்தத்துடன் விழும்.
3.	நாசாரசம்	நாசியின் மூலத்தில் துர்மாமிசம் வளர்ந்து அதி வேதனை செய்யும்.
4.	நாசிகாற்புதம்	நாசிக்குள் வீங்கி அதி வேதனை செய்யும்.

5.	பூதிநாசிகா	வாதாதிகள் தாடையின் வேர்களில் தங்குவதால் வாய் நாசிகளில் துர்க்கந்தங் காணும்.
6.	நாசிகாதீபிகை	நாசி நெருப்பைப் போல் சிவப்பாகி சகிக்கக்கூடாத வேதனையும் உஷ்ணமான சுவாசம் விடுதலும் காணும்.
7.	அபீநசம்	சிலேஷ்மம் அதிகரித்து உண்டாகி சுவாசம் விடும்போது குருகுருவென்று சத்தமும் அதிவேதனையுங் காணும்.
8.	நாசிகாசிராவம்	சிலேஷ்மம் அதிகரித்து உண்டாகி நாசியிலிருந்து சுத்த ஜலம் வந்து கொண்டேயிருக்கும்.
9.	கிராணபாகம்	பித்தம் அதிகரித்து நாசியின் நுனிப் பக்கங்களின் உட்புறத்தில் சிவப்பிப்பதால் எரிச்சல் நோவு காணும்.
10.	நாசிகாநாகம்	சிலேஷ்மம் அதிகரித்து வாயுவுடன் சேர்ந்து நாசிதுவாரம் அடைப்படுவதால் உசுவாசம் நிசுவாசத் தடங்கள் காணும்.
11.	நாசிகாசோஷம்	நாசிகளில் வாயு சேர்ந்து உண்டாகி பக்கத் தண்டுகளில் குத்தலும் மேல் மூச்சும் காணும்.
12.	புரிசட்சவபீநசம்	மூக்கு, வாய், கண், காது இவைகளில் வாயு சேர்ந்து உண்டாகி சதா காலமும் தும்மல் காணும்.
13.	ரத்தபீநசம்	நாசிகளிலிருந்து ரத்தம் சிவந்த சளியுடன் வரும்.
14.	துஷ்டபீநசம்	நாசிகளிலிருந்து சிவப்பு வெளுப்பு நிறமான சளி உருண்டையாக விழும்.
15.	வாதபீநசம்	புருவங்களில் பூச்சி ஊருவதைப் போல் தோன்றி நாசி, காது, சிரசு, பல் இவைகளில் மிக நோவும்.

16.	பித்த பீநசம்	நாசிக்குள் கொப்பளங்கண்டு மஞ்சள் சிவப்பு நிற சளி விழும்.
17.	சிலேஷ்மபீநசம்	நாசியிலிருந்து வெளுப்பான சளி விழும், இருமல், இரைப்புக் காணும்.
18.	திரிதோஷபீநசம்	வாதாதி பீநசங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாகும்.

மருந்து : பீநச நாசத்தைலம் மார்த்தான்ட பயிரவத் தைலம் முதலியவைகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

நாசியின் உறுப்புகளும் அவ்வுறுப்புகளின் தொழில்களும் சரீர வியவக்ஷத சாஸ்திரத்தில் காண்க.

நேத்திரரோகங்கள் (94)

காரணம் : கர்ப்பஸ்திரீகள் கிருமி, கிருமி சம்மந்தமான வஸ்துகளை புசிப்பதாலும் வெய்யிலில் திரிவதாலும் வாதாதிகள் அதிகரித்து மூன்று நரம்புகளின் வழியாக சிரசில் பரவி கண்களில் சேர்ந்து கண், இமை, வெள்விழிச்சந்தி, வெள்விழி, கருவிழி பாவை இவைகளைப் பற்றி 94 ரோகங்கள் உண்டாகின்றன.

பொது லக்ஷணம் : - கண்களில் வீக்கம், நீர்வடிதல், கடுப்பு, சிவப்பு எரிவு காணும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	நிர்சிராவம்	கண் நரம்புகளில் வாயு சேர்ந்து உண்டாகி கரு விழியிலிருந்து சிவந்த ஜலம் ஒழுகும். வீக்கம் நோவு காணும்.

2		கபசிராவம்	கண் நரம்புகளில் சிலேஷ்மம் சேர்ந்து உண்டாகி பிசுபிசுப்பாயும், தடிப்பாயும் வெண்மை நிறமாயும் ஜலம் வடியும்.
3.		உபநாகம்	சிலேஷ்மத்தால் வெள்விழிச் சந்தியில் கட்டி உண்டாகி அதி வேதனை செய்யும்.
4.		அலஜி	கரு விழிக்குள் வீங்கி, கண்ணில் எரிவு, நோவுகுத்தல் வீக்கங்காணும்.
5.		ரத்தசிராவம்	கண் நரம்புகளில் ரத்தஞ்சேர்ந்து உண்டாகி சூடான சிவந்த ஜலம் வடியும்.
6.	கண்சந்தி ரோகங்கள் - 9	கிருமிக்கிரந்தி	கருவிழி, வெள்விழி இவைகளின் சந்தியில் ரணங்களாகி கிருமி, நோவு, பீளை உண்டாகும்.
7.		பூயாலஜம்	வீக்கமும், நோவுமுள்ள சிறு சிறு கட்டிகள் வெள் விழிச்சந்திகளில் கண்டு ஒயாத பீளையும் வேதனையும் உண்டாகும்.
8.		பூயசிராவம்	கண்களின் நரம்புகளில் திரிதோஷங்கள் வியாபித்து கருவிழியைப் பற்றி சிவந்தபீளை சாரும்.
9.		பருவணி	பயிறு அளவாக கட்டிகள் வெள்விழிச் சந்திகளில் கண்டு உடைந்து எரிவு குத்தல் காணும் ரத்தம் வடியும்.
10.		ஆஜிகம்	கருவிழியில் ரத்தஞ்சேர்ந்து ஆட்டினது புழுக்கையைப்போல் ரண கொப்பளங் கண்டு அதைச் சுற்றிலும் சிறு கொப்புளங்கள் நிறையும்.

11	கருவிழி ரோகங்கள் - 5	பாகாத்திய யஜசுக்கிலம்	கருவிழியிலுள்ள ரத்தத்தில் வாதாதிகள் சேர்ந்து வெண்மையாக்கி அவ்விடம் மேகம் கம்மியது போல் படலம் கம்மும், இமையுப்பும் கண் சிவந்து வீங்கும்.
12.		க்ஷதசுக் கிலம்	பார்வை கருவிழி இவைகளில் காயமாகி ரணங்கண்டு குழி விழும், புகை ஓடும்.
13.		சுத்தசுக் கிலம்	கருவிழியின் மேல் வெளுப்பு காணும்.
14.		சிராசுக் கிலம்	கருவிழியில் ரத்தத்துடன் பீளை சாரும். ரத்தந் தடிப்பாய் வடியும்.
15.	வெள்விழி ரோகங்கள்	பிஷ்டகம்	வெள்விழி முற்றிலும் மாவைக் கரைத்து தெளித்தது போல் புடை காணும்.
16.		அருச்சுனம்	வெள் விழிமேல் படலங்கண்டு துளித் துளியாக ரத்தம் வடியும்.
17.		சிநாயுவார்மம்	வெள்விழிமேல் படலம் கண்டு கண்களில் வீக்கங் காணும்.
18.		பலாஜகிர திதம்	வெள்விழி மேல் உயரமாக சதை வளர்ந்து மினி மினிக்கும்.
19.		அதிமாமி சார்மம்	வெள்விழிமேல் கறுப்பு நிறமான பெரியதாக மாமிசம் வளரும்.
20.		சிராபிடகம்	கறுப்பான மிகச் சிறு கொப்பளங்கள் வெள்விழி நரம்பின்மேல் கண்டு எரிச்சலைத் தரும்.
21.		சோணி தார்மம்	ரத்தத்தை ஒத்த புடைகள் வெள்விழி மேல் கண்டு சதையின் மேல் சதை வளர்ந்தது போல் இருக்கும்.

22.		பிரஸ்தாரி யார்மம்	வெள்விழிமேல் படலம் கண்டு கறுப்பு சிவப்பு நிறமுடைய பீளையைச் சாரும்.
23.		சிரோத பாதம்	வெள்விழிமேல் சிவந்த ரணங்கண்டு எரிவு வீக்கம், நீர்க்கம்மல் காணும்.
24.		சிரா ஹரிஷம்	எரிவு நீர்க்கோவைக் கண்டு பார்வையைக் கெடும்.
25.		சிரா ஜாலம்	வெள் விழிகளின் நரம்புகளில் மிக வேதனை காணும்.
26.		கந்தகம்	வெண்மை கறுப்பு மஞ்சள் நிறமுள்ள புடைகள் வெள்விழிகளின் மேல் கண்டு சுரம், பேதி தாகம், வலி காணும்.
27.		சுக்கி லார்மம்	வெண்மையான புடைகள் வெள்விழிமேல் கண்டு பரவும்.
28.	இமை ரோகங்கள்	போதகி வர்த்தமம்	இமை நரம்புகளில் சிலேஷ்மம் சேர்ந்து மிக சிறு கட்டிகள் உண்டாகும்.
29.		வாதாஹத வர்மம்	கண்கள் மூடும்போது வாயு சேர்ந்து இமைகள் இறுகிக் கொள்ளும்.
30.		கும்பிகா வர்மம்	இமைகளின் நரம்புகளில் பித்தம் சேர்ந்து நரம்புகள் தடிப்பாகி மிக சிறுகட்டிகளாக உட்புறத்தில் காணும்.
31.		கிருச் சிரோன் மீலனவர்த் தமம்	இமைகளின் நரம்புகளில் வாயு சேர்ந்து உண்டாகி தூங்கி எழுந்தவுடனே கண் திறக்கக் கூடாமை, கண்களில் உறுத்தல், நீர்க்கம்மல்.

32.		அருங்நிமேஷ் வர்த்தமம்	இமைச்சந்திகளில் வாயு சேர்ந்து இமைகளை இடைவிடாமல் ஆட்டி விக்கும்.
33.		சிக்தா வர்த்தமம்	இமைச்சந்தி நரம்புகளில் வாயு சேர்ந்து கண்களுக்கு தோற்றாத மிக சிறு கொப்பளங்கள் உண்டாகும். இமைகளில் உறுத்தல் காணும்.
34.		கர்த்த வர்த்தமம்	கட்டிகள் இமைச்சந்துகளிலுண்டாகி பழுத்து உடையும்போது அவ்விடத்தில் சேற்றைத் தடவினது போலிருக்கும்.
35.		பக்ஷ்மை சாதம்	இமையின் முனைகளில் எரிவு கண்டு அவ்விடத்திய மயிர்களை உதிர்த்து அவ்விடம் மஞ்சள் நிறமாக்கும்.
36.		அஞ்சனை நாமிகா வர்த்தமம்	சிவப்பு நிறமாக மிக சிறு கட்டிகள் அதி நோவுதினவுடன் இமைகளின் முனைகளிலாது மத்தியிலாவது காணும்.
37.		அற்புத வர்த்தமம்	இமைகளின் ஓரங்களில் தடிப்புகள் கண்டு பிறகு கட்டிகளாகி பருத்து கண்களின் வெளிப்புறத்தில் தொங்கி ஆடும்.
38.		கிலிஷ்ட வர்த்தமம்	இமைச்சந்திகளில் சிவந்த வீக்கம் கண்டு பிறகு கட்டிகளாகி வெகு வேதனை செய்யும்.
39.		அலஜி வர்த்தமம்	கருவிழிக்கும் வெளிப்புறத்தில் சிவந்து கட்டிகள் கண்டு பெருத்து உப்பும்.
40.		பிசவர்த் தமம்	இமைகளில் வெளிப்புறத்தில் கட்டிகள் கண்டு உப்பலுடன் கனத்து சிறுதுவாரம் உட்புறத்தில் செய்துகொண்டு நீர்க்கம்மல்

			கண்ணில் சொல்ப வக்கிரகம் காணும்.
41.		குகூன வர்த்தமம்	குழந்தைகளுக்கு பல் முளைக்கும் போது கண்கள் வீங்கி சிவந்து குத்தல் காணும்.
42.		உச்சங்க வர்த்தமம்	குழந்தைகளின் இமைக்குள் சிவப்பு கறுப்பு நிற கொப்பளங்கள் காணும்.
43.		சகண வர்த்தமம்	இமைச்சந்திகளில் இலந்தைக் கொட்டை அளவாக கட்டிகள் கண்டு தினவு காணும்.
44.		பித்தொத் கிலிஷ்டம்	இமைச் சந்திகளில் சிவந்து எரிவு, குத்தல், நீர்க்கம்மல், நோவு காணும்.
45.		சியாவ வர்த்தமம்	இமைகளில் வீக்கம், நீர்க்கம்மல் அதிநோவு காணும்.
46.		திரிதோஷ கிலிஷ்டம்	கண்களை சிவந்த நிறமாகி கலங்கும்.
47.		கப கிலிஷ்டம்	இமைகளில் நீர்க்கம்மல், எரிவு, மரத்தல் காணும்.
48.		பகுள வர்த்தமம்	இமைகளில் துர்மாமிசம் நாளுக்கு நாள் வளர்ந்து இமைகளைப் பருக்கச் செய்யும்.
49.		ரத்த கிலிஷ்டம்	கண்கள் ரத்தம் போல் சிவந்த நிறமாகும்.
50.	திமிர ரோகங்கள் 6	அரிசோ வர்த்தமம்	இமைச்சந்துகளில் துர்மாமிசம் வளர்ந்து, கண்கள் சிவந்து எரிவு, நோவு, மரத்தல் காணும்.
51.		வர்த்து மோடரோதம்	இமைகள் வீங்கி கண்விழி மூடிக் கொள்வதும், இமை மயிர் முறைந்து விழிக்குள் குத்துவதுமாயிருக்கும்.

52.		ரத்ததிமிரம்	கண்சிவந்து பார்வையிலும் சிவப்பாகவே தோற்றும்.
53.		வாததிமிரம்	கண்கள் சிவந்து பார்வைக்குள் கொசு, கயிறு முதலியவைகளைப் போல் தோற்றும்.
54.		பித்த திமிரம்	பார்வைக்குள் மின்மினிப்பூச்சியும், ஊர்க்குருவியும் பறக்கிறது போலும், மின்னல் மின்னுவது போலும், மயிலிறகு போல் பல நிறமாகவும் தோற்றும்.
55.		சிலேஷ்ம திமிரம்	பார்வைக்குள் வெள்ளைப் புஷ்பம் சந்திரன், சங்கு இவைகள் குப்பல் குப்பலாக கிடக்கிறது போல் தோற்றும்.
56.		திரிதோஷ திமிரம்	பார்வைக்குள் வாதாதி திமிர்களின் லக்ஷணங்கள் காணும்.
57.		தொந்த திமிரம்	பார்வைக்குள் வாதபித்த திமிரங்களின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் காணும். இவ்வாறே, மற்ற 2 திமிரங்களையும் அறிய வேண்டும்.
58.	லிங்க நாரோகங்கள்	ரத்தலிங்க நாசம்	பார்வை ரத்தம் போல சிவந்து போகும். கண்களின் ஒளியும் பார்வையும் கெடும்.
59.		பித்தலிங்க நாசம்	கண்கள் கறுத்துப் போகும். பார்வை தெரியாது.
60.		வாதலிங்க நாசம்	கண்கள் சிவந்து போகும். எதிரிலுள்ள வஸ்துக்கள் தெரியாது.
61.		சிலேஷ்ம லிங்கநாசம்	விழிகளின்மேல் பல்லிமுட்டை சங்கு, சந்திரன், இவைகளைப்போல சதை வளரும்.

62.		திரிதோஷ லிங்கநாசம்	வாதாதி லிங்க நாசங்களின் லக்ஷணங்கள் காணும்.
63.	கண்காச ரோகங்கள் 6	தொந்த லிங்கநாசம்	வாதபித்த லிங்க நாசங்களின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் காணும். இவ்வாறே மற்ற 2 தொந்தங்களையும் அறிய வேண்டும்.
64.		ரத்தகாசம்	கண்கள் சிவந்து கருத்து பார்வையிலும் சிவப்பு கறுப்பாகவே தோற்றும்.
65.		வாதகாசம்	கண்கள் சிவந்து போகும். நேரிலுள்ள தீபம், சந்திரன் அநேகங்களாகவும் கனத்த வஸ்துவானது மெல்லிய உருவாகவும் தோற்றும்.
66.		பித்தகாசம் காசம்	கண்களில் நீல நிறமான பிரகாசமும், பார்வையில் சூரியன் சந்திரன் முதலிய வைகள் அநேகங்களாக தோற்றும்.
67.		சிலேஷ்ம காசம்	பார்வைக்குள் வெளுப்பைக்கண்டு சூரியன், தீபம் இவைகள் ஒளி மழுங்கி அநேக உருவங்களாக தோற்றும்.
68.		தொந்த காசம்	வாதபித்த காச லக்ஷணங்கள் ஒரே காலத்தில் காணும். இவ்வாறே மற்ற 2-தொந்தங்களையும் அறிய வேண்டும்.
69.	அபிஷ்ந்த ரோகங்கள்	திரிதோஷ பிஷந்தம்	வாதாதி காசங்களின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் காணும்.
70.		ரத்த பிஷந்தம்	கண்கள் சிவந்து போகும். சிவந்த ஜலமும் பீளையும் வரும்.
71.		வாதா	கண்களில் பீளை, நோவு, குத்தல் சீதள ஜலம் வடிதல் காணும்.

72.	சங்க கர ரோகங்கள் 7	பித்தா பிஷந்தம்	கண்களில் எரிவு, உஷ்ணஜலம் வடிதல், நேரிலுள்ளவைகள் மஞ்சள் நிறமாகத் தோற்றுதல் காணும்.
73.		சிலேஷ்மா பிஷந்தம்	கண்களில் நீர் சேர்வதால் கண்கள் வீங்கி தினவும் வெண்மையுமான பீளையும் சாரும்.
74.		வாதபரி யாகம்	கண்கள் சிவந்து வீங்கி நீர்க்கம்மல் நோவு, வக்கிர பார்வை உண்டாகும்.
75.		அன்னி யதோவாதம்	கண்கள் சிவந்து வீங்கி நீர்க்கம்மல், அதிநோவு காணும்.
76.		கட்காக்ஷி பாககம்	கண்கள் சுட்கித்து சிவந்து, எரிவு நோவு, அதிர்தல், மூடத் திறக்கக் கூடாமை.
77.		ஆம்லோஷி தம்	கண்கள் சிவந்து கறுத்து வீங்கி எரிச்சலுடன் ஓயாமல் ஜலம் வடியும்.
78.		சோபாக்ஷி பாகம்	கண்கள் சிவந்து வீங்கி நோவு, எரிவு, பிசுபிசுப்பான ஜலம் வடிதல் காணும்.
79.	ஏதிமந்த ரோகங்கள் 5	அக்ஷிபா காத்தியம்	கண்கள் வீங்கி நீர்க்கம்மல், எரிவு பீளை காணும், பார்வை கெடும்.
80.		அற்பசோ பாக்ஷி பாகம்	கண்கள் சிவந்து கொஞ்சம் வீங்கி நோவு எரிவு பிசுபிசுப்பான நீர்வடிதல் காணும்.
81.		அதாதி மந்தம்	கண்களில் ரணம் கண்டு பார்வை கெடும்.
82.		வாதாதி மந்தம்	கண், நெறி, புருவம் இவ்விடங்களில் மத்தையால் மத்தித்தல் போலும் செவிக்குள் இரைச்சலும் காணும்.

83.		பித்தாதி மந்தம்	கண்கள் வெகு சிவந்திருக்கும்.
84.		சிலேஷ் மாதிமந்தம்	வெள்விழி சுருங்கி குழி விழுந்து கருவிழி உயர்ந்து உப்பும்.
85.		ரத்தாதி மந்தம்	கண்கள் சிவந்து நோகும். கருவிழி ரத்தத்தால் மூடினது போல் தோற்றும். பல், தாடை, நெறி, மண்டை இவைகளில் வேதனை.
86.		கம்பீர ரோகம்	லிங்கநாச ரோகங்களில் வாயு அதிகரித்து கண் நரம்புகள் முடங்கி ஆழ்ந்து விட்டு பார்வையை கெடுக்கும்.
87.		நத்தாந்தம்	பகலில் பார்வை தெரிந்தும் இரவில் தெரியாமலும் இருக்கும்.
88.		இரசுவம்	பார்வை மறைந்துவிடும். ஆனால் கொஞ்சந் தெரியும்.
89.		நகுலாந்தம்	கண்கள் சிவந்து பீளை வடியும்.
90.	கம்பீர ரோகங்கள் 9	உஷ்ணவி தக்தம்	கண்களில் எரிவு, பார்வை பகலில் கொஞ்சமாகவும் இரவில் இல்லாமலும் இருக்கும்.
91.		பித்த வதக்தம்	கண்கள் மஞ்சள் நிறமாயிருக்கும்.
92.		ஆம்லவி தக்தம்	விழிகளில் வீங்கும் நமைச்சல் காணும்.
93.		ஆவுபசர்க் கிகம்	கண்களின் விழிகளில் பார்வை கெடும் அல்லது வைடூரியத்தின் நிறத்தைப் போல் தோன்றும்.

94.	தூம்பிரம்	நேரிலுள்ள வஸ்துகள் புகை நிறமாகவே தோன்றும்.

மருந்து : நேத்திரங்களின் உறுப்புகளையும் அவ்வுறுப்புகளின் தொழில்களையும் சரீர வியவக்ஷித சாஸ்திரத்தால் அறிந்து பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய அமிர்தவல்லித் தைலம், மகாமிருகாமலத் தைலம், கருஞ்செம்பைத் தைலம் முதலியவைகள் செய்து கொடுக்க குணமாகும்.

*சிரோ ரோகங்கள் (19)

காரணம் : அதி சையோகம், நித்திரை பங்கம், புகைப் பிடித்தல், பனியிலும் வெய்யிலிலும் திரிதல் இவைகளால் உண்டாகும்.

**பொது லக்ஷணம் : - சிரசில் பாரம், நோவு வாய்கசப்பு, குத்தல், கிரிகிரிப்பு காணும்.

** வியாதியுள்ளவர்களுக்கு வியாதி அனுசரித்துச் சென்ற காலம் (Duration of diseases) பிற தேசத்தின் உஷ்ண சீதள ஸ்திதி (Climate) இவைகளால் இந்த ரோக நிர்ணய சாரத்தில் சொல்லிய சகல பொது லக்ஷணங் களிலும் சில லக்ஷணங்கள் வித்தியாசப்படும். ஆனால் இன்ன ரோகமென்று தெரிந்து கொள்ள பிரதான லக்ஷணந்தான் அவசியம்.

* சிரோ ரோகங்களுடன் கபால ரோகங்களும் சேர்ந்திருக்கின்றன.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	அர்த்தபேத ரோகம்	சிரசில் நோவு ஒரு பக்கத்தில் கண்டு அந்தப் பக்கத்தின் காது அல்லது கண் கெடும். அன்றியும் அந்த நோவு 15-30 நாளுக்கு ஒரு தரம் அதிகரிக்கும்.
2.	சூர்யாவர்த்த ரோகம்	கண், புருவம், நெரி, நெற்றி இவைகளில் வாதம் பித்தத்துடன் சேர்ந்து உண்டாகி தினம் சூரியன் உதயமாகும்போது நோவு சிரசில் ஆரம்பிக்கும் சூரியன் சாய நோவும் சாந்தமடையும் சூரியன் வெய்யில் ஏற ஏற நோவும் பிரபலப்படும்.
3.	சங்கரோகம்	வாதமும் சிலேஷ்மமும் பித்தத்துடன் சேர்ந்து உண்டாகி 2 நெறிகளில் சிவந்த வீக்கத்தையும் சுரம், அதிநோவு, எரிவு, பிரவாயம் இவைகளையுமுண்டாகும்.
4.	சிரக்கம்ப ரோகம்	தலையின் நரம்புகளில் திரிதோஷங்கள் வியாபித்து தலையை நடுக்கச் செய்யும்.
5.	கிருமி தலைவலி	திரிதோஷத்தால் சிரசில் ரத்தம், மாமிசம் கரைந்து கிருமிகளுண்டாகி சகிக்கக் கூடாத வேதனை காணும்.
6.	உதிர தலைவலி	நடுராத்திரியில் அதிசுரம், கண் எரிவு மூர்ச்சை காணும்.
7.	வாத தலைவலி	வாயு அதிகரித்து நெறிகளில் வியாபித்து அதிரலை உண்டாக்கும். நெற்றி, கண், புருவம் இவைகள் இற்று விழுவது போல் தொறித்தலை உண்டாக்கும்.
8.	பித்த தலைவலி	புகை கம்மியது போல் சிரசில் உண்டாகும். கண் எரிவு, சுரம் மூர்ச்சை காணும்.
9.	சிலேஷ்ம தலைவலி	சர்வாங்கங்கடுத்தல், தலைபாரம் குத்தல், வாந்தி மூர்ச்சை காணும்.

10.	திரிதோஷ தலைவலி	வாதாதி தலைவலிகளின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் காணும்.
11.	தாருண ரோகம்	சிலேஷ்மவாதம் கபாலத்தில் வியாபித்து சரும பொட்டுகளை உதிரலாக்கும்.
12.	உபசீ ரிஷரோகம்	கபாலத்தில் வாயு அதிகரித்து கர்ப்ப ஸ்திரீக்கும், வயிற்றிலுள்ள சிசுவுக்கும் தலையில் வீக்கத்தை உண்டாக்கும்.
13.	அருூம்ஷிகை ரோகம்	பித்தம் அதிகரித்து கபால மூளையைக் கரைத்து கிருமி ரத்தம், கபம் இவைகளில் எதினாலாவது சிறு கொப்பளங்களை உண்டாக்கும்.
14.	மூர்த்த பீடக ரோகம்	சிரசின் உச்சியில் வாயுவால் வீக்கம் காணும்.
15.	சிரோவித்திரதி ரோகம்	கபாலத்தில் கபம் அதிகரித்து, வித்திரதிக் கட்டியைப் போல் வீக்கத்தை உண்டாக்கும்.
16.	சிரோற்புதரோகம்	கபாலத்தில் பித்தம் அதிகரித்து, வீக்கத்தை உண்டாக்கும்.
17.	இந்திரலுத்த ரோகம்	பித்தம் ரோமத்துவாரங்களில் சென்ற வாயுவுடன் சேர்ந்து ரோமங்களை உதிர செய்கையில் சிலேஷ்மம் ரத்தத்தில் வியாபித்து ரோமத்துவாரங்களை அடைத்து விடுவதால் மயிர்கள் முளைக்க மாட்டாது.
18.	பலிதரோகம்	வெப்பம் அதிகரித்து தேகம், சிரசு, கபாலம், ரோமங்களின் வேர்கள் இவைகளில் வியாபித்து நரையை உண்டாக்கும். வாத நிரை-கருமை, பித்தநிரை-செம்மை, சிலேஷ்ம நிரை - வெண்மை நிறமாயிருக்கும்.
19.	கலதிரோகம்	இந்திரலுத்த ரோகத்தின் லக்ஷணங்களையும் அன்றி ரோமங்களை உதிரவும் கபால சருமத்தின் பேரில் மழுங்கலையும் உண்டாக்கும்.

மருந்து : சிரசின் உறுப்புகளையும் அவ்வுறுப்புகளின் தொழில் களையும் சரீர வியவக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய அமிர்த வல்லித்தைலம், மார்த்தாண்ட பயிரவி தைலம், சர்வேஸ்வர ரச நஸ்ஸியம் முதலியவைகள் செய்து உபயோகிக்கக் குணமாகும்.

கபால சருமம் புரைபுரையாக உதிர்ந்து உபத் திரவஞ் செய்யும் ரோகமும், சரீரம் பழுத்ததினாலுண்டான நரை ரோகமும் அசாத்தியம், மற்றவகைள் சாத்தியமாம்.

வாதரோகங்கள் (80)

காரணம் : ரசாதி பதார்த்த பேதங்கள் தகாத நடைகள் இவைகளால் பிராணவாயு முதுலிய ஐந்து வாயுகள் ரோகமுகமாய் திரும்புகின்றன.

பொது லக்ஷணம் : - சரீரத்தில் அசதி, நோவு, மரத்தல், குத்தல், நடுக்கல் காணும்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	நாபிசாரு வாதம்	நாபிஸ்தானத்தில் குத்தல், ஆண்குறி, குதம், வயிறு இவைகளில் வேதனை.
2.	சுரோணித சூலைவாதம்	இடுப்பின் பக்கங்களில் மித குத்தல், வயிற்றில் சங்கடம், நாபி வயறு கனத்தல், நடுங்கல், பிரமை.
3.	இருதாவிருத வாதம்	மார்பில் வாளால் அறுப்பது போல் தோற்றும். வாந்தி, பிரமை, புரளல்.
4.	அபதானக வாதம்	திடீரென்று அடிக்கடி எழுந்திரித்தல், நகைத்தல்.

5.	நாளாவர்த்த வாதம்	மேதை, மா, மாமிசம் எலும்பு இவைகளின் நிறங்களைப் பெற்று கலங்கிய சுக்கிலம் போல் மூத்திரம் அடிக்கடி இறங்கும்.
6.	மூத்திரசரவாதம்	மூத்திரம் சரம் போல இறங்கும்.
7.	மேட்ரக்ஷீய வாதம்	ஆண்குறியின் வன்மையைக் குறைத்து விடும். எரிச்சல், கனத்தல், நோதல் உண்டாகும். அதிகரிக்கில் பீஜம் வாங்கும்.
8.	குடல் வாதம்	வயிற்றில் கலக்குதல் அறுக்குதல் போல் இருக்கும். உப்பல் நோவு காணும்.
9.	மனோவிருத்தி வாதம்	தேகம் கட்டுவிட்டது போலிருக்கும் மலஜலம் அடிக்கடி இறங்கும்.
10.	அபதந்திரக வாதம்	சர்வாங்க வேதனை, தேகவில்லை போல் வளைதல், புறா சத்தத்தைப் போல் நஞ்சில் சத்தம்.
11.	பிரத்தியாத்மா வாதம்	வாயு வயிற்றில் மேல் நோக்கி பயங்கரமான இரைச்சலை உண்டாக்கும்.
12.	ஆத்மாவாதம்	வயிற்றில் கடகடவென்று சத்தமும் உப்பலும் உண்டாகும்.
13.	மூடவாதம்	நாபிஸ்தானத்தில் மொத்தையாக கண்டு வெகு வேதனையைச் செய்யும்.
14.	துளிவாதம்	வயிற்றில் அறுத்தல் இழுத்து பிடித்தல் போலிருக்கும். அல்குல் பிட்டம், கீழ்வயிறு, குதம் இவைகளில் அதிவேதனை.
15.	பிரதி துளிவாதம்	துளிவாத ரோகத்தின் லக்ஷணங்கள் அதிவிசேஷமாய் இருக்கும்.
16.	சகனாவர்த்தன வாதம்	இடுப்பில் வாயுதங்குவதால் தொடைகளில் குடைச்சல், நோவு காணும். குனிய முடியாது.

17.	ஊருஸ்தம்ப வாதம்	வாயு தொடைகளில் தங்குவதால் தொடைகள் ஸ்தம்பித்தல், மரத்தல், கனத்தல்.
18.	உதிரவாதம்	தேகத்தின் சகல கீல்களிலும் வீக்கம் நோவு, குத்தல் காணும்.
19.	கிருத்திரசி வாதம்	வாயு, தொடை நரம்புகளின் வழியாய் பாதவிரல் முதல் கீழ்முதுகு வரைக்கும் உள்ள நரம்புகளில் வியாபித்து தேகத்தில் குத்தல், கனத்தல் அதிவேதனை இவைகளை உண்டாக்கும்.
20.	பாதோப காத வாதம்	காலில் ஏதோத் தடவினது போல் தோன்றும்.
21.	நரித்தலைவாதம்	அதிசையோகத்தால் வாயு முழங்காலின் கீல்களில் தங்கி வீக்கத்தையும் நோவையும் உண்டாக்கும்.
22.	களாயுகஞ்ச வாதம்	தேகவீக்கம், கீல்கள் கனத்தல் தளரல் மரத்தல் காணும்.
23.	பாதகண்டக வாதம்	காலை வைக்கும்போதும் தூக்கும்போதும் அநேக ஊசிகள் முள்ளுகள் குத்துவது போல் அதிவேதனையைச் செய்யும்.
24.	சுப்தி வாதம்	வெகு உறக்கம், தேகம் கனத்தல் மரத்தல் வீக்கம் காணும்.
25.	சீதகண்டு வாதம்	உள்ளங்காலில் நமைச்சல், தேகவீக்கம்.
26.	புச்சா வர்த்தன வாதம்	கைகால்களின் விரல்களில் நோவு மரத்தல் காணும்.
27.	அபிகாத வாதம்	சர்வாங்கம் அடித்துத் துவைப்பது போலும், உள்ளில் வெட்டுவது போலும் தோற்றும்.

28.	பாதஹரிஷ வாதம்	கால்களின் ரோமங்கள் எல்லாம் சிலிர்த்தல் மரத்தல், நடுக்கல் குத்தல் கனத்தல் காணும்.
29.	பாதாக்ஷேபக வாதம்	பாதங்களின் சப்த தாதுக்களில் வாயு அனுசரித்து கால்களை ஒன்றோடொன்று நித்திரையில் அடித்து கொள்ளச் செய்யும்.
30.	பாதலக வாதம்	பாதமதை வைக்கும்போதும் தூக்கும் போதும் காலுக்கு களிமண்ணை தடவினது போல் தோன்றும். கால்களில் மரத்தல், நோதல், கனத்தல் ஒன்றோ டொன்று அடித்துக் கொள்ளுதல் காணும்.
31.	அஷ்டிலாவாதம்	மிக சையோகத்தால் வாயு நாபியின் கீழ் ஸ்தானத்தில் தங்கி மூத்திரப்பையின் உள்ளும் வெளியிலும் பக்கங்களிலும் வீக்கத்தை உண்டாக்கி பலவேதனையைச் செய்யும்.
32.	பிரத்தி யஷ்லா வாதம்	நாபிஸ்தானத்தின் கீழ் அல்லது மேற்புறத்தில் வீக்கம் உண்டாகி வெகு வேதனை செய்யும்.
33.	ஸ்தனருக்கு வாதம்	ஸ்தனத்தின் கீழ் புறத்தில் வாயு தங்கி ஸ்தனத்தின் வெளியிலும் உள்ளிலும் முகத்திலும் சகிக்கக் கூடாத வேதனையை உண்டாக்கி முலைக்காம்பை வாளால் அறுப்பது போல் செய்யும்.
34.	அர்த்தாங்க வாதம்	ரத்த நரம்பும் சன்ன நரம்பும் உலர்ந்து கீல்கள் தளரும். பாதி அங்கத்தில் நோவு, கனத்தல், மரத்தல், வேதனை, அப்பாகத் தின் கைகால் அசைவில்லாமை.
35.	ஆக்ஷேபகவாதம்	தேகத்தில் எங்கும் வாளால் அறுப்பது போல் இருக்கும். நடுக்கல், பிரமை, கையில் மிக நோவு.

36.	தனுஸ்தம்ப வாதம்	தேகம் வில்லையைப் போல் வளையும். தேகத்தில் கனத்தல், மரத்தல் நோவு காணும்.
37.	உதாவர்த்த வாதம்	அதோங்கத்திலுள்ள மலம் மூத்திரம் நரம்பு இவைகள் மேலாகச் சூழல்வதாலுண்டாகி அடிவயறு உப்பல், நோதல், கனத்தல் காணும்.
38.	தண்டக வாதம்	தேகம் தண்டத்தைப் போல் விழுந்து அசைவில்லாமல் இருக்கும்.
39.	பாக்கியாயாம வாதம்	தேகத்தின் சர்வ அவயங்களும் நீட்டி முடக்கும்போது குத்தல், கனத்தல், மரத்தல் உள்ளில் வாளால் அறுப்பது போலும் திருகுவது போலுமிருத்தல்.
40.	அந்தராயாம வாதம்	தேகத்தின் உள் நரம்புகளில் வாயுதங்கி சரீரத்தை வில்லைப்போல் வளையச் செய் யும். வாயில் கோழையும் ஜலமும் வரும்.
41.	பரிஸ்போட வாதம்	பாதாதிசிரசு வரைக்கும் நெருக்கமாய் சிறு கொப்பளங்கள் உண்டாக்கும்.
42.	கம்பீரவாதம்	ரசதாதுவில் வாயு சேர்ந்து ஒவ்வொரு தாதுக்களாக கடந்து கடந்து உள்ளில் ஆழ்ந்து அஸ்தி தாதுவுக்குள்ளிருக்கும் மச்சை தாதுவில் தங்க சர்வாங்க நோவு கைகால் முடக்கு இவைகளை உண்டாக்கும்.
43.	தொனிகத்கத வாதம்	வாயு சிரசில் தங்கி தலை நடுக்கல் காதின் மூலம் கண் நெறி நோதல் இவைகளை உண்டாக்கும்.
44.	தலைநடக்கு வாதம்	வாயு சிரசில் தங்கி தலை நடுக்கல், காதின் மூலம் கண் நெறி நோதல் இவைகளை உண்டாக்கும்.
45.	அஸ்தகம்ப வாதம்	வாயு கைகளில் தங்கி கைகள் சுழற்றல், அசைதலும் நீட்டலும்

		முடக்கலும் கூடாமை இவைகளை உண்டாக்கும்.
46.	அங்கசலன வாதம்	வாயு கபநரம்புகளிலும் வாத நரம்புகளிலும் தங்கி வேதனையைச் செய்வதுமன்றி அதோங்கத்தில் அல்லது ஊர்த்து வாங்கத்தில் நடுக்கலை உண்டாக்கும்.
47.	அந்நியேதுக வாதம்	சிரசு, விலா தோள், கழுத்து, முதுகு இவ்விடங்களில் வாயு பித்தத்துடன் சேர்ந்து வேதனை, கனத்தல், மரத்தல் இவைகளை உண்டாக்கும்.
48.	சர்வாங்க வாதம்	வாயு தேக முற்றிலும் வியாபிப்பதால் எலும்புகளில் அலையடிப்பது போல் அடித்துக் கொண்டேயிருக்கும்.
49.	சித்திலாவர்த்த வாதம்	கீல்களில் வாயு சேர்ந்து சகல கீல்களையும் தளரச் செய்யும்.
50.	ஆசியபாக வாதம்	வாயு வாயில் தங்கி வாயை ரணமாகி நாக்கை மேடுபள்ளமாக்குவதுமன்றி கண்டத்தில் குரு குரு என்னும் சத்தத்தை உண்டாக்கும்.
51.	அதோமுகவாதம்	அஜீர்ண சீதள மலபந்த வஸ்துக்களை புசிப்பதினாலுண்டான வாயுவானது சமான வாயுடனும் அபான வாயுடனும் சேர்ந்து பித்தத்தை அனுசரித்து எரிச்சலை உண் டாக்கி மார்பு வயிறு, கவுட்டு இவை களின் கீழாக இறங்கி ஒன்று அல்லது இரண்டு பீஜங்களில் வீக்கம், நோதல் கனத்தல், நமைச்சல் இவைகளை உண்டாக்கும்.
52.	ஊர்த்துவமுக வாதம்	சீதளவஸ்துக்களைப் புசிப்பதால் உண்டான வாயு அபான சமான வாயுகளுடன் சேர்ந்து எலும்புகள் நொறிங்கியது போல் வேதனையும், குடல்

		விலா-கண்-முகம் இவைகளில் அதி நோவையும் உண்டாக்கும்.
53.	அவபேதக வாதம்	வாயு சிலேஷ்மத்தினால் மறிப்பட்டு நெறி, கண் புருவம் இவைகளில் தங்கி 15-60 அல்லது 180 நாழிகையாவது நெற்றி பிளந்து போவது போல அதிவேதனையைச் செய்யும்.
54.	கர்ணசூலை வாதம்	செவிகளின் மூலத்தில் குத்தல், நோவு, பல்களின் வேர் சிரசு - பிடரி - நாசி - கண் - புருவம் கண்டம் - தாடை - நெறி - நெற்றி இவ்விடங்களில் வாளால் அறுப்பது போலிருக்கும்.
55.	நேத்தரஸ்தம்ப வாதம்	வாயுவானது விழிகளின் மூலத்தில் பித்தத்துடன் சேர்ந்து முகம்-நெறி-நெற்றி மரத்தல் கண்கள் ஸ்தம்பித்தல் இவைகளை உண்டாக்கும்.
56.	விவர்தாசிய வாதம்	வாயு வாயின் நரம்புகளில் சேர்ந்து வாயை மூடாமல் திறந்திருக்கச் செய்யும்.
57.	சம்விருதாசிய வாதம்	வாயு வாயின் நரம்புகளில் சேர்ந்து வாயை திறக்கக் கூடாமல் மூடினபடியே இருக்கச் செய்யும்.
58.	செவிபடுவாதம்	வாயு சிலேஷ்மத்துடன் சேர்ந்து காதின் நாத நரம்புகளில் பரவி சத்தத்தை அடைத்து சமுத்திர தோஷம் போல் இரைச்சலை உண்டாக்கி செவிடாக்கும்.
59.	புருவாடோபக வாதம்	வாயு கண்-இமை-புருவம்-நெற்றி இவைகளில் தங்கி புருவங்களில் எந்நேரமும் துடித்தலை உண்டாக்கும்.
60.	ஆசியா க்ஷேப வாதம்	வாயு வாய்-தாடை-காது நாசி இவைகளில் தங்கி நாக்கை ஸ்தம்பிக்கவும், பாதம், முகம் சிரசு துடிக்கவும் செய்யும்.

61.	தொனிவிச் சின்னவாதம்	அதிசீதள - வாத - மந்த வஸ்துக்களை புசித்திலனாலுண்டான வாயு அடிநாக்கில் சேர்ந்து கண்டத்திலுள்ள சிலேஷ்மத்துடன் கூடி கண்டத்தில் தொனியை உண்டாக்காமலும் நாக்கை அசைய முடியாமலும் செய்யும்.
62.	தொநோப காத வாதம்	மந்த - மலபந்த - சீதவீரிய - எண்ணெய் வஸ்துக்களை புசித்தலினாலுண்டான வாயு நாசியின் மூலத்திலும் அரைவாயிலுமுள்ள சிலேஷ்மத்துடன் கூடி கீச்சுக் குரலான தொனியை உண்டாக்கும் மூச்சுத்திணறல் காணும்.
63.	கண்மயக்கு வாதம்	பித்த - சிலேஷ்ம - லவண - கார வஸ்துக்களை புசித்தலினாலுண்டான வாயு விழிகளின் மூலத்தில் தங்கி பிறகு சிலேஷ்மத்தில் கூடி கண்களில் நீர்க்கம்மல், நோவு மயக்கம் உண்டாக்கும்.
64.	அதிதாபக வாதம்	வாதரதி-சீதவீரிய-மந்த வஸ்துக்களை புசித்தலினாலுண்டான வாயு தேகமுற்றிலும் பரவி தபிக்கப்பண்ணும். தேகபதறல், கண் துடித்தல் விழித்தல் காணும்.
65.	பிரமோன்மந்த வாதம்	வாகனங்களில் ஏறுவதினாலுண்டான உஷ்ணத்தினாலும் பித்த வஸ்துக்களினாலுண்டான வாயு பித்தத்துடன் கூடி கண்களில் இருட்கம்மல், மயக்கம் காணும்.
66.	களாவர்த்த வாதம்	சீதள அஜீரண வஸ்துக்களை புசித்தலினாலும் சாப்பிடுகையில் வாயை அதிகமாய் திறப்பதினாலுமுண்டான வாயு கழுத்தின் நரம்புகளில் சேர்ந்து அந்நரம்புகளை விகுத்துக் கொள்ளச் செய்யும். கழுத்தில் மரத்தல், கனத்தல், அதிவேதனை காணும்.

67.	விஸ்மாரியக வாதம்	பித்த-அதிஉஷ்ண-லவணவஸ்துக்களைப் புசித்தலினாலுண்டான வாயு தேகத்தின் நடுகண்டத்தில் சேர்ந்து அவ்விடத்து சமானவாயுவைப் பித்தத்துடன் சேர்த்து விட்டு நாபிக்குமேல் தான் நின்றுகொண்டு, மார்பு சிரசு, எரிவு, நோவு, முதுகு - விலா - காது. சிரசு-நெறி-நெற்றி இவ்விடங்களில் மரத்தல், கனத்தல் உண்டாக்கும்.
68.	உக்கிராக்கிரத வாதம்	அகாலபோஜனம், அகாலநித்திரை, அதி சையோகம், இவைகளாலுண்டான வாயு திரிகஸ்தானம் மர்ம ஸ்தானம் மார்பு - கீழ் வயிறு - சிரசு - கண்டம் இவ்விடங் களில் பரவி தேகத்தின் மரத்தல், கனத்தல், நோதல், இவைகளை உண்டாக்கும்.
69.	அனுஸ்தம்ப வாதம்	மந்த-சீதளவஸ்துக்களை புசித்த லினாலுண்டான வாயு தாள்களின் மூலங்களிலும் காதின் அடிகளிலும் சேர்ந்து வாயின் தாள்கள் மரத்து இறுகினது போல் செய்யும். நாக்கு உள்ளில் சுருங்கி கொள்ளச் செய்யும்.
70.	அர்த்திதவாதம்	சைத்திய - கடினவஸ்துக்களை புசித்த லினாலுண்டான வாயு பாதிமுகத்தில் பரவி மரத்தல், கனத்தல், குத்தல், நோதல், நாக்கு மரத்தல் உள்ளுக்கு சுருங்கல், கண்ணீர் வடிதல் உண்டாக்கும்.
71.	ஆயாசா வர்த்த வாதம்	பித்த-கப வஸ்துக்களை புசித்தலினா லுண்டான வாயு சப்த தாதுவில் பித்தத்துடன் சேர்ந்து ஆயாசத்தை உண்டாக்கி சுழலும்.
72.	ஊர்த்துவாம் மிச்சர வாதம்	மதுர - மந்த - சீதளவஸ்துக்களை புசித்தலாலுண்டான வாயு தோளின் சப்த தாதுக்களில் பரவி அவ்விடத்தில் பாம்பு திரிவது போல் தோன்றும். அன்றியும் மரத்தல், கனத்தல் நோதல் காணும்.

73.	விஸ்வபித்வாதம்	ஆயுதத்தைச் சுழற்றல், வில்வளைத்தல் முதலியவைகளாலுண்டான வாயு உள்ளங்கை விரல்கள் இவைகளிலுள்ள வாத சிலேஷ்ம ரத்த நரம்புகளில் கூடி கைகள் நீட்ட முடக்க அசையக் கூடாமல் செய்யும். தேகத்தில் மரத்தல் காணும்.
74.	சுவாலிதவாதம்	வாத - காந்திவஸ்து அதிசையோகம் இவைகளாலுண்டான வாயு அதிகரித்து வயறு முற்றிலும் எரிச்சலை உண்டாக்கும்.
75.	அவபாகுக வாதம்	மதுர-மந்த-சீதளவஸ்துக்களை புசித்தலாலுண்டான வாயு தோள்களில் இருக்கும். ரத்த நரம்புக்களுடன் கூடி கைகளில் குத்தல், மரத்தல், சூம்பல் இவைகளை உண்டாக்கும்.
76.	அநாயாசக வாதம்	மலஜலக்கட்டு, சீதளவஸ்து இவைகளி னாலுண்டான வாயு சர்வதாதுக்களிலும் பரவி தேகத்தில் மரத்தல், கனத்தல், குத்தல், வேதனை காணும்.
77.	அவுஷ்மாபக வாதம்	உஷ்ண சீதள மலபந்த லவண அஜீரண வஸ்துக்களை புசித்தலினாலுண்டான வாயு தேகத்தின் நடுவில் தங்கி பித்தத்துடன் கூடி கபாலம் சிரசு இவை களில் சேர்ந்து நடுநெற்றி - மார்பு இவைகளில் எரிச்சலை, முதுகு நோவை உண்டாக்கும்.
78.	சந்நியாசவாதம்	சீதளவஸ்து, சீதளஸ்நானம், முதலிய சீதள சேர்க்கையினாலுண்டான வாயு சப்ததாது சகல கீல்கள் இவைகளில் தங்கி சர்வாங் கத்திலும் பரவி தேகம் மரத்துக்கட்டுப்

		பட்டதுபோல் அசைவற்றுக் கிடக்கும்படி செய்யும்.
79.	அபிநியாசவாதம்	அகால போஜனம், பித்தசிலேஷ்ம வஸ்துகள் புசித்தலினாலுண்டான வாயுவானது பித்த சிலேஷ்மங்களை அதிகப்படுத்துவதால் பிராண வாயு அபான வாயு இவைகள் தோஷங்களடைந்து அவ்வாயுவுடன் கூடி இருதயத்தில் தங்கி மனம் வாக்கு தொழில் இவைகளை ஒழிக்கும்.
80.	ஆட்டியவாதம்	எண்ணெய் மரவஸ்துக்களை புசித்தலினாலுண்டான வாயு சப்த தாதுக்களில் பரவி சிலேஷ்மத்துடன் கூடி சரீரத்தில் வீக்கம், சரீரங் கட்டிப் போட்டது போல் இருத்தல். இவைகளை உண்டாக்கும்.

மருந்து : ரோகங்களுண்டாயிருக்கும் ஸ்தானங்களின் உறுப்பு களையும் அவ்வுறுப்புகளின் தொழில்களையும் சரீரவியவக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து, பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய உலகோத்தம செந்தூரம், நமசிவாய செந்தூரம், ரசவீரசெந்தூரம், முதலியவைகள் கொடுக்க குணமாகும்.

7-9-10-17-23-24-37-39-46-47-48- 51-60-64-68-70-77-80 இந்த நம்பர்களுள்ளவைகள் அசாத்தியம் 8-10-13 இந்த நம்பர்களுள்ளவைகள் கஷ்டத்தின் மேல்சாத்தியம் மற்றவைகள் சாத்தியமாம்.

பித்தரோகங்கள் (40)

காரணம் : பித்த வஸ்துக்களை புசித்தல், காலை வெயிலில் திரிதல், அப்பியங்கஸ்நானஞ் செய்யாமலிருத்தல் இவைகளால் அனல் பித்தம்

முதலிய ஐந்து பித்தங்களும் ரோகமுமாய் திரும்புகின்றன.

பூர்வரூபம் : அன்னத்திவேஷம், சுரம், பதறல், பிரமை, மூர்ச்சை, மயக்கம், தலைசுற்றல், கண்சிவப்பு பல்கடித்தல், தேகம் - நகம் - கண் - மலம் - மூத்திரம் மஞ்சள் நிறம்.

பொதுலக்ஷணம் : தேகத்தில் எரிச்சல், மூர்ச்சை மயக்கம், தலைசுற்றல், அன்னதுவேஷம், கசப்பு வாந்தி, வாய்நாற்றம், கதகதப்பு, தபித்தல், நடுக்கல், நாக்கில் மஞ்சள் நிறம்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	விஷ்டம்ப பித்தம்	தேகத்தைக்கட்டுப்பட்டது போல் செய்யும்.
2.	அனல்பித்தம்	தேகமெல்லாந்தடித்து காங்கை உண்டாக்கும்.
3.	சூலைபித்தம்	நாபிஸ்தானத்தில் குத்தல், கைகால் எரிவு.
4.	கொட்டாவி பித்தம்	இடைவிடாது கொட்டாவி, தேகமுற்றிலும் வியர்வை.
5.	விக்கல்பித்தம்	ஓயாத விக்கல், உள்ளங்கால் கைகளில் கொப்பளங்கள்.
6.	சுவதேபித்தம்	தேகமெல்லாம் கசந்த வாசனையுடைய வியர்வை.
7.	எரிபித்தம்	கண் - உள்ளங்கால் கை, தொடை, பாதம் எரிச்சல்.
8.	கரும்பித்தம்	கறுப்பு நிறமான வாந்தி உண்டாக்கும்.
9.	செம்பித்தம்	சிவப்பு நிறமான வாந்தியை உண்டாக்கும்.

10.	கரப்பான் வாதம்	தேகமுற்றிலும் சொறி, கட்டிகள் காணும்.
11.	சுவாசபித்தம்	அதிசுவாசம், வயிறு பொருமல் காணும்.
12.	ஊர்த்துவபித்தம்	பூமியில் குழிவிழும்படி பேதி ஆகும்.
13.	ரணபித்தம்	தேகத்தில் அநேக சிறிதும் பெரிதுமான ரணங்கள் உண்டாக்கும்.
14.	மருந்திடு பித்தம்	பித்தம் அடிக்குடலில் தங்கி மனக்கலக்கம், சரீர ஊதல் இவைகளை உண்டாக்கும்.
15.	கிருமிபித்தம்	கிருமிகள் மலத்தோடு இறங்கும் கைகால் சில்லிட்டுக் கனத்துக் கடுக்கும் தேகத்தில் நாற்றம் வீசும்.
16.	வலிபித்தம்	கீழ்வயிற்றில் இசுவு, குடல் - ஈரல் - அடிவயறு நோதல், மார்பு அடைப்பு.
17.	திமிர்பித்தம்	தேகமுற்றிலுந்திமிர் , கிறுகிறுப்பு, காலையில் வாந்தி.
18.	தாகபித்தம்	அதிதாகம், கீழ்வயிறு தடித்தல், அடிநாக்கு இழுத்துக்கொள்ளுதல்.
19.	கபாலபித்தம்	சிரசு - கபாலம் புண்போல் கடுக்கும், முகத்தில் வீக்கம்.
20.	துடிபித்தம்	சரீரத்தில் துடித்தல் - வெளிறல்.
21.	விஷமபித்தம்	தேகத்தில் வீக்கம், சோர்ந்து விழுதல்.
22.	மூலபித்தம்	இரைச்சலுடன் பேதி. மூலவளையிலிருந்து மூளை தொங்குதல்.
23.	களபித்தம்	கழுத்துக்குள் புண்போல் நோவு, தேகவீக்கம்
24.	ஓடுபித்தம்	எழுந்து ஓடுதல், கூத்தாடுதல், கொக்கரித்தல், பிதற்றல்.

25.	மூடுபித்தம்	பணம் - ஆபரணம் பூமிக்குள் மறைக்குதல் மொண மொணப்பு.
26.	நடுக்குபித்தம்	சிரசு - தாடை - கண்டம் - நெற்றி பிடரி நடுக்கல்.
27.	பிட்டபித்தம்	சர்வாங்கத்தடிப்புடன் சிறுகட்டிகள்.
28.	மூர்ச்சைபித்தம்	நாபி - மார்பு அதிளரிவு, அடிக்கடி மூர்ச்சை, செவியிலும் கபாலத்திலும் நாதம்.
29.	கண்டுபித்தம்	தேகம் முழுவதிலும் தினவு திமிர், தடிப்பு கொப்பளம்.
30.	துணைபித்தம்	அதிதூக்கம், அதிசூலை, தலைதிருப்பல்.
31.	துர்க்கந்தபித்தம்	கறுப்பு சிவப்பு கலந்து தடிப்பானதும் நாற்றமுள்ளதுமான வாந்தி, தேகமெல்லாம் கொப்பளங்கள்.
32.	மதுரபித்தம்	நாக்கில் கொப்பளங்கள் கண்டு தடிப்பாயும் இனிப்பாயும் நீர் ஊறும்.
33.	துத்துருபித்தம்	வாய் நாக்கு உலரல் தேகமெல்லாந் தினவு, தடிப்பு.
34.	ஆசியாபாகபித்தம்	வாயில் சிறுகொப்பளங்கள் கண்டு உடைந்து கந்தம் வீசுதல், மார்பில் சகிக்கக் கூடாத எரிச்சல்.
35.	ஆவரண பித்தம்	தேகம் ஸ்தம்பித்தல், தலை திருப்பல்
36.	கசப்பு பித்தம்	வாயில் முழுங்கக் கூடாத அதி கசப்பான நீர் ஊறல், தேகம் ஸ்தம்பித்தல்.
37.	விஸ்மிருதி பித்தம்	அதி ஞாபகமறதி, தொடையில் குத்தல்
38.	உன்மாத பித்தம்	புத்திஹீனம், அறிவு இல்லாமை.

39.	ரத்தபித்தம்	ரத்தவமனம், கை-கால் கண் எரிவு, தேகத்தை நருக்கி வைத்தது போல தோற்றுதல்
40.	ஆமல பித்தம்	அதிபுளிப்புள்ள மஞ்சள் நிறமான வமனம், கீல்களில் நோவு, சர்வாங்க வளைகளை போல் புடைகள்.

மருந்து : பாலை எண்ணெய், குமரிசஞ்சீவி தைலம் ராஜமார்த்தாண்ட லேகியம்.

போஜனகுடாரி மாத்திரை, திரிநேத்திர சூர்ணம், சண்முக வடகம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

மேற்படி ரோகங்களில் வாதம் அல்லது சிலேஷ்மம் சேர்ந்தால் கஷ்டத்தின் மேல் சாத்தியம் இவ்விரண்டுஞ் சேர்ந்தால் அசாத்தியம்.

சிலேஷ்ம ரோகங்கள் (20)

காரணம்: கபரோக இருமலானது நுரையீரல், சுவாசக்குழாய், நெஞ்சின் உள்ளுறையாகி சவ்வு முதலியவைகளில் அழர்ச்சி, வீக்கம் அல்லது காயம் நேரிடுவதால் உண்டாகும்.

1. நுரையீரலிலுண்டாகில் நாக்கு உதடு சிவந்திருக்கும். கபமற்ற ஒயாத இருமல், கொடூரசுரம் (103 - 105 டிகிரி) சுவாசம் கஷ்டமாயும் விரைவாயும் செல்லும் நெஞ்சுக்குள் சத்தமிறாது. தேகத்தின் தோல் சுரசுரப்பாயும் நெருப்பைப் போல் சூடாயுமிருக்கும்.
2. சுவாசக் குழயிலுண்டாகில் நாக்கு உதடு சாதாரணமா யிருக்கும். இருமல் கபத்துடன் லேசாயிருக்கும். தேகத்தில் சூடு (102 டிகிரி) நெஞ்சில் சுவாசத்துடன் குறு குறு என்கிற சத்தங் காணும், தேகம் மிருதுவாயும் சாதாரணமாயு மிருக்கும்.
3. நெஞ்சிலுள்ளறையிலுண்டாகில் குளிருடன் நடுக்கல், அகோர சுரம், கஷ்டசுவாசம், கபமற்ற ஒயாத இருமல், வாந்தி, சில வேளைகளில் சிலிப்பு உண்டாக்கும்.

வியாதியின் குறிகள்

கிரீச்சு என்று சத்தமுண்டானால் - சுவாசக்குழாயின் மேல் பாகமாகிய பெரிய குழாயில் கண்ட வியாதி.

வெண்கல ஓசைபோல் சத்தமுண்டானால் - சுவாசக் குழாயின் அடிப்பாகமாகிய சிறுகுழாய்களில் கண்ட வியாதி.

சுவாசம் படபடவென்று சென்றால் - நுரையீரலில் கண்ட வியாதி.

(சுவாசம் அரை மூச்சுப் பட்டால் - நுரையீரலுக்கு வெளியே நெஞ்சின் உட்பாகத்தில் கண்ட வியாதி.)

பூர்வரூபம் : - தேகம் முகம் மினுமினுப்பு, கீல்கள் தளர்ச்சி, குடைச்சல், இருமல், இரைப்பு, கோழை, கண் - நாசியில் ஜலம் வடிதல், மந்தம், வாந்தி, சுரம்.

பொது லக்ஷணம் : கோழை, கபம், பலஹீனம், சுவாசம், காசம், அஜீரணம்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	நுரை சிலேஷ்மம்	அதிநுரையுடன் கோழை - வாந்தி, மார்பு எரிவு, அதிசுவாசம்.
2.	சுவேத சிலேஷ்மம்	தேகமுற்றிலும் வியர்வை, கண்டத்தில் அதிகபம்.
3.	மகா சிலேஷ்மம்	தேக முழுவதும் வாயு பரவி வேதனையும் கீல்நோவும் உண்டாக்கும்.
4.	லாலா சிலேஷ்மம்	கோழை - ஜலம் வாந்தி மார்பில் கோழை, குத்தல்.
5.	க்ஷீண சிலேஷ்மம்	பலஹீனம், தலைநோவு, தலைதிருப்பல்.

6.	வமன சிலேஷ்மம்	ஓயாதகோழை வாந்தி, கண்டத்தில் கபம், மார்பு குத்தல்.
7.	சுட்க சிலேஷ்மம்	சர்வாங்கம் சூம்பல், மேல்மூச்சு, கண்டத்தில் சத்தம்.
8.	கோச சிலேஷ்மம்	கண்டத்தில் ஒட்டைமணி தொனிபோல் சத்தம், தினவு.
9.	தொனி சிலேஷ்மம்	மண்டை - காது இரைச்சல், ஹீனதொணி.
10.	துக்க சிலேஷ்மம்	கண்டத்தில் சத்தித்தல், அதிதுக்கம், வாயில் கசப்பு - புளிப்பு - தித்திப்பாக இருத்தல்.
11.	இக்கா சிலேஷ்மம்	தொண்டைக்கம்மல், மாறாத விக்கல்.
12.	உத்கார சிலேஷ்மம்	ஓயாத ஏப்பம், மாறாத கோழை வாந்தி, சூலை
13.	சோஷ சிலேஷ்மம்	சகலமாமிச ஸ்தானங்களிலும் நோவு, சோர்ந்து விழுதல்.
14.	ஊமை சிலேஷ்மம்	கழுத்துக்குள் சந்திப்பு, கோழை வாந்தி, மார்பு நோவு.
15.	சுர சிலேஷ்மம்	கடூரசுரம், அதிதாகம், மார்புசூலை ஆசனகெடுதி.
16.	வாத சிலேஷ்மம்	சர்வாங்கம் நருக்கி வைத்தது போல் இருத்தல்.
17.	பித்த சிலேஷ்மம்	ரத்தங்கக்குதல், தலைசுழலல், நாவில் முள்ளு, மஞ்சள் கோழை வாந்தி.
18.	மூர்ச்சை சிலேஷ்மம்	அடிக்கடி மூர்ச்சை, கோழை வாந்தி.
19	க்ஷய சிலேஷ்மம்	மேல்சுவாசம், மூர்ச்சை, பிரலாபம், அவயவங்கள் சூம்பல்.

20.	ரத்த சிலேஷ்மம்	தினந்தோறும் ரத்தத்துடன் துர்க்கந்த கோழை வாந்தி, சிரசு - மார்பு குத்தல், கண் சுழலல், மயக்கம், மூர்ச்சை.

மருந்து : மேற்படி ரோகங்களுண்டாயிருக்கும் ஸ்தானத்தின் உறுப்புகளையும் அவ்வுறுப்புகளின் தொழில்களையும் சரீர வியவக்ஷத சாஸ்திரத்தால் அறிந்து அவைகளுக்குத் தக்கபடி பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய ராஜ அப்பிரேக செந்தூரம், சந்திரகாசத்தயிலம் திப்பிலிரசாயனம் முதலியவைகளைக் கொடுக்க குணமாகும்.

சுபாவத்திலேயே மேற்படி ரோகங்கள் நீடித்து உபத்திரவத்தைச் செய்யும். வாதம் அல்லது பித்தம் அவைகளுடன் சேர்ந்தால் அசாத்தியம்.

சுரரோகங்கள் (64)

காரணம்: அதிநடை, ஆறுசுவை வஸ்து பேதம், இவைகளால் வாத பித்த சிலேஷ்மங்கள் அதிகரித்து சீதக்கட்டு ஸ்தானத்தைப் பற்றி ஜீர்ணிக்காத அன்னரசத்தை அனுசரித்து நரம்பு ரோமத்துவாரங்களை அடைத்து நாபிஸ்தானத்தில் சேர்ந்து ஜாடராக்கினியை மேலில் எழுப்பி அதினுடன் கலந்து சர்வாங்கம் வியாபித்தல் சுரம் பிறக்கின்றது.

பூர்வரூபம் : தேகபாரிப்பு, நாக்குவறளல், அஜீரணம், அடித்தொடைச் சதை - கண்டசதை, முழங்கால் நோதல், அதிக நித்திரை, ஆலசியம், பலஹீனம்

பொது லக்ஷணம்: சுரம், தேகவலி, மலக்கட்டு, பசியில்லாமை, தாகம், கண் எரிவு, தலைபாரம்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	ஏகாகிகசுரம்	பகலிலும் இரவிலும் சுரங்காயும்.
2.	துவியாகிகசுரம்	ஏகாகிக சுரத்தில் வாதமதிகரித்து ஒருநாள் விட்டு மறுநாள் சுரம் வந்து வந்து போராடும்.
3.	திரியாகிகசுரம்	துவியாகிக சுரத்தில் வாதாதி தொந்தங்கள் அதிகரித்து 2 நாள் விட்டு மூன்றாம் நாள் வந்து வந்து போராடும்.
4.	சாதுர்த்திகசுரம்	திரியாகிக சுரத்தில் வாதம் அதிகரித்து 3 நாள் விட்டு நாலாநாள் சுரம் வந்து வந்து போராடும்.
5.	பஞ்சாகிகசுரம்	சாதுர்த்திக சுரத்தில் வாதம் சிலேஷ்மத்துடன் சேர்ந்து அதிகரித்து 4 நாள் விட்டு ஐந்தாம் நாள் சுரம் வந்து வந்து போராடும்.
6.	பக்ஷாந்திரசுரம்	பக்ஷத்துக்கு ஒரு தடவை சுரம் வந்து வந்து போராடும். தேகம் வெளிறல்.
7.	மாதச்சுரம்	மாதத்துக்கு ஒரு தடவை வந்து வந்து போராடும்.
8.	வருஷசுரம்	வருஷத்துக்கு ஒரு தடவை வந்து வந்து போராடும்.
9.	வாதசுரம்	வாய் - கண் - முகம் - மூத்திரம் - மலம் கறுப்பு, தேகங்கடுப்பு, கீல்களில் நோவு.
10.	பித்தசுரம்	சுரங்கோரமாய்க் காயும், கண் - முகம் - மூத்திரம் மலம் மஞ்சள், நாக்கு கசப்பு.

11.	சிலேஷ்ம சுரம்	கண் - முகம் - மூத்திரம் - மலம். வெளிப்பு, இருமல் கோழை நெஞ்சுவலி.
12.	வாதசிலேஷ்ம சுரம்	கழுத்து - காது - நெற்றி - புருவம் - தலை கீல்கள் நோவு - பிரலாபம்.
13.	வாதபித்தசுரம்	நாக்கில் முள்ளு, பிதற்றல், நடுக்கல், தபக்கம், சீதளம்.
14.	சிலேஷ்ம பித்த சுரம்	ஸ்தம்பம்போல் தேகம் மரத்தல், நாக்கில் முள்ளு, பிடரியில் - மார்பில் நோவு.
15.	சந்நிபாதசுரம்	வாதாதி தோஷங்களின் சேர்க்கையால் உண்டாகி கீல்கள் - விலா - சிரசு - தொடை இவைகளில் அதிநோவு, பாடல், ஆடல், நகைத்தல் முதலிய விகாரச் சேஷ்டைகள்.
16.	காமச்சுரம்	நெற்றி புருவம் - ஆண்குறி - தொப்புளின் கீழ் இவைகளில் அதி எரிச்சல், சையோகத்தில் இச்சை.
17.	பயச்சுரம்	கடூரசுரம், அடிக்கடி பயப்படல், பல்கடித்தல், சுவாசம்.
18.	விஷசுரம்	வாதாதிகள் அதிகரித்து - சுரம் கோரமாய்க் காயும், மார்பில் நோவு, பேதி மூர்ச்சை முகம் கறுப்பு நிறம்.
19.	கோப சுரம்	பித்தம் அதிகரித்து சுரம் கோரமாய் காயும். அதிக கோபம், தலைவலி.
20.	அமிசார சுரம்	ஓமாகுதிகளில் உண்டாகி தேகத்தில் கொப்புளங்கள் சுரம், தபித்தல்.
21.	சாமச்சுரம்	வயிறுக்கடுத்து அதிசீதம் விழும், இரைப்பு பிரமை மூர்ச்சை.
22.	ரத்ததாதுகத சுரம்	தேக முற்றிலும் சிவந்த தடிப்புகள் நோவு, எரிச்சல், நாக்கு மஞ்சள் நிறம், கீல்களில் நோவு, மார்பு எரிவு

23.	ரசதாது கதசுரம்	கண்டத்தில் சீதளம், வியர்வை, சர்வாங்கம் கனத்தல், நோவு.
24.	நிராமச்சுரம்	அதிக சையோகத்தால் உண்டாகி அதிசுரம், சுவாசம் பெருமூச்ச பிரலாபம்.
25.	மாமிசதாதுகத சுரம்	தேகவீக்கம், தேகத்தில் ஏதோ பூசினது போல் சுறசுற வென்று இருத்தல்.
26.	அஸ்திதாதுகத சுரம்	சர்வாங்க வீக்கம், கீல்-நரம்பு, எலும்பு நோதல், கண் மஞ்சள் நிறம் அதிவேக மான பேதி.
27.	மேதோதாதுக்த சுரம்	சிரசில் வெகுகுத்தல், மாமிசதாதுகத சுரத்தின் லக்ஷங்கள்.
28.	மச்சாதாதுகத சுரம்	நெஞ்சுக்குள் குறு குறு சத்தம், எரிவு, வெளியில் சீதளம், கண் தலை முகம், நடுக்கல்.
29.	சுக்கில தாதுகத சுரம்	பீஜம் - இடுப்பு - கால் - விரல் - உதடு - உந்தி - மார்பு - புருவம் - உச்சி நோதல் - இந்திரிய ஜீர்ணம், சர்வாங்க வீக்கம்.
30.	உட்சுரம்	வாதம் உள்ளடங்கி சிலேஷ்மம் பித்தத்துடன் சேர்ந்து உண்டாகி மலக்கட்டு வயிற்றில் பல விதமான சங்கடங்கள்.
31.	பூதசுரம்	வாதாதிகள் அதிகரித்து உண்டாகி சுரம் கோரமாய்க் காயும், வலிப்பு, ஆடல் பாடல் நகைத்தல், அழுதல், சீதளம்.
32.	திரிகால சுரம்	காலை மத்தியானம் மாலைசுரம் முகம் குங்குமப்பூ நிறம் பற்கடித்தல், பிரலாபம்.
33.	கம்பச்சுரம்	சர்வாங்க நடுக்கல், சீதளம், சுரம், நாக்கில், வாயில் கொப்பளங்கள்.
34.	சோபைசுரம்	சகல கீல்களிலும் வீக்கம், பெருமூச்சு, சூலை, மிக சீதளம்.

35.	அநாசககுரம்	மலதுவாரச்சூலை, மலக்கட்டு
36.	சுஷ்ககுரம்	தேகம் உலரும், சவம் போல் கிடத்தல், தேகம் நருக்கி வைத்தது போல் இருத்தல், ரோம சிலிர்ப்பு.
37.	போடககுரம்	சிறு பயிறு அளவாக சர்வாங்கத்தில் கொப்பளங்கள்.
38.	கட்டிசுரம்	சரீர முழுவதிலும் சிறிதும் பெரிதுமான கட்டிகள், பிரலாபம், வியர்வை.
39.	பழஞ்சுரம்	வாதம் சிலேஷ்மம் குறைவதால் உண்டாகி சரீரத்தை சுஷ்கித்து இருமல், சூலை உண்டாக்கும்.
40.	காசசுரம்	சர்வ காலமும் இருமலுடன் கோழை விழுதல், தலை கண் எரிவு.
41.	விக்கல் சுரம்	வாத சிலேஷ்மம் அதிகரித்து உண்டாகி மாராத விக்கல், மூச்சை வியர்வை உண்டாக்கும்.
42.	நித்திரைசுரம்	தேகம் உலரல், மேல் மூச்சு, ஓயாத இருமல், மூர்ச்சை, சீதளம்.
43.	ஏப்பச் சுரம்	வாந்தி, ஓயாத ஏப்பம், அஜீரணம்
44.	வாந்தி சுரம்	மார்பில் சகிக்கக் கூடாத எரிச்சல், புளிப்பைச் சேர்ந்த ரத்தவமனம், சீதபேதி.
45.	கொட்டாவி சுரம்	மாராத கொட்டாவி, தேக முற்றிலும் சயித்திய வியர்வை, புளிப்பும் கசப்பும் கலந்த வமனம்.
46.	தெய்வப் பிரகோப சுரம்	தெய்வக் குற்றத்தினால் உண்டாகி சுரம் கோரமாய்க்காயும். சரீர முற்றிலும், சீதளம், சடத்துவம்.
47.	தாந்திரிக சுரம்	தேகம் நோவு, சுழற்றல், கழுத்தில், நெற்றியில் வியர்வை பிரலாபம்.

48.	காந்தர்வ சுரம்	கண்கள் மஞ்சள் நிறம், கீல்களில் அதிநோவு, தேக வீக்கம், மூர்ச்சை, பெருமூச்சு, பிரமை.
49.	பிரலாப சுரம்	அதிசீதளம், நாக்கில் மஞ்சள் நிறமும் முள்ளுகளும் பிரமை, கழுத்தில் நெற்றியில் வியர்வை, பிரலாபம்.
50.	மூர்ச்சைச்சுரம்	மூர்ச்சை, பிரலாபம், சூலை, ரத்த மூத்திரம், கைகால் சீதளம், சுவாசம்.
51.	வதுசீத சுரம்	நாக்கில் சிவந்த முள்ளு, கண்சிவப்பு, தேக வீக்கம், இரைப்பு.
52.	நாசி சுரம்	தேகம் சுழற்றல், காதில் - தலையில் இரைச்சல், அதி சீதளம், பிரலாபம்.
53.	தாபசுரம்	தேக எரிச்சலுடன் சீதளம், பிரலாபம் சுவாசம், மார்பு எரிவு.
54.	சோஷைச்சுரம்	சர்வாங்க சீதளம், தோஷை, பிரலாபம், மூர்ச்சை.
55.	அக்னி மந்தசுரம்	வாந்தி, இரைப்பு, இருமல், எரிச்சல்.
56.	ஈனதோனிசுரம்	தேக முற்றிலும் சீதளம், ஈனதோனி பிரலாபம், சூலை, வியர்வை, வாயில் கசப்பு நுரை.
57.	ஆதபச்சுரம்	முகத்தில் குங்குமப்பூ நிறம், மார்பு அடைப்பு, கை கால் நடுக்கல், பேதி பிரலாபம்.
58.	ரணசுரம்	சூலை, தேக முற்றிலும் நோவு, கைகால் சீதளம், பிரமை, சயித்தியம், சுவாசம்.
59.	சுவேத சுரம்	அதி வியர்வை, மூர்ச்சை, சுவாசம், தலை-கால் நோவு, கை - கால் மஞ்சள்.
60.	கிருமிச் சுரம்	வயிற்றுசூலை, சர்வாங்க சீதளம், வாயிலும் அபானத்திலுமிருந்தும் நாக்குப் பூச்சிகள் விழுதல், வயிறு உப்பல் - கனத்தல் - வாந்தி.

61.	அரித்திராசுரம்	தேக முற்றிலும் மஞ்சள் நிறமான தடிப்புகள், முகத்தில் எண்ணெய் போல் பிசுபிசுப்பு, கீல்களில் வீக்கம்.
62.	உதய சுரம்	சுரம் உதய காலத்தில் காணும், கை கால் சீதளம் பிரலாபம்.
63.	மத்தியானசுரம்	சுரம் மத்தியான காலத்தில் காயும், நெற்றி யில், கண்டத்தில் வியர்வை, அதிமூத்திரம்.
64.	மாலை சுரம்	சுரம் மாலை காலத்தில் காயும், குளிர் காணும், பிரலாபம், வாய் கசப்பு, வாந்தி.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் சொல்லப்பட்ட பயிரவ மாத்திரை, சுரபூபதி மாத்திரை, பானுபிரகாச மாத்திரை, பாஷாண மாத்திரை, சந்திரோதய மாத்திரை, திரிலோகாக்ஷாமணி மாத்திரை, நமசிவாய செந்தூரம், வீசபத்திரசிந்தாமணி, பஞ்சாக்ஷரசெந்தூரம், உலகோத்தம செந்தூரம் முதலிய அநேக மருந்துகளில் எதை கொடுத்த போதிலும் குணமாகும்.

சுர ரோகமுள்ளவர்கள் மருந்தைச் சாப்பிடாவிடில் அடியில் கண்ட பத்து அவஸ்தைகளை அடைவார்கள். அவைகளாவன 1வது கொஞ்சம் ஞாபகம் இருத்தல் 2வது முன் இறந்தவர்களைக் கண்ணில் கண்டு பேசுதல் போலிருத்தல் 3வது சித்த பிரமையாகுதல், 4-வது மேல் மூச்சு வாங்குதல், 5வது விழித்தவிழி விழித்தது போலிருத்தல் 6வது வேற்றுக் குரலுண்டாகுதல் 7வது சரீர முழுவதும் மரண எரிச்சல் உண்டாகுதல், 8வது தன் கையினால் முகத்தைத் தடவிக் கொள்ளுதல், 9வது சர்வாங்கம் சிலேஷ்ம வியர்வை உண்டாக்குதல், 10-வது சரீரத்தை விட்டு ஆவியானது நீங்குதல் என்று அறிக. இந்த 10 அவஸ்தைக்குள் 3-வது அவஸ்தை வரையில் வைத்தியர்கள் வைத்தியஞ் செய்யலாம் என்று தன்வந்திரியார் சொல்லுகிறார்.

சந்நிபாத சுர ரோகங்கள் (13)

காரணம் : தித்திப்பு - புளிப்பு - கசப்பு சுவையுள்ள பதார்த்தங்களை மிதமில்லாமல் புசிப்பதால் வாத பித்தமும் சிலேஷ்மமும் தனித்தனியே அதிகரித்து ஒன்றாய் கூடி மிகவும் அதிகரிப்பது தான் சந்நிபாதம்.

பொது லக்ஷணம் : அதி தாகம், பிதற்றல், தலைவலி, பிரமை, கபம், சுரம், ஒக்காளம், இரைப்பு, வாந்தி, பேதி, கண் சொருகுதல், வியர்வை.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்	வாதாதி தோஷங்கள்				
			அதிகம்	பங்கு	குறைவு	பங்கு	ஜனனியின் ஆயுள் நாள்
1.	சீதாங்க சந்நி	சரீரமுழுவதும் சீதளத்துடன் அதி வேதனை	சிலேஷ்மம்		பித்தம் வாதம்	1 2	15
2.	கர்னனிக சந்நி	காதின் மூலத்தில் வீக்கம், கேளாமை, வாய் திறக்க கூடாமை, கண்டமிறுகுதல்.	சிலேஷ்மம்	2	பித்தம் வாதம்	1 2	90
3.	அந்தக சந்நி	கடூர சுரம், பிரமை, வீக்கம், பிதற்றல்	வாதம்	2	சிலேஷ்மம் பித்தம்	1 2	10
4.	சித்தவிப்பிரம சந்சி	சுரம்,ஆடல், பாடல், அழுதல், புரளல், எழுந்து விழுதல்	பித்தம்	2	சிலேஷ்மம் பித்தம்	1 2	18

5.	ரக்தீஷ் டீவி சந்நி	ரத்தகோழை கக்குதல், கறுப்பான தடிப்புகள், ரத்தப்புடை	பித்தம்	2	வாதம் சிலேஷ் மம்	1 2	10
6.	தாந்திரீக சந்நி	மிக அசதி, பெருமூச்சு, ஆயாசம், நாக்கில் கறுப்பு முள்ளு	சிலேஷ் மம் பித்தம்	2 2	வாதம்	2	25
7.	புக்னநேத் திர சந்நி	கண்கள் சிவப்பு, சிரசு தொடை விலா கீல் களில் வலி	வாதம்	2	பித்தம் சிலேஷ் மம்	2 2	8
8.	பரலாப சந்நி	பலவித பிதற்றல் கால் வீக்கம்	வாதம்	2	பித்தம் சிலேஷ் மம்	1 2	14
9.	ஜிம்மக சந்நி	நாக்கில் முள்ளு கழுத்தைத் துடைத்துக் கொள்ளுதல்	சிலேஷ் மம்	2	வாதம் பித்தம்	2 2	10
10.	ருத்தாக சந்நி	சர்வாங்க நோவு, அதிகரிச்சல்	பித்தம்	2	வாதம் சிலேஷ் மம்	2 2	20
11.	அபிநியாச சந்நி	3 நாடியும் படபடத்து நிற்கும்,அகோ ரமாய் சுரங் காயும் தேக வியாபாரங் கள் நீங்கும்	வாதம் பித்தம் சிலேஷ் மம்	2 2 2			15
12.	கண்ட குப்ச சந்நி	கண்டத்தைக் குறுக்கிப் பிடிப்பதுபோல் தோன்றும்	வாதம் பித்தம்	2 2	சிலேஷ் மம்	2	13

13.	சந்நிக சந்நி	கீல்களில் மிகநோவு அதிகபம்	வாதம் சிலேஷ் மம்	2 2	பித்தம்	2	7

மேல் சொல்லிய சந்நிபாதங்கள் ஸ்திரீகளின் ரஜஸ்வல காலத்தில் கண்டால் சூதகஜன்னி, பிரசவித்தபிறகு கண்டால் பிரசவ ஜன்னி, கருப்ப காலத்தில் கண்டால் கருப்பஜன்னி, முகத்தில் விகாரங்கண்டால் முகஜன்னி, ரணத்தால் கண்டால் ரணசந்நி, தேகம் அலுத்தி மந்தமாயிருக்கையில் அப்பியங்கஸ்நானஞ் செய்து ததியோதனம் சாப்பிட்டு சையோகம் செய்த உடனே கண்டால் சுகஜந்நி என்றும் பலவாறாகச் சொல்லுவார்கள்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நம்மால் சொல்லப்பட்ருக்கின்ற திரிலோக சூடாமணி மாத்திரை சந்திரோதய மாத்திரை, சித்தாநந்த பயிரவ மாத்திரை, ரசநந்தபயிரவ மாத்திரை, ரசவீரசெந்தூரம், நமசிவாய செந்தூரம், ருத்திர செந்தூரம், உலகோத்தம செந்தூரம், முதலியவைகள் கொடுக்க குணமாகும்.

4 - 6 - 8 - 9 - 13 இந்த நம்பருள்ளவைகள் சாத்தியம், 2 - 10 - 12 இந்த நம்பருள்ளவைகள் இடத்தின் மேல் சாத்தியம். மற்றவைகள் அசாத்தியமாம்.

தாகரோகங்கள் (5)

காரணம் : வாதம், பித்தம் இவைகளாலுண்டாகும். அன்றியும் 7 தாதுக்கள் இளைத்து மெலிந்தபோது மிகவும் பலத்துடன் மேலிடும்.

பூர்வ ரூபம்: தேக எரிவு, காங்கை, நாக்கு - கண்டம் *குலோமம் இவைகளில் ஜலத்தை தாங்கிய நரம்புகள் உலரல், அதிதாகம், நஞ்சு - நாக்கு - உதடு உலரல், பிரலாபம்.

பொது லக்ஷணம் : பிரமை , எரிச்சல், நடுக்கல், வாய் உதடு - நாக்கு உலரல் தாகம், கண் சோருதல், பிரலாபம்.

நம்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாததாகம்	நெறிகள் அதிரல், காது மந்தம்
2.	பித்ததாகம்	வாய் கசப்பு, மூர்ச்சை, கண் சிவப்பு
3.	சிலேஷ்ம தாகம்	வாய் இனிப்பு, தலைபாரம், வாந்தி நெஞ்சில் முள் சொருகினது போல் தோன்றும்.
4.	திரிதோஷ தாகம்	வாதாதி வாந்தி ரோகங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாக்கும்.
5.	ரசக்ஷயதாகம்	நாக்கு வரக்ஷி, எவ்வித சத்தத்திலும் அசங்கிதம்.

மருந்து : விளாவின தீமுறுகல் பாஷாணத்திராவகம் கலைமான் கொம்பை ஜலம், ஆவாரை லேகியம் முதலிய மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி கொடுத்து வர குணமாகும்.

வாய் ரோகத்தால் தொண்டைக்குள் ஜலம் இறங்காதபோதும் அறிவழிந்தபோதும், நாக்கானது வெளியில் நீண்ட போதும் பிறந்த தாக ரோகங்கள் அசாத்தியம்.

* வலது ஸ்தானத்தின் கீழ் ஜலந்தங்கும் இடம்.

அதிசார ரோகங்கள் (6)

காரணம் : மந்த-கார பதார்த்தங்கள் புசித்தல், 14 வேகவிப்பரதிகளை அடைத்தல், இவைகளால் வாயு அதிகரித்து உதராக்கினியையும் 7 தாதுக்களையும் கெடுத்து மலத்தை ஜலமாக்கி அபானத்தின் வழியாக வெளிப்படுத்தும்.

பூர்வரூபம் : வயிறு - மார்பு குதம் நோதல், மலக்கட்டு, அஜீர்ணம், தேக இளைத்தல், வயிறு உப்பல்.

பொது லக்ஷணம் : உப்பிசம், வயிறு - மார்பு - குதம் நோவு, மலம் ஜலமாகக் கழித்தல், அஜீரணம்.

நம்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத அதிசாரம்	வெளிப்பு - கறுப்பு - மஞ்சள் நிறமான பேதி, வாந்தி, மயக்கம்.
2.	பித்த அதிசாரம்	பச்சை - மஞ்சள் - கறுப்பு - சிவப்பு நிறங்களான பேதி, கைகால் வீக்கம்
3.	சிலேஷ்ம அதிசாரம்	வெளிப்பு - மினுமினுப்பு - அஜீரணமான பேதி அஜீரணம்..
4.	திரிதோஷ அதிசாரம்	வாதாதி அதிசாரங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாக்கும். கைகால் சீதளம், பிரலாபம்.
5.	துக்க அதிசாரம்	துக்கத்தினால் மனம் தபிக்கும்போது வாயு உண்டாகி பித்தத்துடன் சேர்ந்து தண்ணீர் தண்ணீராய் அடிக்கடி பேதியாகும்.
6.	பய அதிசாரம்	பயப்படுங்காலத்தில் பித்தம் உண்டாகி வாயுவுடன் சேர்ந்து சலம் சலமாகவும் கொதிப்பாகவும் அடிக்கடி பேதியாக்கும்.

மருந்து : - கட்டுவாதி சூரணம், லகுகட்டுவாங்க மாத்திரை முதலிய அநேக மருந்து பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியிருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

காரணம் : தாய் தந்தைகளின் வழியாக சரீரத்தில் கூடவே பிறக்கும். அல்லது அதி உஷ்ண பதார்த்தங்களைச் சாப்பிடுவதி னாலும் அதி சையோகம் செய்வதினாலும் சுபாவ தேகத்தில் பிறக்கும்.

மூலரோகங்கள் - 8

பூர்வ ரூபம் : மலக்கட்டு, மாந்தாக்கினி, அடித்தொடை, கண்டசதை, கணுக்கால் நோதல், ஆசனநோதல், அபானவாயு பறித்தல்.

பொது லக்ஷணம் : மாந்தாக்கினி, மலக்கட்டு, அபானவாயு பறித்தல், துர்பலம்.

நம்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதமூலம்	கோவைப்பழம் போல் முளைகள் கண்டு முகம் விரிந்து கூர்மையாயிருக்கும், எரிச்சல் ஆசன நோவு.
2.	பித்த மூலம்	கறுப்பு முனையுள்ள மஞ்சள் சிவப்பு வெள்ளை நிறமான முளைகள் கண்டு அட்டையின் முகம் போலிருக்கும்.
3.	சிலேஷ்ம மூலம்	வட்டம் மினுமினுப்பு - வெளிப்பு உள்ள முளைகள் கண்டு மூக்கின் முளை போலிருக்கும்.
4.	ரத்தமூலம்	அதிவிசேஷமாய் ரத்தங்காங்கையோடு விரேசனமாகி வொழுகும். தேகங்கெடும்.

5.	உட்மூலம் (உடன்பிறப்பு மூலம்)	அபானத்தின் உள்ளுக்குள் முகங்காணப் பட்டு வெகுவேதனை செய்யும்.
6.	பிறமூலம்	பவனவாயில் முகங்கண்டு உள்ளும் புறமுமாயிருக்கும்.
7.	சுட்கமூலம்	முனைசுருங்கி வேதனையை உண்டாக்கும்.
8.	கசிவுமூலம்	எக்காலமும் ரத்தம் கசிந்து கொண்டே இருக்கும்.

மருந்து : அஷ்டமூலநாச எண்ணெய், பிரமாநந்த பயிரவமாத்திரை, ஆனந்தரசவிநோதச்சூர்ணம், சந்திரபிரகாச எண்ணெய் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்தசிந்துவில் நாம் சொல்லிருப்பதால் அவைகளைக் கொடுக்கக் குணமாகும்.

எந்த மூலரோகிக்கு முகம் ஆசனம் பீஜம் நாபி கை கால் வீங்குகிறதோ அந்த மூலரோகம் அசாத்தியம்.

அஜீர்ண ரோகங்கள் (6)

பொது லக்ஷணம் : பொருமல், பேதி அல்லது மலக்கட்டு அபான வாயு, சரீரகனதி.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	விளம்பிகா ஜீர்ணம்	கபவாதத்தால் உண்டாகி வயிற்றில் கல் போல கனத்து நாள்பட அதிவேதனையைச் செய்யும்.
2.	ரசசேஷா ஜீர்ணம்	தலை - மார்பு அதிநோவு.
3.	உற்சுகா ஜீர்ணம்	அஜீர்ணத்தின் மேல் அன்னம் புசித்தல், பொருமல், விருத்தல்.
4.	வாதாஜீர்ணம்	உப்பிசம், சூலை, மலக்கட்டு.

5.	பித்தாஜீர்ணம்	தேகத்தில் தாபனம், கண்சொருதல், பிரமை
6	சிலேஷ்ம ஜீர்ணம்	தாடைகள், கண்கள் அதைப்பு

மருந்து : அஜீர்ண கண்ட கரச மாத்திரை, சண்முகச் சூர்ணம், லவன பஸ்பம், ராஜமார்த்தாண்ட லேகியம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

பயித்திய ரோகங்கள் (6)

காரணம் : வாதாதிகள்அதனதன் வழிதப்பி நடக்குங்காலத்தில் உண்டாகும்.

பொது லக்ஷணம் : - அதயிரியம் ஓடுதல், கல் எரிதல், ஞாபகமறதி.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதபயித்தம்	எழுந்து பிடிக்கப் போகுதல், கைகளைத் தட்டுதல்.
2.	பித்த பயித்தியம்	எழுந்து ஒடுதல், பயமுறுத்தல்.
3.	சிலேஷ்ம பயித்தியம்	ஸ்திரீகளில் விருப்பம், பயமுறுத்தல்
4.	திரிதோஷ பயித்தியம்	வாதாதி பயித்திய ரோகங்களின் லக்ஷணங்களை ஏக காலத்தில் உண்டாகும்.
5.	விஷபயித்தியம்	திரிதல், முகம் கறுப்பு நிறம், கண் சிவப்பு.
6.	வியாதிபயித்தியம்	தேகவெளிறல், அழுத்தல், மனது சிறுத்தல்.

மருந்து : ஸ்ரீதேவி எண்ணெய், உலகோத்ம செந்தூரம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

விஷபயித்தியரோகம் அசாத்தியம், திரிதோஷ பயித்தியரோகம், கஷ்டத்தின் மேல் சாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

மகோதர ரோகங்கள் - (8)

காரணம் : வாயு பதார்த்தங்கள் தினஞ்சாப்பிடுவதால் வாயு அதிகரித்து அன்னபானாதிகளை சரியான காலத்தில் ஜீர்ணிக்க செய்யாததினால் உண்டாக்கும்.

பூர்வரூபம் : அஜீர்ணம் தாகம், சங்கடம், துர்பலம், புரளல், கால்வீக்கம், அடிவயறு நோதல், மலக்கட்டு, உப்பிசம், தொடைக்கவுட்டி, குதம் - மார்பு நாபியில் வேதனை.

பொது லக்ஷணம் : கால்வீக்கம் உப்பிசம், தாகம், அக்கினி மந்தம், மலக்கட்டு, அற்பமூத்திரம், இரைப்பு.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	பிலீகமகோதரம்	அதிநடை அதிசையோகம், இவைகளால் இருதயத்தின் இடது ஸ்தானத்தை விட்டு பீலிகம் நழுக அதிலிருந்து வருகின்ற ரத்தம் பீலிகத்தோடு சேர்ந்து ஆமை முதுகைப் போலாகி பருக்கும். வயிறு பருத்து சிவந்த மஞ்சள் புடைகளுள்ளதாய் கெட்டிப்பட்டிருக்கும்.
2.	எகுர்திமகோதரம்	பிலீகமகோதரம் உண்டாகும் காரணத்தால் இருதயத்தின் வலது ஸ்தானத்தை விட்டு எகுர்தி ஈழுகி மேல் சொல்லிய

		பிலீகமகோதர ரோகத்தைப் போலவே வயிறு பருக்கும்.
3.	பந்திமகோதரம்	இமைமயிர் சேர்ந்த அன்ன பானாதிகளை புகுத்தலினாலுண்டான வாயு அதிகரித்து பித்தம் சிலேஷ்மம் மலம் வயிற்றுக்குள் பந்தித்து அடிவயிற்றுக்கும் குதஸ்தானத் திற்கும் மத்தியில் வீக்கத்தை உண்டாக்கும்.
4.	வாதமகோதரம்	வயிற்றுக்குள் ஆச்சரியமான சத்தம் உண்டாக்கும். சர்வாங்கம் நோதல், வயிறு குதம் கை கால் வீக்கம்.
5.	பித்தமகோதரம்	வயிறு பருத்து புகை - பச்சை நிறமாயும், மற்ற இடமெல்லாம் மஞ்சள் சிவப்பு நிறமாயும், உதடு சுருங்குதலும் உண்டாகும்.
6.	சிலேஷ்ம மகோதரம்	வயிறு கனத்துப் பருத்து வெளுத்த புடைகளும், மினுமினுத்தும், குளிர்ச்சி யையும் உள்ளது. சருமம் - பஞ்சேந்திரங் கள் வெளிறல்.
7.	திரிதோஷ மகோதரம்	வாதாதி மகோதர ரோகங்களின் லக்ஷணங்கள் ஏக காலத்தில் உண்டாக்கும்.

மருந்து :- ராஜ ஏலாதி சூர்ணம், ஆவாரை லேகியம், அயச்செந்தூரம், லிங்கக்குழம்பு முதலிய அநேக மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

சர்வ மகோதர ரோகங்களும் உண்டாகும் பொழுதே கஷ்டத்தின் மேல் சாத்தியம், வயிற்றப் புரைக்குள் ஜலம் நிரையுமுன்னே வைத்தியஞ் செய்யில் சாத்தியம்.

க்ஷய ரோகங்கள் - (4)

பூர்வரூபம் : மிக இருமல், வாயினிப்பு வாய் நீரூறல், அக்கினி மந்தம், அன்னபானாதிகளில் ஈ-மயிர்-எறும்பு-துரும்பு- இருப்பது போல் தோற்றுதல் வாந்தி, அரோசகம், பலஹீனம், ஸ்திரீ விருப்பம்.

பொது லக்ஷணம் : மார்பு - கண்டம் நோவு - கோழை விழுதல் வாயில் துர்க்கந்தம், வாந்தி, அக்கினிமந்தம், வேதனை இருமல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதக்ஷயம்	கறுப்பு வெளிப்பு நிறங்கலந்த கோழை, சிரசு-கண்டம் - தோல் நோவு.
2.	பித்தக்ஷயம்	சிவப்பு - மஞ்சள் கோழை, முகம், கால் கை எரிச்சல்.
3.	சிலேஷ்மக்ஷயம்	வெளிப்பு நிற கோழை, தேகம் சிரசு பாரித்தல்.
4.	திரிதோஷக்ஷயம்	வாதாதிக்ஷய ரோகங்களின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் உண்டாகும்.

க்ஷயரோகம்: என்பது ராஜரோகம், இதற்கு ராஜன் - சுரரோகம், ராஜாத்தி - காமாலை ரோகம், புத்திரன் - ரத்தபித்த ரோகம், சேனாதிபதி - பாண்டுரோகம், மந்திரிகள் - சுவாச ரோகம், காசரோகம் , காவர்காரன்கள் - வாதரோகம் பித்தரோகம், கட்டியக்காரர்கள் - வாந்திரோகம் அரோசக ரோகம், சிநேகிதர்கள் - சோபைரோகம் அதிசார ரோகம், பொக்கிசம் - பீநசரோகம், வாத்தியங்கள், கண்டத் தொனிகள், பரிசனங்கள் - மற்ற அநேக ரோகங்கள்.

மருந்து : திரிலோக ரக்ஷாமணி மாத்திரை, அப்பிரக பஸ்பம், திரிவிக்கிரமரச செந்தூரம், பஞ்சாக்ஷர செந்தூரம், தாளகபஸ்பம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

பக்கநோவு, கறுப்பாகவும், ரத்தம் போலவும் கீழாகவும் கோழை விழுதல், சுரம், இருமல், தேகசுட்கல், பேதி, வயிறு - பீஜ-வீக்கம் இவைகள் கண்டால் அசாத்தியம்.

குன்மரோகங்கள் - (8)

பூர்வரூபம் : மலக்கட்டு, மிக ஏப்பம், குடல் இரைச்சல், உப்பிசம், அஜீர்ணம், அசதி, பலஹீனம்.

பொது லக்ஷணம் : உப்பிசம், வயிற்றுநோவு, மலக்கட்டு, அஜீரணம், வாந்தி.

நம்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதகுன்மம்	வயிற்றில் குத்தல், தயக்கம், குடல்வலி, வயிற்றுவலி, வாய்ப்புளிப்பு.
2.	பித்தகுன்மம்	நெஞ்செரிவு, வாதகசப்பு, சுரம், எரிவு.
3.	சிலேஷ்மகுன்மம்	மார்புதுடிப்பு, இருமல், உப்பல், நாசியில் ஜலம் வடிதல்.
4.	வலிகுன்மம்	வயிற்றில் பலவித நோவு, வாந்தி, சுரம், உப்பிசம்.
5.	எரிகுன்மம்	அடிவயிற்றில் எரிவு, உப்பல், பேதி, புளி ஏப்பம்.
6.	சத்திகுன்மம்	மலங்கறுப்பு, பொருமல், வாந்தி

7.	பாயுருகுன்மம்	செரியாமை உப்பல், கட்டி உருளல், வயிறு விகுத்தல்.
8.	சூலைகுன்மம்	மேல்வயிற்றுவலி, குத்தல், எரிவு ஏப்பம்

மருந்து : ராஜசங்குவடி மாத்திரை, குன்மகுடாரிசூர்ணம், கலிங்காதிச்சூர்ணம், பஞ்சாக்ஷரசெந்தூரம், திரிமூர்த்தி செந்தூரம் முதலிய அநேக மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியிருப்பதால் அவைகளை கொடுக்க குணமாகும்.

குன்மரோகத்தில் கட்டியாகி கனத்து உயர்ந்து ஆமையோட்டைப் போலாகுமாகில் அசாத்தியம்.

கிரிச்சர ரோகங்கள் (4)

பொது லக்ஷணம் : - வெகு வேதனையின் மேல் கொஞ்சங் கொஞ்சமாக மூத்திரத்தை இறங்கச் செய்யும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதகிரிச்சரம்	ஆண்குறி அடிவயிறு தொடைக்கவட்டு, இவைகளில் வேதனையுடன் மூத்திரம் இறங்கும்.
2.	பித்தகிரிச்சரம்	நீர்த்தாரையில் எரிச்சலுடனும் நோவுடனும் சிவப்பு மஞ்சள் நிறமான மூத்திரம் இறங்கும்.
3.	சிலேஷ்ம கிரிச்சரம்	ஆண்குறி - அடிவயிறு வீக்கத்துடன் பிசினை போல் மூத்திரம் இறங்கும்.
4.	திரிதோஷ கிரிச்சரம்	வாதாதி கிரிச்சரங்களுக்குள்ள லக்ஷணங்களை ஏகக் காலத்தில் உண்டாக்கும்.

மருந்து : ராஜஅப்பிரேக செந்தூரம், மரத்து வெள்ளைநவநீதம், மாகரஜதபஸ்பம் முதலிய அநேக மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

மூர்ச்சைரோகம் - (4)

பொது லக்ஷணம் : மார்பு வலி, பிரமை, மூர்ச்சை, வாயில்ஜலம் வடிதல், எரிச்சல், தாகம்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதமூர்ச்சை	கறுப்பு - சிவப்பு - நீல நிறமாக ஆகாயத் தைத் தோற்றும். தேகம் கறுப்பு நிறம்.
2.	பித்த மூர்ச்சை	மஞ்சள் - சிவப்பு நிறமாக ஆகாயத்தைத் தோற்றும். கண்கள் சிவப்பு - மஞ்சள் நிறம்.
3.	சிலேஷ்ம மூர்ச்சை	மேகங்கள் கம்மினாற்போல் ஆகாயத்தை தோற்றும். தேகம் கனத்திருக்கும்.
4.	திரிதோஷ மூர்ச்சை	வாதாதி மூர்ச்சை ரோகங்களின் லக்ஷணங்களை ஏக காலத்தில் உண்டாக்கும்.

மருந்து : மகாவங்கபஸ்பம், கருவங்க பஸ்பம் ஸ்ரீதேவி எண்ணெய் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

மூத்திர ரோகங்கள் (12)

பொது லக்ஷணம் : - நீர்க்கட்டு, எரிவு, ஆண்குறிநோவு.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்	காரணங்கள்
1.	மூத்திரசங்க வாதவஸ்தி	அடிவயிற்றில் மூத்திரம் தங்க அதிநோவு.	வாயு வால்
2.	மூத்திரவாத குண்டலி	அடிவயிற்றில் நோவு மூத்திரம் துளித்துளியாய் இறங்கும்.	ஷை
3.	முத்திரவாதஷ் மலம்	அடிவயிற்று கெட்டியாய் உயர்வாக வீங்கும்	ஷை
4.	மூத்திர பிந்து வாதவஸ்தி	மூத்திரம் பிந்து பிந்துவாக இறங்கும்.	ஷை
5.	மூத்திராதீதம்	மூத்திரம் தங்கி அற்ப வேதனையுடன் இறங்கும்.	வாத பித்தத்தால்
6.	மூத்திரோச் சங்கம்	ஆண்குறிநோவு, மூத்திரம் தங்கி கசியும்.	பித்தத்தால்
7.	மூத்திரகிரந்தி	மூத்திரப் பையின் முகம் சுருங்கி மூடிக் கொள்ளும்.	ஷை
8.	விட்லிகாத மூத்திரம்	மூத்திரம் மலத்தின் துர்க்கந்தமாக இறங்கும்.	ஷை
9.	மூத்திர சுக்கிலம்	மாவைக் கரைத்தது போல் மூத்திரம் இறங்கும்.	ஷை
10.	மூத்திர சாதம்	சிவப்பு - வெளிப்பு - மஞ்சள் நிறமாக மூத்திரமும் சுக்கிலமும் இறங்கும்.	ஷை
11.	உஷ்ணவாத மூத்திரம்	ரத்தங்கலந்த மஞ்சள் நிறமாக எரிச்சலுடன் மூத்திரம் இறங்கும்.	ஷை

12.	மூத்திரக்ஷயம்	அடிவயற்றில் நோவு, மூத்திரத் தாரையில் எரிவு.	ஷை

மருந்து : ராஜதபஸ்பம் முதலிய அநேக அவுஷதங்கள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

அஸ்மரி ரோகங்கள் (5)

பூர்வரூபம் : - நாபிநோவு மூத்திரம் ஆட்டுமூத்திர வாசனையுள்ளதாய் அதிவேதனையுடன் இறங்கும். அப்போது சுரம் ஆரோசிகம் காணும்.

பொது லக்ஷணம் : - நாபி சிரசு - கீழ்வயிறு வேதனை, ஆட்டு நீர் வாசனையுடைய மூத்திரம் நோவுடன் இறங்கல், தாபனம்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத அஸ்மரி	நீர் கறுத்து துளித்துளியாக விழுதல், பற்கடித்தல், ஆண்குறியைத் தெய்த்தல்.
2.	பித்த அஸ்மரி	ஆண்குறிமுனை கறுத்தல், சிவப்பு வெளிப்பு மஞ்சள் நிறமான மூத்திரம்.
3.	சிலேஷ்ம அஸ்மரி	வெளிப்பாய் வழுவழுப்பாய் தேன்போல் மூத்திரம் இறங்கும்.
4.	சுக்கில அஸ்மரி	சையோகத்தில் விழுகின்ற விந்துவை அடக்குவதால் அவ்விந்து அண்டத்தின் மத்தியில் தங்கி வாயுவால் உலர்ந்து அண்டவீக்கம், அடிவயிற்று வலி உண்டாக்கும்.
5.	சர்க்கரா அஸ்மரி (கல்லடைப்பு)	சுக்கில அஸ்மரி ரோகத்தில் பீஜத்தின் மத்தியில் உலர்ந்த விந்து

		மணல் கடுகு - பயறு - கடலை இலந்தைக் காய் அளவாக கல்லுகளாகத் திரட்டி நீரோடு சேர்ந்து நாளத்தின் வழியாக வெளியில் விழும். வாயு அதிகரித்தால் பக்கநோவு கண்டு ஒருதுளி மூத்திர மாகிலும் இறங்காமல் அதிவேதனை செய்யும்.

மருந்து : மகா ரஜதபஸ்பம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

பீஜத்தில் வீக்கம், நோவு, நீர்க்கட்டு உண்டாயிருக்கின்ற அஸ்மரி ரோகம் அசாத்தியம்.

அபஸ்மார ரோகங்கள் (4)

காரணம் : வாதமும் பித்தமும் விருத்தி அடைந்து புத்தியை தெளிவாக்கும் நரம்புகளில் வியாபித்து உண்டாக்கும்.

பூர்வரூபம் : புத்தித் தெளிவு நீக்குதல், மூர்ச்சை, அதிவியர்வை, பிரமை, இமைநோவு, விகாரமான பார்வை, காது கேளாமை, கண்களில் இருட்க்கம்மல்.

பொது லக்ஷணம் : பற்கடித்தல், வாயில் நுரைவருதல், கைகால் உதறல், நாக்கு கண் புருவம் விகாரப்படல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத அபஸ்மாரம்	நித்திரையில் கண்கள் விழித்தல், பற்கடித்தல், 2 தொடையும் ஒடிந்து விழுந்து போவது போலிருத்தல், கண் முகம் நகம் சருமம் கறுத்தல்.

2.	பித்த அபஸ்மாரம்	தேகம் மஞ்சள் நிறம், பூமியின் மேல் கையால் அறைதல், கண் சிவப்பும் வெளிப்பும்.
3.	சிலேஷ்ம அபஸ்மாரம்	வெகுமறதி, வெறிசேஷ்டை, கண் நகம், முகம் வெளிறல்.
4.	திரிதோஷ அபஸ்மாரம்	வாதாதி அபஸ்மார ரோகங்களின் லக்ஷணங்கள் ஏக காலத்தில் உண்டாகும்.

மருந்து : காலப் பிரவநஸ்யம், மகாகருவங்க பஸ்மம், மகாவங்க பஸ்மம், முதலிய அநேக அவுஷதங்கள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியிருக்கிறபடி செய்து கொடுக்க குணமாகும்.

திரிதோஷ அபஸ்மாரம் அசாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

வலிப்பு (வலி) ரோகங்கள் - (5)

காரணம் : - மூளை கொதிப்பு, மூளை பலஹீனம், கெட்ட ரத்தம் மூளைக்கு செல்லுதல், கிருமிகள் அதிகரித்திருத்தல்.

காரணம் : - முகத்தின் நரம்புகள் சுழிந்து வெட்டுதல், நித்திரையில் அலறி எழுந்திருத்தல், கை கால் பெருவிரல்கள் உட்வளைதல், கரும்புள்ளி விரிந்து அகன்று தோன்றுதல், நித்திரையில் பற்கடித்தல்.

பொது லக்ஷணம் : - கால்கள் முறுத்துக் கொள்ளுதல், பற்களை இளித்து மூடல், மூர்ச்சை, கோழை.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	குதிரைவலி	மூச்சை உண்டாகி கைகால் அசைவறக் கிடக்குதல், பற்களை இளித்து மூடல், சிரசில் கழுத்தில் வியர்வை.
2.	முயல்வலி	வாயுவினால் உண்டாகி வாயிலிருந்து நுரை வருதல், கண் கை கால்கள் முறுக்குதல், நெருப்பு ஜலம் ஜனசங்கை கண்டால் உண்டாகும்.
3.	காக்கை வலி	வாத சிலேஷ்மத்தால் உண்டாகி கண்கள் விழிக்குதல், மலமூத்திரம் இறங்குதல், கோழை விழுதல், கால்கள் முறைத்துக் கொள்ளுதல்.
4.	பிராமகண்டவலி	சிலேஷ்மத்தால் உண்டாகி கால் கைகள் நீட்டித் துடிக்குதல், ஆகாயத்தைப் பார்க்குதல்.
5.	குமரகண்டவலி	வாத சிலேஷ்மத்தால் உண்டாகி முகம் கழுத்து முறுக்கி வைக்குதல் கண் செவி தாடை உதடு கோணுதல், சந்நிபாதலக்ஷணங்களிருத்தல்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் வலி ரோகங்களுக்கு சொல்லிய மருந்துகளை செய்து கொடுக்க குணமாகும்.

பரமகண்டவலி ரோகம் அசாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

அண்ட ரோகங்கள் - (6)

காரணம் : வாதாதிகளின் தோஷங்களால் உண்டாகின்றன.

பொது லக்ஷணம் : சுரம், வேதனை வீக்கம் மேல் இழுத்துக் கொள்ளதல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	குமுறல் அண்டம்	துருத்திபோல் பீஜம் பருத்து கீழ் இறங்கவும் மேல் யேறவும் சமுத்திர கோஷம் போல் இரைச்சலும் காணும்.
2.	நீர் அண்டம்	நரம்புகளின் வழியாக துர்நீர் சென்று பீஜம் பருத்து சுரம், வேதனை, உண்டாக்கும்.
3.	குடல் அண்டம்	குடல் அண்டவிருத்தி ரோகத்திலுள்ள லக்ஷணங்களை உண்டாக்கும். ஆனால் வீக்கமில்லாமல் பருத்து சிலவேளை வேதனையைச் செய்யும்.
4.	வாதசதை அண்டம்	வாயு அண்டத்தில் சேர்ந்து வரம்பை உண்டாக்கி சதை அடைத்து தடித்து நாளுக்கு நாள் மாமிசத்தால் நிரையப்பட்டு பெரிதாகும். இது கறுப்பு நிறம்.
5.	பித்தசதை அண்டம்	ஷை இது மஞ்சள் நிறம்.
6.	சிலேஷ்ம அண்டம்	ஷை இது வெளுப்பு நிறம்.

மருந்து : முடக்கத்தான் எண்ணெய், வாதராக்ஷச எண்ணெய் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லி இருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

குடல் விருத்தி ரோகங்கள் - (7)

காரணம் : வாயு அதிகரித்து அதோமுகமாக அண்டங்களுக்குள் பரவி வீக்கம், சூலை உண்டாக்கி நாபி நரம்புகளின் வழியாக ஆண்குறியில் சென்று அங்குள்ள நரம்புகளுக்கும் அண்ட நரம்புகளுக்கும் அதிவேதனையைச் செய்வதால் குடல் விருத்தி ரோகம் உண்டாகின்றது.

பொது லக்ஷணம் : - எரிச்சல், நோவு துடிப்பு, கதகதப்பு.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதக்குடல் விருத்தி	வாயு குடலில் தங்கி பருக்க செய்து பிறகுவயிற்றை பருக்கப் பண்ணி அதிவேதனை செய்யும் குடல் ஸ்தானம் கடினமாயும், தடிப்பாயும், உஷ்ணமாயும், புண்போல் நோவாயுமிருக்கும்.
2.	பித்தக்குடல் விருத்தி	பித்தம் குடலில் தங்கி பருக்கச் செய்யும், குடலின் ஸ்தானம் அளிந்த அத்திப் பழத்தைப் போலிருப்பதுமன்றி கதகதப்பும், எரிச்சலும் காணும்.
3.	சிலேஷ்ம குடல் விருத்தி	சிலேஷ்மம் குடலில் தங்கி பருக்கச் செய்யும், குடலின் ஸ்தானம் கெட்டியாயும், கனமாயும், நமைச்சல் சூலை உள்ளதாயுமிருக்கும்.
4.	மேதோகுடல் விருத்தி	குடல் மேதோதாதுவினால் பருக்கும், குடலின் ஸ்தானம் அளிந்த பனம் பழத்தைப் போலிருக்கும் அன்றியும் சிலேஷ்ம குடல் விருத்தி ரோக லக்ஷணங்களும் உண்டு.
5.	ரத்தக்குடல் விருத்தி	ரத்தம் குடலில் தங்கி பருக்கச் செய்யும். குடல் இருக்கும் ஸ்தானத்தில் சிறு கொப்பளங்களிருப்பதாக யூகிகளுக்கு

		தோற்றும், அன்றியும் பித்த குடல் விருத்தி ரோக லக்ஷணங்களும் உண்டு.
6.	மூத்திரகுடல் விருத்தி	மூத்திரத்தை அடக்குவதாலுண்டாகி சுருக்குடன் துளித்துளியாக நீர் இறங்கும். பிரதி தினமும் தங்கிய மூத்திரம் குடலை பருக்கச் செய்யும். குடல் ஸ்தானம் நோவு-மிகுந்துள்ளது. மூத்திரத் துவாரத்திற்கு கீழ் ஒரு நரம்பு சுறுட்டிக் கொண்டிருக்கும்.
7.	குடல் அண்ட விருத்தி	குடலிலுள்ள வாயு அதிகரித்து குடலை அதோ முகமாக நழுகச் செய்து தொடை கவுட்டிகளிலிறங்கி வீக்கத்தை உண் டாக்கி பீஜக்குழிக்குள் பந்து வந்து மோதுவது போல் மோதி நோவை உண்டாக்கும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லிய முடக்கத்தான் எண்ணெய், வாதராக்ஷச எண்ணெய் முதலியவைகள் கொடுக்க குணமாகும்.

கறுப்பு - சிவப்பு - வெளிப்பு நிறமான கண்கள் உண்டாயிருக்கும் குடல் விருத்தி ரோகங்கள் அசாத்தியம்.

வாந்தி ரோகங்கள் - (5)

காரணம் : - சுபாவ குணத்தையுடைய உதானவாயு வாதபித்த சிலேஷ்மங்களை மேல்நோக்க செய்வதால் உண்டாக்கும்.

பூர்வரூபம் :- வாயில் நீர் ஊறல், துக்கம், அரோசகம், வாயில் உப்புக் கரித்தல்.

பொது லக்ஷணம் : மார்புநோய், வாய்வறளல், தாகம், மூர்ச்சை, இருமல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத வாந்தி	நொரையோடு கூட துவர்ப்பு ஜலமாக வாந்தியாகும்.
2.	பித்த வாந்தி	மஞ்சள் பச்சை நிறமாக ரத்தத்துடன் புளிப்புங்காறமுமாக வாந்தியாகும்.
3.	சிலேஷ்ம வாந்தி	வழுவழுப்பான தடித்த கோழையாக வாந்தியாகும்.
4.	கிருமி வாந்தி	மார்பு துடித்தல் - நோதல், வயிற்று வலி, இவைகள் உண்டாகி வாந்தியாகும்போது கிருமிகள் விழும்.
5.	திரிதோஷ வாந்தி	கசப்பு - இனிப்பு- உவர்ப்புயுள்ள ஜலம் வாந்தியாகும்.

மருந்து : திப்பிலிரசாயனம், ராஜமார்த்தாண்டலேகியம், பஞ்சமுகச் சூர்ணம், முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லி இருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

திரிதோஷ வாந்தி அசாத்தியம். மற்றவைகள் சாத்தியமாம்.

பீலிக ரோகங்கள் - (4)

காரணம் : - அதிபோஜனம், அஜீரணம், அதிநடை, மேடுபள்ளந்தாண்டல், ஈரமில்லாத அன்னஞ் சாப்பிடுதல் இவைகளால் பிலீகம் குலுங்கி வயிற்றில் இறங்கி

அதிஉபத்திரவத்தைச் செய்யும், கட்டி போல் தோற்றும்.

பொது லக்ஷணம் : வயிறு உப்பல், மலக்கட்டு, அஜீரணம், வயிற்றில் கட்டிபோல் தோற்றதல்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத பிலீகம்	தினம் வயிறு உப்பல், வேதனை கட்டிபோல் தோற்றுதல்.
2.	பித்த பிலீகம்	இருதயத்தின் இடது பக்கத்தில் மொத்தையாக தோற்றும் அதிவேதனை.
3.	சிலேஷ்ம பிலீகம்	இரைப்பு, இருமல், வாதபித்த லக்ஷணங்கள் காணுதல்.
4.	திரிதோஷ பிலீகம்	வாதாதி பிலீகங்களின் லக்ஷணங்கள் ஏக காலத்தில் உண்டாக்கும்.

மருந்து : சரீர வியவக்ஷதசாஸ்திரத்தால் பிலீக ரோகமுண்டா யிருக்கும் ஸ்தானத்தின் உறுப்புகளை அறிந்து பிராண ரக்ஷாமிர்தசிந்துவில் சொல்லிய புளியாரை கிருதம் முதலிய மருந்துகளை செய்து கொடுக்க குணமாகும்.

வாதபிலீகம் அசாத்தியம், மற்றவைகள் நெல்லிக்காய் அளவுக்கு சிறுதான கட்டியாய் இருக்குமாகில் சாத்தியம்.

காமாலை ரோகங்கள் - (13)

காரணம் : - பித்த பதார்த்தங்களை புசித்தலினாலும் அதி சையோகம் செய்வதினாலும் வயிற்றுக் குள்ளுள்ள நரம்புகளை அநுசரித்த பித்தமானது

ரத்தமாமிசங்களைத் தகித்துக் காமாலை ரோகத்தை உண்டாக்கும். காமாலை - மாதர் இச்சையை ஒழிப்பதாம்.

பொது லக்ஷணம் : - முகம் - வாய் - கண் - மூத்திரம் - சருமம் மஞ்சள் நிறமும், துர்க்கந்தமும், தாகம் அஜீரணம், காங்கை, அதிபித்தம், அன்னத்துவேசம்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வறட்காமாலை	கைகால் ஒய்ச்சல், மூத்திரம், கறுப்பு - சிவப்பு, தேகம் கறுத்தல், குத்தல்.
2.	ஊதுக்காமாலை	தேகவீக்கம், கண் - கை - கால் சருமம் வெளிப்பு.
3.	மஞ்சட்காமாலை	மூத்திரம் - கை - கால் - முகம் உண்ணாக்குக்கு மஞ்சள் நிறம், தேக வீக்கம்.
4.	தொந்தக் காமாலை	அடிவயிறு வீக்கம், எரிச்சல், கடுப்பு, குளிர், நாக்கு புளிப்பு.
5.	வாதகாமாலை	தேகவீக்கம், பொருமல், மலக்கட்டு, கண்பருத்தல்.
6.	பித்தகாமாலை	அஜீரணபேதி, மயக்கம், அதி சுவாசம்.
7.	சிலேஷ்ம காமாலை	கண்சிவப்பு, தலை - முகம் வியர்வை, இருமல், சுவாசம், நடுக்கல்.

8.	சிலேஷ்ம பித்த காமாலை	கை - கால் - முகம் வெளிப்பு, வாந்தி மயக்கம்.
9.	வாத சிலேஷ்ம காமாலை	கண் - நாசி வியர்வை தேகவீக்கம், இருமல்.
10.	குன்ம காமாலை	கண் - மூத்திரம் மஞ்சள், வாந்தி, அடி வயிற்றுவலி, இருமல், இரைப்பு, புரளல்.
11.	அழகு காமாலை	தேக மினிமினித்தல், ஆண்குறி எரிவு - உப்பிசம்.
12.	செங்கமலக் காமாலை	உமிழ்நீர் - நாக்கு - உண்ணாக்கு மஞ்சள் நிறம், மூத்திரம் சிவப்பு அல்லது மஞ்சள் நிறம்.
13.	கும்பகாமாலை	இராவியர்வை, தேகம் - மூத்திரம் மஞ்சள் நிறம் தேகம் கண்டு கண்டாக வீங்குதல், சரீரம் சோருதல்.

மருந்து : மண்டூர செந்தூரம், அயச்செந்தூரம், இராஜ அமிர்த சஞ்சீவிலேகியம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லி இருப்பதால் அவைகளை கொடுக்க குணமாகும்.

1 - 2 - 3 - 6 - 7 - 8 - 9 இந்த நம்பருள்ளவைகள் சாத்தியம், மற்றவைகள் அசாத்தியமாம்.

சோபை ரோகங்கள் - (9)

காரணம் : மண் - சாம்பல் தின்னுதல், பிரமை, மலை நீர்க்கரை வாசஞ் செய்தல், சுரம், சில்விஷங்கள் இவைகளால் உண்டாகும்.

பூர்வரூபம் : - தேககனதி, நரம்புகளில் வீக்கம், வாந்தி இரத்தமில்லாமை.

பொது லக்ஷணம் : - நரம்புகளில் வீக்கம், அஜீர்ணம், தாபனம், நடுக்கல், பிரமை, இருமல், மயக்கம், ரத்தமில்லாமை.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதசோபை	சரீரங்குலுக்குதல், எரும்பு ஊருவது போல் தோற்றுதல், வீக்கம், சுரம் தேகவெளிப்பு.
2.	பித்தசோபை	வியர்வை கசிதல், பேதி நடுமுதுகில் வீக்கம், இருமல், எரிச்சல், மயக்கம்.
3.	சிலேஷ்ம சோபை	சர்வாங்க வீக்கம், மிக பேதி கிறுகிறுப்பு, விழியில் அனல் வீசுதல்.
4.	வாத சிலேஷ்ம சோபை	வாத சோபைக்கும், சிலேஷ்ம சோபைக் குமுள்ள குணங்களை உண்டாக்கும்.
5.	வாதபித்த சோபை	வாதசோபைக்கும் பித்த சோபைக்குமுள்ள லக்ஷணங்களை உண்டாக்கும்.
6.	சிலேஷ்மபித்த சோபை	சிலேஷ்ம சோபைக்கும் பித்த சோபைக்குமுள்ள லக்ஷணங்களை உண்டாக்கும்.
7.	விஷசோபை	விஷஜெந்துக்களின் மூத்திரம் தெரித்தல், மலமூத்திர சுக்கிலத்தால் நனைந்த ஆடையுடுத்தல் இவை களால் உண்டாகி குளகுளப்பதும்,

		அசைவதும் விரைவில் எரிச்சலை தருவதாக இருக்கும்.
8.	அபிகாத சோபை	ஆயுதக்காயம், பனி, காற்று முதலியவை களால் உண்டாகி சர்வங்கம் வியாபித்து அதிசிவப்பாயும் காங்கையாயும், பித்த சோபைக்குள்ள லக்ஷணங்களை பெற்றிருக்கும்.
9.	திரிதோஷ சோபை	வாதாதி சோபைலக்ஷணங்களுடன் தேகவீக்கம், சுரம், வயிறு - ஆசனங் கடுப்பு, கைகால் துவளல் உண்டாகும்.

மருந்து : அயக்காந்தவடகம், ராஜசிந்தாதிலேகியம், நாராயண மண்டூர செந்தூரம், திரிலோக செந்தூரம் முதலிய அநேக அவுதஷங்கள் பிராணரக்ஷாமிர்தசிந்துவில் நாம் சொல்லி இருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

உபத்திரவமில்லாமல் வீக்கம் மாத்திரம் இருந்தால் சாத்தியம்.

பாண்டு ரோகங்கள் - (5)

காரணம் : - அதிசாரகெதி கண்டிருக்குங் காலத்தில் உப்பு-புளி அதிவிசேஷமாக சேர்த்துக் கொள்ளுவதாலும், பகல் நித்திரையாலும் உண்டாகும்.

பூர்வரூபம் : மார்பு அதிரல், அரோசகம், மூத்திரம் மஞ்சள் நிறம், தேகம் இளைத்தல் வியர்வை அக்கினிமந்தம்.

பொது லக்ஷணம் : தேகவீக்கம், அஜீர்ணம், சுவாச மந்தம், மலபந்தம், சுரம், மூர்ச்சை, கபம், இரைப்பு.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத பாண்டு	தேகம் நருக்கி வைத்தது போல் இருத்தல்- நோதல், நடுக்கல், மலம் - மூத்திரம் - நகம் - கண் சிவப்பும், கறுப்பும்.
2.	பித்த பாண்டு	மலம் - மூத்திரம் - நரம்பு பச்சையும் மஞ்சளும், கண்களில் இருட்கம்மல், தாகம்.
3.	சிலேஷ்ம பாண்டு	மலம் - மூத்திரம் - நரம்பு வெளிப்பு, ரோமச் சிலிர்ப்பு வாந்தி
4.	திரிதோஷ பாண்டு	வாதாதி பாண்டுகளின் லக்ஷணங்களை ஏககாலத்தில் உண்டாகும்.
5.	விஷபாண்டு	சரீரம் - நகம் வெளிப்பு, நரம்புவலி, பேதி, வாந்தி, வீக்கம், மார்பு கனத்தல்.

மருந்து : நாராயண மண்டூர செந்தூரம், அயபஸ்மம், ராஜா அமிர்த சஞ்சீவி லேகியம், முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியிருப்பதால் அவைகளை கொடுக்க குணமாகும்.

பாண்டு ரோகிகளுக்கு வஸ்துகள் மஞ்சள் நிறமாக பார்வைக்குத் தோற்றுவதும், நகங்களிலும், கண்களிலும் மஞ்சள் நிறமும் உண்டாகில் அசாத்தியம்.

காச ரோகங்கள் - (5)

காரணம் : - தேகத்தில் அக்கினி அதிகரித்து நெஞ்சு புண்ணாகி வாயு அதோமுகமாக மேல் சென்று மார்பில் தங்கி உண்டாகும்.

பூர்வரூபம் :- கண்டத்தின் உள் பக்கத்தில் நமைச்சல் முள் சொருகினது போலிருத்தல், இருமல்

கண்டதோனியை கெடுதல், முதுகு - மார்பு விலாபக்கம் நோதல்.

பொது லக்ஷணம் : இருமல், இரைப்பு, அதிவேதனை, கோழை, மார்புக் குத்தல்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதகாசம்	வாதாதி வஸ்துக்களை சாப்பிடுவதால் வாயு அதிகரித்து சிரசு - விலாப்பக்கம் - மார்பு குத்தல், சோருதல், நெஞ்சில் இளகிய கோழை.
2.	பித்தகாசம்	கண் - கோழை - நகம் மஞ்சள் நிறம், இரத்த வாந்தி - பிரமை, தாகம் கண்களில் இருட்கம்மல்.
3.	சிலேஷ்ம காசம்	மார்பு தலை நோவு, நெஞ்சுக்குள் எதுவோ பூசினது போலிருத்தல், வாந்தி, ரோம முறைத்தல், நாசியில் மாராத ஜலம் வடிதல்.
4.	ரத்தகாசம்	தேகத்திலுள்ள சுபாவ வாயுவானது யுத்தம் - சிலம்ப முதலிய சாதகங்களால் அதிக ரித்து பித்தத்துடன் சேர்ந்து கண்டத்தில் வேதனை, சுத்தரத்தமாவது - மஞ்சள் நிறத்துடன் ரத்தமாவது உருண்டையாக வாவது வாந்தி, மார்பில் ஊசிகளால் குத்துவது போலிருத்தல், சுரம், நெஞ்சில் பிறாவின் சத்தம், ரத்தமூத்திரம்.
5.	க்ஷயகாசம்	வாதாதிகளால் ஏழு தாதுக்களும் அதிகரித்து துர்கந்தமும் மஞ்சள் நிறமும் ரத்தமுஞ் சேர்ந்த கோழை வாந்தி, மார்பு பக்கங்கள் நோவு.

மருந்து : - உலகோத்தம செந்தூரம், திரிலோக ரக்ஷாமணி மாத்திரை, பஞ்சாக்ஷர செந்தூரம், நமசிவாய செந்தூரம் முதலிய அநேக

மருந்துகள் பிராணரட்சாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

சுரம், தாகம், இருமல், இரைப்பு, பேதி, வாந்தி இக்குணங்களையுள்ள காசரோகம், அசாத்தியம்.

சுவாச ரோகங்கள் - (5)

காரணம் : சுரம், இருமல், அதிசார பேதி, விஷபாண்டு வாந்தி இவைகளால் உண்டாக்கும்.

பூர்வரூபம் : விலாபக்கங்கள் - மார்பு குத்தல், நெறிகோதல், வயிறு உப்பிசம், திணறித்திணறி மூச்சு விடுதல்.

பொது லக்ஷணம் : விலா மார்புக் குத்தல் உப்பிசம் அற்ப சுவாசம், பெருமூச்சு, இரைப்பு, இருமல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	ஊர்த்துவ சுவாசம்	தலைநிமிரல் நரம்பு - முகம் உப்புதல், மர்ம ஸ்தானத்தில் நோவுதல், மயக்கம்.
2.	அற்பசுவாசம்	வாயு அதிகரித்து பித்தகபத்துடன் சேர்ந்து அற்ப சுவாசத்தை உண்டாக்கும்.
3.	விச்சின்ன சுவாசம்	சுவாசத்தை திணறலுடன் விடுதல், மூர்ச்சை, கண் சிவப்பு, கவிழ்ந்த பார்வை, உலரல்.
4.	மகாசுவாசம்	காது சிரக நெற்றி, நோவு பெருஞ்சுவாசம், சோருதல், கண்டத்தில் ஒரு வித சத்தம்.
5.	மந்தாரசுவாசம் (மந்தாரகாசம்)	வாயு சிலேஷ்மத்துடன் சேர்ந்து நரம்புகளில் வியாபித்து கண்டத்தில் குறுகுறுசத்தம், சோருதல், சகிக்கக்கூடாத அதிசுவாசம், அதி இரைப்பு, அதி கோழை, பெருமூச்சு விடுதல்.

மருந்து : பஞ்சாக்ஷர செந்தூரம், திரிவிக்கிரமரச செந்தூரம், திரிலோக ரக்ஷாமணிமாத்திரை முதலியவைகள் பிராண ரட்சாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

வீக்கம், சுரம், வாந்தி, பேதி, தாகம், உள்ள சுவாசரோகம் அசாத்தியம்.

* கிரகணி ரோகங்கள் - (11)

காரணம் : அதிசார ரோகத்தில் வாதாதி திரிதோஷங்களில் விகற்பத்தால் உண்டாகி மலமாகவும், சீதங்கலந்த தாகவும், செரியாததாகவும் பலவித நிறத்துடன் பேதியாகும்.

பூர்வரூபம்:- ஆகாரம் பொருத்துச் சீர்ணித்தல், வயிறு குத்தல், பொருமல், உதடு உலரல், வாந்தி, குடலிரைச்சல், புளி ஏப்பம்.

பொது லக்ஷணம் : ஏப்பம், வாந்தி, தாகம், அசதி, அரோசிகம், ஆகாரம் பொறுத்துச் சீர்ணித்தல், இருமல், இரைச்சல் தாகம்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத கிரகணி	வயிற்றில் சங்கடத்துடன் ஜலமாகவும், சீதங்கலந்ததாகவும், இரைச்சலோடு நுரையாகவும் மலம் இறங்கும். மார்பு வயிறு நோவு, ஆசன பிடிங்கள், இருட்கம்மல், இருமல்.
2.	பித்த கிரகணி	கறுப்பு மஞ்சள் - மஞ்சள் சிவப்பு நிறமாகவும், ஜலமாகவும் பேதியாகும். மார்பு கண்டம் எரிவு.
3.	சிலேஷ்ம கிரகணி	அதிசீதங்கலந்த மலம் இறங்கும். தேகசுற்றல், புறங்கால் வீக்கம்.
4.	திரிதோஷ கிரகணி	வாதாதி கிரகணிகளின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் உண்டாகும்.

5.	அந்தரவாயு கிரகணி	புசித்த உடனே பேதியாகுதல், விலா இசிவு, விக்கல்.
6.	உஷ்ண வாயு கிரகணி	வயிற்றில் இரைச்சல், கனத்தல் உப்புதல்.
7.	மூலவாயு கிரகணி	வயிற்றில் இரைச்சல், புரட்டல் பொருமல் தொடைகுத்தல்.
8.	சங்கர கிரகணி	கடூர சுரம், நெஞ்சில் கபம், அஜீர்ண பேதி.
9.	குன்ம கிரகணி	வயிறு பொருமி இரைந்து பேதியாகுதல் தலை நடுக்கல், தேக எரிவு.
10.	ஒட்டு கிரகணி	வயிறு - விலா - மார்பு முதுகு நோவுதல், மலங் கொஞ்சங் கொஞ்சமாக இறங்குதல்.
11.	கருப்ப கிரகணி	கண் மஞ்சள், பலவித பேதி, வாந்தி.

கிரகணி - பிடித்தலையுடையது.

மருந்து : லகு சங்குவடிவ மாத்திரை, போஜன குடாரி மாத்திரை, ராஜசித்தாதிலேகியம், ராஜஅமிர்த சஞ்சிவிலேகியம் முதலியவைகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

1 - 2 - 5 - 6 - 7 - 10 - 11 இந்த நம்பருள்ளவைகள் சாத்தியம் மற்றவைகள் அசாத்தியமாம்.

பிரமேக ரோகங்கள் - (21)

காரணம் : அதிசையோகம், பட்டினி, மனக்கிலேஷம் இவைகளால் உண்டாக்கும்.

பூர்வரூபம் :- ஆரம்பத்தில் முதுகந்தண்டெலும்புகளை வரிசையாக வியாபித்து பிறகு நாபியைச் சுற்றிக் கொண்டு குய்யஸ்தானத்தில் நோவு உண்டாகி நரம்பையும் எலும்பையும் அனுசரித்து சோணிதத்தில் கலந்து அடிவயிற்றில் இசிவையும் வேதனையும் உண்டாக்கும்.

பொது லக்ஷணம் : அருசி, கைகால் ஒய்ச்சல் இரத்தமில்லாமை மலக்கட்டு அசதி.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத பிரமேகம்	மூத்திரம் கோமூத்திரம் போல் இறங்கும். அண்டம் வீங்கி நோவும்.
2.	பித்த பிரமேகம்	குய்யம் - குதம் நோவுதல், மஞ்சள் சீழ் ஒழுகுதல், கோசத்தில் விம்மலோடு வேதனை.
3.	சிலேஷ்ம பிரமேகம்	கண்ணிலும் நகத்திலும் ரத்தமில்லாமை, மூத்திரம் வெண்மை கோசத்தில் நோவு.
4.	அரித்திராப் பிரமேகம்	வெள்ளை விழுதலானது மஞ்சளாயும் அதி எரிச்சலாயுமிருக்கும்.
5.	தந்திப் பிரமேகம்	அடிவயிறு நோவு, மேகம், தந்திபோல் நீர்வுடன் இறங்கும்.
6.	சீழ்ப்பிரமேகம்	வெண்மையான சீழைப்போல் இறங்கும்.
7.	ரத்தப்பிரமேகம்	நீர்முயல் ரத்தம் போலிறங்கும்.
8.	ஜலப்பிரமேகம்	நீர்கசிவிலும் வெளிப்பு நிறமான நீர் இறங்கும்.
9.	ஒழுக்கு பிரமேகம்	ஜலம் - ரத்தம் சீழ்போல் நீர் வொழுகிக் கொண்டேயிருக்கும். கறுப்பு கட்டிகள் தேகத்தில் காணும்.

10.	கட்டிப் பிரமேகம்	தேகத்தில் கட்டிகளும், கோசத்தில் சொறி - தினவு சீழ் வடிதலும், அண்டத்தில் நீர்கசிதலும் உண்டாகும்.
11.	ரணப்பிரமேகம்	தேகமுற்றிலும், ரணங்கள், ஆண்குறி தடித்து ரத்தம் சீழ்வடிதல் கடுத்தல்.
12.	கிரிச்சர பிரமேகம்	மூத்திரம் இறங்கும் அப்போது குத்தல் காணும்.
13.	நீச்சுபிரமேகம்	மூத்திரம் கள்ளுபோல் இறங்கும்.
14.	கரப்பான் பிரமேகம்	மூத்திரம் சுண்ணாம்பு ஜலம்போல் இறங்கும்.
15.	மலினப் பிரமேகம்	குதம் குய்யம் இவைகளின் கீழ் நரம்புகளில் நோவு - குத்தல்.
16.	மதுப்பிரமேகம்	மூத்திரம் தேன்போல் இறங்கும்.
17.	தந்துப்பிரமேகம்	மூத்திரம் துளித்துளியாக இறங்கும். கோசத்தில் மேகம் நூலைப் போல் தொங்கும்.
18.	கல்லுப் பிரமேகம்	வயிற்றில் கல்லைப் போல் மூத்திரம் சிக்கிக் கொண்டு விம்மி விருவிருப்புடன் நாபியைப் பற்றி உப்பி பசியை அடக்கி கனத்தல் கோசத்தில் கள்ளைப் போல் மேகநீர் கசிதல்.
19.	பித்த சிலேஷ்ம பிரமேகம்	தேகம் ஊதல், மூத்திரம் வெள்ளை-மஞ்சள் நிறங்களாக இறங்கும். கோசம் சுருங்கும்.
20.	வாதபித்த பிரமேகம்	மூத்திரம் மாவைக் கரைத்ததுபோல் இறங்கும். அப்போது சுறுக்குகாணும்.
21.	தொந்தப் பிரமேகம்	கோசத்தில் கறுப்புநிறம், மூத்திரம் எரிச்சலுடன் இறங்கும். சருமத்தில் புழுகள் ஊறுவது போல தோற்றும்.

மருந்து : மேகக்குலாந்தக மாத்திரை, மகா ரஜத் பஸ்பம் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

பிரமியமேக ரோகங்கள் - (20)

காரணம் : சதாகாலமுஞ் சையோகம் செய்வதால் உண்டாகும்.

பொது லக்ஷணம் : மூத்திரமானது நெய், கொழுப்பு முதலிய பற்பல விதங்களாகவும் 1/2 - 1 - 2 - 3 - 4 படி அளவாகவும் இறங்கும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத பிரமியமேகம்	மூத்திரம் கொழுப்பைப் போல் அடிக்கடி இறங்கும். காய்ச்சினால் தேன் வாசனை வீசும்.
2.	பித்த பிரமியமேகம்	மூத்திரம் துர்க்கந்தமாயும் கற்றாழையின் சோற்றைப் போலவும் அதிக அளவாயும் இறங்கும் காய்ச்சினால் மிக நாற்றம் வீசும்.
3.	சவிரண மேகம்	மூத்திரம் துர்க்கந்தமாயும் சுண்ணாம்பின் காரமாயும் அதிக அளவாயும் இறங்கும். காய்ச்சினால் சுண்ணாம்பு ஜலம்போல் அடியில் படியும் எறும்பு மேயும்.
4.	அப்பிய மேகம்	மூத்திரம் அதிக அளவாயும் அதிவிரைவாயும் இறங்கும். காய்ச்சினால் உவர் மண்ணை ஒத்த வண்டல் அடியில் நிற்கும்.

5.	மாமிச சிராவி மேகம்	மூத்திரம் வெள்ளாட்டுக் கொழுப்பைப் போலிறங்கும். காய்ச்சினால் கருப்பஞ் சாற்றின் வாசனை வீசும்.
6.	ஆச்சியகந்தி மேகம்	மூத்திரம் நெய்யைப் போலிறங்கும். துணியை அதில் நனைத்து கொழுத்தினால் எரியும்.
7.	சுத்த மேகம்	மூத்திரம் கோசலத்தின் வாசனை யுடையது. காய்ச்சி கொழுத்தினால் பிரகாசித்து எரியும்.
8.	தைத்திய மேகம்	மூத்திரம் மாமிசத்தைக் கழுவின ஜலம் போலிறங்கும். காய்ச்சினால் அந்தக் கவுச்சு மணமே வீசும்.
9.	ஆதிக்க மேகம்	மூத்திரம் இளநீர் ஜலத்தின் மணமும், நிறமும் உள்ளது. காய்ச்சினால் அந்த நிறமும் வாசையும் மாறாது.
10.	உத்தம மேகம்	மூத்திரம் காய்ச்சினால் சுத்த ஜலத்தைப் போலிருக்கும். குருணி அளவாக இறங்கும்.
11.	சாந்திர மேகம்	மூத்திரம் தாழைவிழுதுச் சாற்றைப் போலிறங்கும். காய்ச்சினால் சீழையின் நாற்றம் வீசும்.
12.	மதுமேகம்	இதன் பிரதான லக்ஷணங்கள் மேக ரோகங்களில் காண்க.
13.	உதக மேகம்	ஷை ஷை
14.	ஆர்க்க மேகம்	ஷை ஷை
15.	வசா மேகம்	ஷை ஷை
16.	மச்சை மேகம்	ஷை ஷை
17.	சுரா மேகம்	ஷை ஷை
18.	சுக்கில மேகம்	ஷை ஷை
19.	பிரச மேகம்	ஷை ஷை
20.	சார மேகம்	ஷை ஷை

மருந்து : ராஜ ஏலாதிச்சூர்ணம், மேகத் தெண்ணெய், மகா கூழ்பாண்டலேகியம், முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லுகிறோம். அவைகளைச் செய்து கொடுக்கக் குணமாகும்.

மேக ரோகங்கள் - (20)

காரணம் : தாய்தந்தையர்களின் வழியாக சரீரத்தில் கூடவேபிறக்கும். அன்றியும் அதிசையோகத்தாலும், அழுகிய பதார்த்தங்களைச் சாப்பிடுவதாலும் உண்டாகும்.

பூர்வரூபம் : கண் - கை - கால் - நாக்கு - மார்பு எரிச்சல், தேகத்தில் துர்கந்தம், தடிப்பு, வியர்வை, நகம் - மயிர் விரைவில் வளரல், ஆண்குறி சுருங்கல், அதிதாகம்.

பொது லக்ஷணம் : சகலமேக நீரும் கலங்கலாகவே இருந்தாலுமிருக்கும் மேகங்களில் தோஷங்களும் உபத்திரவங்களும் உண்டாகுங் காலத்தில் மூத்திர நிறங்களினால் இன்னமேக மென்று நிக்ஷயிக்க வேண்டியது.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	மதுமேகம்	இது வாயுவாலுண்டாகி மூத்திரம் தேனின் தடிப்பு - நிறம் ருசி - வாசனையுள்ளது. காய்ச்சினால் பாகாகும்.
2.	வசா மேகம்	இது வாயுவாலுண்டாகி மூத்திரம் கொழுப்பைப் போலிறங்கும். காய்ச்சினால் வசம்பு நாற்றம் வீசும்.
3.	மச்சா மேகம்	இது வாயுவாலுண்டாகி பச்சை மாமிச நிறம் போலும் மோர்

		கலந்தது போலும் மூத்திரம் இறங்கும். காச்சினால் நிணவாசனை வீசும்.
4.	அஸ்தி மேகம்	இது வாயுவாலுண்டாகி யானையின் மூத்திரம் போல் இறங்கும்.
5.	ரத்த மேகம்	இது பித்தத்தாலுண்டாகி ரத்த நிறம், துர்க்கந்தம் அதி அனல் இவைகளைப் பெற்று மூத்திரம் இறங்கும். காய்ச்சினால் புலால் நாற்றம் வீசும்.
6.	நீல மேகம்	இது பித்தத்தாலுண்டாகி மூத்திரம் நீல ஜலமாக இறங்கும்.
7.	கிருஷ்ணமேகம்	இது பித்தத்தாலுண்டாகி கரியை அரைத்துக் கரைத்த ஜலம் போலிறங்கும்.
8.	மஞ்சிஸ்டிமேகம்	இது பித்தத்தாலுண்டாகி துர்க்கந்தஞ் சேர்ந்த சாய வேரின் கஷாயத்தைப் போலிறங்கும்.
9.	அரித்திராமேகம்	இது பித்தத்தாலுண்டாகி நீர்ச்சுறுக்குடன் மஞ்சளைக்கரைத்த ஜலம் போல் மூத்திரம் இறங்கும்.
10.	சாரமேகம்	இது பித்தத்தாலுண்டாகி மூத்திரம் உறைந்த இடங்களில் சுண்ணாம்பு உவர்மண் நிறமாக தென்படும்.
11.	சங்க மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி கழுநீரைப் போல் மூத்திரம் இறங்கும். காய்ச்சினால் சுண்ணாம்பு போல் மஸ்ட்டு அடியில் படியும்.
12.	லாலா மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி கோட்டு வாய்ச்சலத்தைப் போல் மூத்திரம் இறங்கும்.
13.	சனையர் மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி மூத்திரம் பொறுத்து பொறுத்து அற்ப அற்பமாக இறங்கும்.
14.	சாந்திர மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி, மூத்திரம் ஒருநாள் விட்டு மறுநாள் கெட்டியாய் இறங்கும்.

15.	சுரா மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி மூத்திரம் கள்ளைப்போல் இறங்கும். காய்ச்சினால் அடியில் மாவைப்போல் படியும்.
16.	பிஷ்ட மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி அரிசி மாவைக் கரைத்தது போல் மூத்திரம் இறங்கும்.
17.	சுக்கில மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி மூத்திரத்தில் சுக்கிலம் மிதந்து இறங்கும். காய்ச்சினால் கட்டியாகும்.
18.	சீத மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி மதுரமாயும் குளிர்ச்சியாயும் மூத்திரம் இறங்கும்.
19.	சித்தா மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி 3-3/4 நாழிகைக்கு ஒரு தடவை வெள்ளை மணல் சேர்ந்த ஜலத்தைப் போல் மூத்திரம் இறங்கும்.
20.	இக்ஷு மேகம்	இது சிலேஷ்மத்தாலுண்டாகி கரும்பின் சாறு கள்ளு இவைகளைப் போலும் மதுரமாயும் நுரைகளோடும் மூத்திரம் இறங்கும்.

மருந்து : உலகோத்தம செந்தூரம், வீரபத்திர சிந்தாமணி, ருத்திர செந்தூரம், குஷ்ட குடாரி எண்ணெய், மேகத் தெண்ணெய் முதலிய அநேக மருந்துகள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியிருக்கிறோம். அவைகளைக் கொடுக்க குணமாகும்.

1. அடிவயிற்றில் சங்கடம், 2. நீரிறங்கினால் ஆயாசம், 3. வாயு அதிகரித்தல், 4. திரிதோஷங்கள் அதிகரித்தல், 5. சுக்கிலம் நசிக்குதல், 6. அதிதாகம், 7. அரோசகம், 8. கட்டிகள் எழும்புதல், 9. பேதியாகுதல், 10. ஞாபகமாறி உயிர் நீங்குதல். இப்பத்து அவஸ்தைகளுண்டாவதற்கு முன் மேல் சொல்லிய மருந்துகளை கொடுத்து அனுகூலப்படுத்த வேணும்.

எந்த மேகரோகிகட்கானாலும் தேகத்தில் சகிக்கக் கூடாத எரிச்சலும், அதிமூத்திரமும், அதிதாகமும், சதாகாலம் நாக்குவரளலும், சுரமும், கட்டிகளும், பேதியும் உண்டாகில் அசாத்தியம்.

சூலை ரோகங்கள் - (18)

காரணம் : அதிசையோகம், அதிபட்டினி, மனக்கவலை இவைகளால் உண்டாகும்.

பொது லக்ஷணம் : சூலத்தால் குத்துவது போல் குத்தல், சுரம், எரிச்சல், பிரமை, வேதனை

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	பக்கச் சூலை	பக்கத்தில் குத்தல், பீஜநோவு, சுரம், திமிர், கண்ணில் புரைக் கம்மியது போலிருத்தல்.
2.	மேக சூலை	கை-கால் குடைச்சல், சிவந்த மூத்திரம், சீதளம்.
3.	சுரசூலை	கடூர சுரம், ரத்தங்கலந்த வாந்தி, விரைக்குத்தல், வயிற்றுப் பிடிப்பு.
4.	கறைச்சூலை	கீழ் முதுகில் குத்தல், அறிவு தேஜசு குரைவுதல்.
5.	முறிச்சூலை	தொப்புளம் இழுத்தல், அடிவயிறு - அடி குடல் ஆண்குறி - குதம் இவைகளில் குத்தல்
6.	உலர்த்துச் சூலை	தேகத்துக்குள் குத்தல், வெளிப்புறம் வீக்கம்.
7.	ஆம சூலை	விலா - மார்பு - வயிறு இவைகளில் குத்தல்.

8.	நிதம்ப சூலை	பிரசவ அழுக்கைத்தங்கி அல்குலியின் வாயை அடையப்பட்டு அதிகுத்தல்.
9.	குன்ம சூலை	மலஜலக்கட்டு மூர்ச்சை, வாந்தி, குத்தல்.
10.	சர்க்கரா சூலை	மூத்திரம் ரத்தங்கலந்ததாயும் மணலைத் தள்ளிக் கொண்டு துளித்துளியாகவும் குத்தலுடன் இறங்கும். அடிவயிறு- இடுப்பு- முதுகு - விலா - தொப்புள் குதம் இவைகளில் குத்தல்.
11.	கிரந்தி சூலை	கை கால்-தேகம்-கீல்கள் நீர்க்கட்டி வீங்கி வெடித்து சீயும் ஜலமும் வடியும்.
12.	ரத்த சூலை	சிறுக சிறுக உதிரஞ்சேர்ந்து ரஜஸ்வல காலத்தில் புரண்டு வலிக்கும். திரவம் அதிகமாய் காணும்.
13.	கர்ப்ப சூலை	திரவம் திரண்டு சிசுமேல் புரண்டும் வயிற்றுவலி காணும்.
14.	வாத சூலை	கண்-விலா-முழங்கால் கனத்தல் ஆண்குறி - அல்குல் - முதுகு - தொடை - இடுப்பு குத்தல், சிவந்த மூத்திரம்.
15.	பித்த சூலை	கைகால் தடித்தல் நோவு, சுரம், குத்தல், மூர்ச்சை.
16.	சிலேஷ்ம சூலை	தேகமரத்தல், குத்தல், நகத்தில் ரத்தமில்லாமை.
17.	திரிதோஷ சூலை	வாதாதி சூலைகளின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் உண்டாகும்.
18.	கரப்பான் சூலை	தேகவெடிப்பு, முழங்கால் கைக் குத்தல்.

காரணம் : வாத கோபநாச எண்ணெய், காலபயிரவ எண்ணெய், ராஜ கஜகேசரி மாத்திரை,

ருத்திரசெந்தூரம் முதலிய அநேக மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

குய்ய ரோகங்கள் - (27)

காரணம் : *ஐந்துவித தோஷங்களை அடைந்த அல்குலுடைய ஸ்திரீகளோடு புருஷன் சுவாசம் எழும்பும்படி தினம் சையோகம் செய்வதாலும், போகித்த பிறகும் உடனே போகிப்பதற்காக அந்த ஸ்திரீயைக் கொண்டு தன் ஆண்குறியை நகங்களினால் கிள்ள, நாக்கினால் நெரட பற்களால் மெதுவாக கடிக்க, கையால் பிசைக்க செய்வதுமன்றி தானும் அந்த ஸ்திரீயின் அல்குலில் ஆண்குறியால் குத்துவதும் நாக்கினால் துளாவதும் இச்செய்கைகளைக் கொண்டு வலுவந்தமாக போகஞ் செய்வதால் குய்யத்தில் (அல்குலில்) ரோகங்கள் உண்டாகி ஆண்குறியைத் தொடர்ந்து அதிவேதனையைச் செய்யும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	உத்தபாரோகம்	ஆண்குறியில் ரணங்கண்டு எரிச்சலை உண்டாக்கும்.
2.	பிடகரோகம்	ஆண்குறியிலும் அதைச் சுற்றிலும் சிறு கொப்பளங்கள் உண்டாகி அதிவேதனை செய்யும்.

*(1) அநேக புருஷர்களின் போகத்தாலும், மேகரணங்களாலும் சிட்கித்த அல்குல் 2. அதிசையோக அல்குல் 3. ரஜஸ்வல ரத்த அல்குல், 4. போகவிருப்பமில்லாத அல்குல், 5. பிரசவித்து புண்ணாகிய அல்குல் என ஐந்து வித அல்குல்களாம்.

3.	அரிசோரோகம்	ஆண்குறியிலும் வெளிப்புறத்திலும் மாமிச மூளைகள், நமைச்சல், ரத்தம் வருதல், இவைகள் உண்டாகி அதிவேதனை செய்யும், புருஷருக்கு சுக்கிலத்தையும் ஸ்திரீக்கு சோணிதத்தையும் கெடுக்கும்.
4.	அலசிரோகம்	ஆண்குறி வழியாக மேகநீர் வடிந்து ரணம் காணும்.
5.	கும்பிகாரோகம்	ஆண்குறியில் சிறு சுண்டக்காய் அளவு மாமிசக்கட்டி காணும்.
6.	சரஷபிகரோகம்	ஆண்குறியில் கடுகு அளவுள்ள அநேக கொப்பளங்கள் காணும்.
7.	அவமந்தரோகம்	ஆண்குறியில் நீண்டளவுள்ள கொப்பளங்கள் கண்டு ரத்தம் சீழ் வடிந்து அதிவேதனை செய்யும்.
8.	பரிசஹானி ரோகம்	ஆண்குறியின் உட்முகத்தில் அதி சிவப்பாகி சுக்கிலத்தை வெளிப்படாமலும் கையால் தொடக்கூடாத வேதனையுஞ் செய்யும்.
9.	கிரிதித ரோகம்	ஆண்குறியின் கோசத்தைச் சுற்றிலும் முள்ளுகளைப்போல் அநேக சிறு கொப்பளங்கள் காணும்.
10.	புஷ்கரிகா ரோகம்	தாமரைக்காயைப்போல் ஆண்குறியில் தழும்பைக்கண்டு சிறு கொப்பளங்கள் காணும்.
11.	மிருதிதரோகம்	ஆண்குறியில் ரணம் காணும்.
12.	சம்வியூட ரோகம்	ஆண்குறியின் மேல் நீண்டரணங் காணும்.
13.	அவிபாடித ரோகம்	ஆண்குறியின் சருமத்தைத் தடித்து வெடிக்கும்.
14.	நிருத்தமணி ரோகம்	ஆண்குறியின் முனையோ நையும்படி செய்து துவாரம் அடைப்பட்டு மூத்திரம் கொஞ்சங் கொஞ்சமாக இறங்கும்.

15.	திலகாலத் ரோகம்	ஆண்குறியின் வெளிப்புறம் முழுவதும் கடுகு, மிளகு அளவாக கறுப்பான மாமிசங்கள் உண்டாகி தொங்கும். பிறகு ரணமாகும்.
16.	வித்திரதி ரோகம்	ஆண்குறியின் நரம்புகளில் வீங்கிக் கட்டியாகி பரவி ரணங்கண்டு மகா வேதனையை உண்டாக்கும்.
17.	ரத்தாற்புத ரோகம்	ஆண்குறி முற்றிலும் சிவப்பு கறுப்பு கலந்த நிறமான கொப்பளங்கள் உண்டாகி சகிக்கக் கூடாத வேதனையைச் செய்யும்.
18.	சதபோனக ரோகம்	ஆண்குறி முற்றிலும் சிறுதுவாரங்கள் கண்டு நீர் இறங்கும்போது மிகவும் எரிச்சல் உண்டாகும்.
19.	தொக்குப்பாக ரோகம்	ஆண்குறியின் வெளிப்புறம் நையப்பண்ணி சுரம் அதிவேதனை உண்டாக்கும்.
20.	மாமிசபாக ரோகம்	ஆண்குறியின் மலரை நையும்படி செய்து மிகவும் வேதனையை உண்டாக்கும்.
21.	மாமிசாற்புத ரோகம்	ஆண்குறியின் மலரில் கட்டிகள் காணும்.
22.	பீத்த உபதம்ஸ ரோகம்	ஆண்குறியின் துவாரத்தை அடைப் பட்டு சிவப்பு நிறமான வீக்கங்கண்டு சுரமும் பலவித வேதனையும் உண்டாகும்.
23.	வாத உபதம்ஸ ரோகம்	ஆண்குறியின் துவாரத்தை அடைப்பட்டு மரத்தலும் பலவித வேதனையும் செய்யும்.
24.	திரிதோஷ உபதம்ஸ ரோகம்	வாதாதி உபதம்ஸ ரோகங்களின் லக்ஷணங்களைக் காட்டி இரண்டு பீஜங்களும் வீங்கும்.
25.	ரத்த உபதம்ஸ ரோகம்	ஆண்குறி கறுத்து சர்வகாலமும் சுரங்காயும்.

26.	சிலேஷ்ம உபதம்ஸரோகம்	ஆண்குறி வீங்கி தடித்து கனமாகி தினவு காணும்.
27.	அஸ்மலிகா ரோகம்	ஆண்குறியில் ரணங்கண்டு குழி விழுந்து கெட்டியாயிருக்கும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளை கொடுக்க குணமாகும்.

15-16-20-21-24-25 இந்த நம்பர்களுள்ள குய்யரோகங்கள் அசாத்தியம் மற்றவைகள் சாத்தியமாம்.

வித்தரதிக்கட்டி ரோகங்கள் - (17)

காரணம் : இந்த ரோகமானது வாதாதி தோசங்களினாலுண்டாகி தோல், ரத்தம், மாமிசம், மேதை எலும்பு, நரம்பு இவைகளில் அற்ப அற்பமாக சேர்ந்து தடித்து வீக்கத்தை உண்டாக்கும்.

பூர்வ ரூபம் : தடித்து வீங்குதல், குத்தல், அதிவேதனை

பொது லக்ஷணம் : சரீரத்தின் வெளிப்புறம் அல்லது உட்புறத்தில் தடித்து வீங்கி வேரூன்றி மிக உக்கிரமாக அதி நோவோடு நீண்ட வடிவாகவும், வட்ட வடிவாகவும் புடைத்துக் கட்டியாய் ஏற்பட்டு உண்டாகும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	நாபிஸ்தான வித்திரிதிக்கட்டி	நாபிஸ் தானத்திலுண்டாகி நிமிர குனியக்கூடாத வேதனையைச் செய்யும்.
2.	அபானஸ்தான வித்திரிதிக்கட்டி	மலத்துவாரத்திலுண்டாகி பற்பல வேதனையைச் செய்யும்.

3.	வஸ்திஸ்தான வித்திரிதிக்கட்டி	மூத்திரஸ்தானத்திலுண்டாகி கிரிச்சர ரோகத்தின் வேதனையைச் செய்யும்.
4.	முஷ்கஸ்தான வித்திரிதிக்கட்டி	பீஜஸ்தானத்திலுண்டாகி முதுகு - இடுப்பு விலாப் பக்கம் இவைகளில் வெகு வேதனையைச் செய்யும்.
5.	எகுருதிஸ்தான வித்திரிதிக்கட்டி	எகுருதிஸ்தானத்திலுண்டாகி மார்பு பிடிப்பு, இரைப்பு காணும்.
6.	வம்க்ஷணஸ்தான வித்திரிதிக்கட்டி	தொடைக்கவுட்டிலுண்டாகி தொடைகளை பிகுவாக்கி அசையக் கூடாமல் செய்யும்.
7.	பிலீகஸ்தான வித்திரிதிக்கட்டி	பிலீகஸ்தானத்திலுண்டாகி தேக கனதியும், தாகமும், பெருமூச்சியும் உண்டாகும்.
8.	குலோமஸ்தான வித்திரிதிக்கட்டி	பக்கவிலாவின் சவ்விலுண்டாகி தொண்டை நெருக்கிப் பிடித்தது போலிருக்கும், பேச முடியாது.
9.	இருதயஸ்தான வித்திரிதிக்கட்டி	இருதயஸ்தானத்திலுண்டாகி, அதி மார்பு வேதனை, சோர்வு, இரைப்பு, தாகம் காணும்.
10.	குக்ஷிஸ்தான வித்திரிதிக்கட்டி	வயிற்றிலுண்டாகி தோல், வயிறு, விலா பக்கம் இவைகளில் அதி வேதனை செய்யும்.
11.	வாத வித்திரிதிக்கட்டி	சிவப்பும் கறுப்புமுள்ள கட்டி உண்டாகி நோதல், தேகவீக்கம் பிரமை, புரளல், இருமல், இரைப்பு, காணும்.
12.	பித்த வித்திரிதிக்கட்டி	வெளிப்பும் சிவப்புமுள்ளக் கட்டி உண்டாகி சோருதல், சுரம், எரிச்சல் காணும்.
13.	சிலேஷ்ம வித்திரிதிக்கட்டி	வெண்மை நிறமான கட்டி உண்டாகி தேகம் பாரித்தல், அசையக் கூடாமை காணும்.

14.	திரிதோஷ வித்திரிதிக்கட்டி	வாதாதி வித்திரிதிக்கட்டிகளின் லக்ஷணங்களை காணும்.
15.	க்ஷத வித்திரிதிக்கட்டி	ரத்தபித்த ரோகத்துக்குள்ள லக்ஷணங்களைக் காணும்.
16.	ரத்த வித்திரிதிக்கட்டி	வெளிப்பும் கறுப்புமுள்ள சிறுசிறுதுமான கொப்பளங்களுண்டாகி பித்தவித்திரிதிக் கட்டியின் லக்ஷணங்களும் தாகமும் நோவும் உண்டாக்கும். இது ஸ்திரீக்கு உட்புறத்திலும், புருஷனுக்கு வெளிப்புறத் திலும் காணும்.
17.	ஸ்தன வித்திரிதிக்கட்டி	ஸ்திரீகளின் ஸ்தனத்தில் பால் இருக்கினும் இல்லாவிடினும் அதின் சூக்ஷம நரம்புகளில் பஞ்சுசேர்வது போல் கொஞ்சங் கொஞ்சமாக சேர்ந்து தடித்துக் கெட்டிப்பட்டு கனத்து உண்டாகும்.

மருந்து : வித்திரிதி சஞ்சீவி எண்ணெய் முதலிய அநேக மருந்துகளை பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

ஸ்தன நரம்புகளின் துவாரம் அதி அற்பமாக இருக்கின்ற ருது ஆகாத ஸ்திரீக்கு ஸ்தனவித்திரிதிக் கட்டி உண்டாகாது.

அடிவயிறு, மார்பு, நாபி இவ்விடங்களில் உட்புறத்தில் மேற்படி கட்டிகள் உண்டாகியிருந்தாலும், வெளிப்புறத்தில் முகங்கண்டு ரத்தம் சீழ் முதலியவைகள் அம்முகம் வழியாக வருமாகில் சாத்தியம், உட்புறத்தில் உண்டாகி முகமும் உட்புறத்திலேயே கண்டு வாயால் ரத்தம் சீழ் முதலியவைகள் வருமாகில் அசாத்தியம்.

பவுத்திர ரோகங்கள் - (15)

காரணம் : குதிரை யானை ஏற்றமும், மூல வியாதிக்கு ஆகாத பதார்த்தங்களைச் சாப்பிடுவதினாலும் உண்டாகும்.

பூர்வ ரூபம் : மேற்படி காரணங்களால் வாதாதிகள் அதிகரித்து மூத்திரைப் பைக்கும் அடிவயிற்றுக்கும் சமீபத்திலிருக் கின்ற கெட்ட உதிர மாமிசங்களை ஒட்டி உள்-வெளிப்புறங்களில் 1-2 அங்குல முள்ளக்கட்டிகள் உண்டாகி ரணமாகும். இத்தருணத்தில் சிகிச்சை செய்யாவிடில் குதம் - அடிவயிறு - அல்குல் இவைகளில் துவாரங்கள் உண்டாகி இவைகளின் வழியாக மலம் மூத்திரம் காற்று சுக்கிலம் வெளிப்படும்.

பொது லக்ஷணம் : மேற்படி காரணத்தினாலுண்டாகிற கட்டியானது உடைந்து அதின் வேர் தூரத்தில் ஓடி உட்புறத்தில் வியாபித்து வெளிப்புறத்திலும் தோன்றி நோவு அதிகரிக்கும். அன்றியும் கட்டிகள் அறுபட்டு காயமான மார்க்கத்தில் துர்மாமிசம் குறுக்காக வளர்ந்து வெளிப்பட்டு சீழால் கொழுத்துக் குதறப்படுவதுமன்றி கிருமிகளுண்டாகி ஆசன ஓரம் முற்றிலும் தின்று விடுவதினால் தினவும் எரிச்சலும் நோவும் உண்டாகும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	பரிசிராவிரணம்	கட்டி உடைந்து துவாரங்களின் வழியாக சீழ் வடியும்.
2.	உஷ்டரகிரீவ ரணம்	கட்டியானது அநேக துவாரங்களுடைய தாயும் ஒட்டையின் கழுத்து போலும் இருக்கும்.

3.	சதபோன கரணம்	கட்டியானது உடைந்து புற்றைப் போல் சிறு துவாரங்களையுடைய ரணங்களாகி விருத்தி அடையும்.
4.	க்ஷதசரணம்	கட்டியானது ஆயுதத்தால் அறுபட்டுக் காயமான மார்க்கத்தில் துர்மாமிசம் குறுக்காக வளர்ந்து சீழ் அடைந்து கிருமிகள் உண்டாகி ஆசன ஓரம் முற்றிலும் தின்றுவிடும். தினவு, நோவு, எரிவு காணும்.
5.	சம்புகாவர்த்த ரணம்	கட்டி உண்டாகி ஆசனஸ்தானத்தில் துவாரங்கள் நத்தை ஓட்டின் குழியை ஒத்ததாய் உண்டாகும்.
6.	ருசுரணம்	ரணமானது குதவளையங்களுக்கு சமீபத்தில் துவாரங்கள் கண்டு சீழ் ஒழுகும்.
7.	பரிக்ஷேபிரணம்	கட்டி உண்டாகி உடைந்து ஆசனத்தைச் சுற்றி துவாரங்கள் கண்டு சீழ் ஒழுகும்.
8.	அரிசோரணம்	ஆசன வளையத்தின் கீழ் எரிவு-நமைச்சல் -வீக்கங்கண்டு உடைந்து சதாகாலமும் புளிப்பு நாற்றமுடைய ஜலம் ஒழுகிக் கொண்டேயிருக்கும்.
9.	வாதபவுத்திரம்	குதஸ்தானங்களில் சிவந்தும், கறுத்தும், விரிவது போலும், நோவும், அதிர்தலும், குத்தலும் காணும்.
10.	பித்த பவுத்திரம்	ரணமானது கறுப்பும் சிவப்பும் கலந்த நிறமாயும் ஒடையக் கழுத்தைப் போல மெலிந்து உயர்ந்து இருக்கும்.
11.	சிலேஷ்ம பவுத்திரம்	உருதிபெற்ற வேரானது கனமாயும் வெளிப்பாயும் விருத்தியடையும்.
12.	வாதபித்த பவுத்திரம்	கறுப்பு சிவப்பு கலந்த நிறத்துடன் உண்டாகி சீழ் ஒழுகும்போது ஒருவித சத்தம் காணும்.

13.	வாதசிலேஷ்ம பவுத்திரம்	வெளிப்பு கறுப்பு கலந்த நிறமாக கண்டு சீக்கிரத்தில் பழுத்து உடையாது.
14.	சிலேஷ்ம பித்த பவுத்திரம்	பித்தசிலேஷ்ம பவுத்திர ரோகங்களின் லக்ஷணங்கள் உண்டாகும்.
15.	திரிதோஷ பவுத்திரம்	பலநிறத்துடன் பெருவிரல் கனமாக உண்டாகி குத்தல், எரிவு, வாந்தி, சுரம், தாகம் காணும்.

மருந்து : வித்திரிதி சஞ்சீவி எண்ணெய் முதலிய அநேக மருந்துகளை பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

4-15 இந்த நம்பருள்ளவைகள் அசாத்தியம், அன்றியும் சதாகாலமும் சீழ்ரத்தம் வடிதலும் குதவளையங்களில் முளைத்தலும் நரம்பை அனுசரித் தலுமாகிய பவுத்திர ரோகம் அசாத்தியம்.

குஷ்ட ரோகங்கள் - (18)

காரணம் : சாப்பிடக்கூடாத வஸ்துக்களைச் சாப்பிடுதல், மலஜலத்தை அடக்குதல், குருவுக்கும் பிராமணா ளுக்கும் தூசித்தல் இவைகளாலும் ஜென்மாந்திர பாவத்தினாலும் உண்டாகும்.

பூர்வ ரூபம் : தேகத்தில் பளபளப்பு, தடிப்பு, தினவு, எரிவு, நோவு, ரணம், ரணத்திலிருந்து கறுத்த உதிரம் வடிதல், குழிகள் விழுதல், குத்தல் உண்டாக்கும்.

பொது லக்ஷணம் : எரிவு, தினவு, நோவு, தடிப்பு, திமிர், நாற்றம், காங்கை, சீனைத் தண்ணீர் வடிதல், கனத்தல்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	கர்னகுஷ்டம்	தேகத்தில் பச்சை நிறமான வெடிப்பும், தேகம் பாரித்து காக்கரட்டான் பூ நிறமாக தோன்றும்.
2.	விசர்ச்ச குஷ்டம்	தேகத்தில் சிவந்த தடிப்புகள், சொறி வதற்கு யெப்போதும் நினைப்பு உண்டாகும்.
3.	மண்டல குஷ்டம்	தேகத்தில் கொப்பளங்கள் வளைஸ்வ ரூபமாக எழும்பி உடைந்து சேர்ந்து கொண்டு ரணமாகி புழுக்கள் நெழுவும் சீழ் வொழுகும்.
4.	சருமகுஷ்டம்	தேகத்தின் தோலானது மீன்களின் சிதளைப்போல் சுறசுறத்துத் தடித்து சிவப்பு மஞ்சள் நிறமாயிருக்கும்.
5.	சடைகுஷ்டம் (பெருவியாதி)	தேகமுற்றிலும் தோலுரித்து சிவத்தலும் யானையின் துதிக்கைச் சருமம் போல தடித்தலும் சுறசுறத்தலும் உண்டாகும்.
6.	கிடிபகுஷ்டம்	தேகமுற்றிலும் பச்சை நிறமாகவும் பன்றி மாமிசத் தோலைப் போலும் இருக்கும்.
7.	சித்மாகுஷ்டம்	நாபிக்குமேல் பாலைப்பூவைப் போல் புடைகள் விசேஷமாக உண்டாகும், ரத்தங்கசியும்.
8.	வியாதிக்குஷ்டம்	கை - கால்களில் அதிகொப்பளங் களுண்டாகி ரணமாகுவதுமன்றி -கை-கால்-கண்-காது கண்டம் இவைகளில் வெடிப்பும் வீக்கமும் உண்டாகும்.
9.	சாமதல குஷ்டம்	தேகத்தில் கீற்றுக்கீற்றாக வெடித்து ரத்தம் வடியும்.
10.	விஸ்போட குஷ்டம்	சருமம் அதிமிருதுவாயும் விஷ எரிச்சலை யொத்த எரிச்சலுள்ள தாயுமிருக்கும்.

11.	பாமாகுஷ்டம்	முன்கை - முழங்கால் - தொடை இவைகளில் கொப்பளங்கள் அடத்தியாய் உண்டாகி ரணமாகும்.
12.	தத்துகுஷ்டம்	மண்டலாகாரமான கொப்பளங்கள் உண்டாகி நசுங்கி கறுப்பு அகத்திப்பூ நிறத்தைப் பெற்ற ரணங்களாகும்.
13.	சதாருகுஷ்டம்	தேகத்தில் அடியகன்ற கொப்பளங் களுண்டாகி சர்வாங்கத்திலும் பரவி ரணமாகும்.
14.	புண்டரீக குஷ்டம்	தேகத்தில் சிறு கொப்பளங்களுண்டாகி தாமரைப்பூ நிறத்தையொத்த ரணங்க ளாகும் - புலித்தோல் நிறத்தையொத்த புடைகள் உண்டாகும்.
15.	அபரிச குஷ்டம்	தேகத்தில் கொப்பளங்களுண்டாகி ரணமாகுமன்றி கறுத்த ரத்தம் வடியும்.
16.	அவதும்பர குஷ்டம்	தேகத்தில் அத்திபழம் ஒத்த கொப்பளங் களுண்டாகி நசுங்கி குழிவிழுந்த ரணங்களாகும். இவைகளில் நரம்புகளும் ரோமங்களும் புழுக்களும் உண்டாகும்.
17.	கபால குஷ்டம்	கபாலம் போல் வெளுத்தரண கொப்பளங் களுண்டாகி ரணமாகும்.
18.	ருசியஜிம்மிக குஷ்டம்	கடமை மிருகத்தின் நாக்கைப் போல் நிறமுள்ள கொப்பளங்களுண்டாகி ரணமாகும். புழுக்கள் நெளியும்.
19.	வெண்குஷ்டம்	தேகத்தில் சிவப்பும் கறுப்பும் கலந்த நிறமாகவாவது, சிவந்த வெளுப்பாக வாவது, அல்லது வெண்மையாகவாவது தடித்துப்பரவும்.
20.	கருங்குஷ்டம்	சர்வாங்கம் கறுக்கும், சருமத்தில் திமிருடன் நாற்றம் வீசும்.

மருந்து : ருத்திர செந்தூரம், உலகொத்தம செந்தூரம், குஷ்ட குடாரி எண்ணெய், குஷ்ட நாச தைலம், காலபயிரவ எண்ணெய், வீரபத்திர சிந்தாமணி முதலிய அநேக மருந்துகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

சர்வாங்கம் அழுகும்படியான ரணங்களுண்டாகி கிருமிகள் நிறைந்து கண்கள் மிக சிவந்து அக்கினி - மந்தம் - வேற்றுக்குரல் - தாகம் - அதிசாரம் கண்டால் அசாத்தியம் - உதடு, உள்ளங்கை, குதம், குய்யம் இவைகளில் வெண்குஷ்டம் கண்டால் அசாத்தியம்.

கிருமி ரோகங்கள் - (20)

காரணம் : சரீரத்தின் மேல் அழுக்குகள் சேர்வதாலும், மழை ஜலம் வெல்லம் - மாவு - பால் - தயிர் - பச்சைத் தானியங்கள் இலைக்கறி கருணை சேணை முதலிய கிழங்குகள் புசிப்பதினாலும் உண்டாகும்.

பொது லக்ஷணம் : தேக நிறமாறுதல், வயிற்றுவலி, சுரம், மார்பு நோவு, பேதி, பிரமை, அக்கினிமந்தம், அன்னத்திவேசம் உண்டாகும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	யூகா கிருமி (பேன்)	சரீரத்தின் மேல் சேருகின்ற அழுக்கினால் பிறந்து ரோமஸ் தானத்தில் சஞ்சரிக்கும். இது கடிப்பதினால் அணுக் கொப்பளங்களும் மச்சங்களும் உண்டாகும்.

2.	வீட்சாகிருமி	இது வெளுத்த எள்ளினது ரூபமாக பிறந்து அழுக்கு வஸ்திரங்களில் சஞ்சரிக்கும். இது கடிப்பதினால் தினவும் தடிப்புகளும் உண்டாக்கும்.
3. 4. 5. 6. 7. 8. 9.	நீர்ப்பாம்புக் கிருமி பெரும்பூநாகக் கிருமி நெல்முளைகிருமி சன்னநீளக்கிருமி அணுக்கிருமி வெண்கிருமி செங்கிருமி	இந்த ஏழுவகை கிருமிகளும் கபத்தால் ஆமாச யஸ்தானத்தில் அணு ரூபமாயும் வட்டமாகவும் பிறந்து குடலில் சுற்றிக் கொண்டு மார்பு வரையில் ஏறி மார்பு அதிரல் வாய் நீர் ஊறல் - அஜீரணம் - மூர்ச்சை - சுரம் - வாந்தி உண்டாக்கும். இக் கிருமிகளால் குஷ்ட ரோகம் உண்டாகும்.
10. 11. 12. 13. 14. 15.	வட்டக்கிருமி அணுக்கிருமி தாலில்லாக்கிருமி மிகசூக்ஷமக் கிருமி செங்கிருமி தோற்றாக்கிருமி	மதுரான்னம் முதலியவைகளினால் இரத்தம் ஒடுகின்ற நரம்பு ஸ்தானங்களில் இவ்வாறு கிருமிகளும் அவ்விரத் தத்தினால் பிறந்து தனித்தனியே பிறந்து பெருங்கூட்டங்களாகி ஏழு தாதுக்களிலும் பரவி ஏறி ரோமங்களை உதிரப் பண்ணும்.
16. 17. 18. 19. 20.	ககேருகம் மகேருகம் சவுரம் கலூனம் லேலிகம்	அதிமலஞ்சேர்வதினாலும், இலைக் கறி - கருணை, பச்சை தானியங்கள் புசிப்பதினாலும் பக்குவாதய ஸ்தானத்தில் இவ்வைந்து வித கிருமிகள் பிறந்து தனித் தனியே கூட்டங்களாகி பருத்தும் மெல்லியதும் சக்கர வடிவாயும் மலப் பையில் சஞ்சரித்து பேதி, சூலை, குத்தல், இளைத்தல், அக்கினி மந்தம் வாயில் நீர் ஊறல் உண்டாக்கும்.

மருந்து : - மாசிபத்திரி கசாயம், ஸாண்டொனயின், மாதுளம்பழத் தோல் கசாயம் முதலிய அநேக அவுஷதங்கள் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லியிருப்பதால் அவைகளைக் கொடுக்க குணமாகும்.

விஷக்கடிகள் - (28)

1. ஓணான் - இது கடித்த இடங்காயமாகி வீங்கி குத்தல், நோவு, நமைச்சல், சோருதல் உண்டாக்கும்.

2. மக்ஷிகா (வண்டு) - இது கடித்த அல்லது கொட்டின இடத்தில் வீங்கி எரிவு , நமைச்சல் கண்டு தடித்து மாறாது சிலைத் தண்ணீர் வடியும்.

3. தவளை - இது கடித்தயிடத்தில் கறுப்பான சொறி கண்டு நித்திரையும் மூர்ச்சையும் உண்டாகும்.

4. பல்லி - இது கடித்தயிடத்தில் பொடிச்சிரங்கு உண்டாகி வீக்கம், நோவு, எரிவு, மார்பு வேதனை, வியர்வை உண்டாகும்.

5. அடவி ஈ - இது கடித்தால் அதிநித்திரை, மிக மூர்ச்சை காணும்.

6. காட்டுக்கொசு - இது கடித்தயிடத்தில் வீக்கம், நமைச்சல், வேதனை உண்டாகும்.

7. மலை எறும்பு - இது கடித்த இடத்தில் தடித்து அதி எரிச்சலும் நோவும் நமைச்சலும் உண்டாகும்.

8. வாதச் சிலந்தி (7) - இவைகள் வாதரோக குணங்களுண்டாகும்.

   பித்தச்சிலந்தி (7) இவைகள் கடித்தால் பித்த ரோக குணங்களுண்டாகும்.

   சிலேஷ்மச் சிலந்தி (7) இவைகள் கடித்தால் சிலேஷ்ம ரோக குணங்களுண்டாகும்.

   சங்கீ ரணச் சிலந்தி (7) - இவைகள் கடித்தால் திரிதோஷ ரோக குணங்களுண்டாகும்.

9. மீன் - சில மீன்கள் கடித்தால் எரிவு நோவு உண்டாகும்.

10. மரவட்டை - இது கடித்தால் வீக்கம், எரிவு வியர்வை பிரமை, தடிப்பு சிரங்குகள் உண்டாகும்.

11. வாதத்தேள் - இது கொட்டினால் மார்பு - எலும்பு - நரம்பு கீல் நோவுதல், மேல் சுவாசம், புரளல் உண்டாகும்.

    பித்தத்தேள் - இது கொட்டினால் அறிவு நீங்குதல், மேல் மூச்சு, நெறிகட்டுதல், வியர்வை, எரிவு, கடுத்தல் உண்டாகும்.

    சிலேஷ்மத்தேள் - இது கொட்டினால் மார்பு அதிரல், வாந்தி வாயில் ஜலம் வடிதல், தேக சீதளம் உண்டாகும்.

உச்சிலிங்கத்தேள் - இது பகற்காலத்தில் கொட்டும். அவ்விடத்தில் வீக்கம், அதிசீதளம், நரம்பு வேதனை, உண்டாக்கும்.

12. நண்டுவாக்கலி - இது கொட்டினால் நெறிக்கட்டு, வீக்கம், வியர்வை, கடுப்பு, எரிவு, குடைச்சல், குமுறல், வாயில் நுரைவருதல் உண்டாக்கும்.

13. லாலஜஎலி - இது கடித்தால் மூர்ச்சை, வாந்தி வாய் நீர் ஊறல் உண்டாகும்.

கிருஷ்ண எலி - இது கடித்தால் தினம் ரத்தவாந்தி உண்டாகும்.

கபில எலி - இது கடித்தால் கண்டு கண்டாக எழும்பி ரணமாகி சுரம் வாந்தி பிரமை உண்டாகும்.

கோகில எலி - இது கடித்தால் கிரந்தி சுரம் தாகம் உண்டாகும்.

குநக எலி - இது கடித்தால் சிவந்த மச்சங்களுடன் நோவு உண்டாகும்.

தூங்கி எலி - இது கடித்தால் சதாகாலமும் தூக்கம், மார்பு வறளல் உண்டாகம்.

அசதி எலி - இது கடித்தால் தேக கறுத்தல், மார்பு நோவு, வாந்தி, மூர்ச்சை உண்டாகும்.

ரோம எலி - இது கடித்தால் தலைவலி, தேகமுற்றிலும் மச்சம், வீக்கம், வாந்தி பிரமை உண்டாகும்.

ஹரித எலி - இது கடிக்கில் கொட்டாவி, அக்கினிமந்தம், மயிர்க் கூச்செறிதல் உண்டாகும்.

புண்டர எலி - இது கடித்தால் தேகவெளிறல், ரணம் உண்டாகும்.

பலநிற எலி - இது கடித்தால் மிகமூர்ச்சை , அதி தாகம், வாந்தி திரிதோஷ குணங்கள் உண்டாகும்.

பலினி எலி, உந்து எலி, அருண எலி, சபல எலி, சுவேத எலி, கபோத எலி - இவ்வாறு பல எலிகள் கடிக்கில் சந்நிபாத குணங்கள் அதிகரித்து கடித்தயிடத்தில் ரத்தம் வடிதல், கிரந்தி, காதின் கீழ் கட்டிகள் உண்டாகும்.

கசால எலி - இது கடித்தால் நெஞ்சு மரத்தல், அதிவேதனை உண்டாகும்.

சகல எலி விஷங்களும் தேகத்தில் அடங்கி இருந்து மழைக் காலத்தில் அதிகரிக்கும். மூர்ச்சை, தேகவீக்கம், ரத்தவாந்தி, சுரம் உண்டாகில் அசாத்தியம்.

14. பெருச்சாளி - இது கடித்தால் நெஞ்சுமரத்தல் அதிவேதனை உண்டாகும்.

15. மூஞ்சூறு - இது கடித்தால் தேகம் இளைத்தல், பேதி, பேசக்கூடாமை உண்டாகும்.

16. பேய்நாய் - இது கடித்தால் ரணமாகி கண்மயக்கம், தாள் பிடிப்பு, சுரம், மூர்ச்சை, தாகம், மரத்தல், மார்பு நோவு உண்டாகும்.

17. குதிரை - கரடி - புலி - ஓணாய் - நரி - பூனை - குரங்கு முதலிய மிருக செந்துகள் இவைகள் கடிக்கில் அதிவியர்வை, தினவு, நோவு, சுரம், பிரமை, வீக்கம், கிரந்தி, மூர்ச்சை, தாகம் இவைகளுமன்றி அனேக ரோகங்களும் உண்டாகும்.

18. சீதமண்டலி - இது கடிக்கில் குடல் குளிர்தல், அரட்டல், அதிவியர்வை உண்டாகும்.

19. ரத்தமண்டலி - இது கடிக்கில் மயிர்க்கால்கள் தோறும் ரத்தம் வடியும்.

20. பூரம் - பூரான் - இது கடிக்கில் அது ஊருவது போல தினவும் அவ்வுருவத்தைப் போல் தடிப்பும் உண்டாகும்.

21. செய்யான் - இது கடிக்கில் கடிவாயில் வீக்கமும் மிக கடுப்பும் உண்டாகும்.

22. செஞ்சேரா - இது கடிக்கில் மேலில் சிவந்த புள்ளிகளான தடிப்புகள் உண்டாகும்.

23. சரகுண்ணி - இது கடித்தால் கடிவாயில் வீக்கம் உண்டாகும். காட்டுண்ணி - இது கடிக்கில் வீக்கம் - கடுப்பு உண்டாகும்.

24. செவ்வட்டை - இது கடித்தால் கடிவாய் சிவந்து தடித்து மரத்திருக்கும்.

25. அரணை - இது கடித்தால் சர்வாங்கம் நடுக்கல், வாயால் நுரை விழுதல், நாவு தடித்தல் உண்டாகும்.

26. அறுபுள்ளி - வண்டு இது கடித்தால் தேகமுழுவதும் வட்டமாக தடிப்புகள் உண்டாகும்.

27. கருஞ்சேரா - இது கடித்தால் தேகத்தில் கறுப்பான தடிப்புகள் உண்டாகும்.

28. சர்ப்பம் - சர்ப்பங்களின் பேதங்கள் அநேகம் - திவ்யசர்ப்பம் (8), பௌமசர்ப்பம் (82), கௌதேரசர்ப்பம் (64), நீர்விஷசர்ப்பம் (16),

வைகரஞ்ச சர்ப்பம் (3), பிரமசர்ப்பம் (1), க்ஷத்திரியசர்ப்பம் (1), வைசியசர்ப்பம் (1), சூத்திர சர்ப்பம் (1) , ஆண் - பெண்- அலி - மலட்டு சர்ப்பங்கள் (4) , கருப்ப சர்ப்பம் (1), சூதிகாசர்ப்பம் (1), கோநச சர்ப்பம் (1), வழிசர்ப்பம் (1), கிருஷ்ண சர்ப்பம் (1), சிறுநாகம் (1) , வீரியன் (6), வழலைச்சர்ப்பம் (1), கருவழலைச்சர்ப்பம் (1), மூர்க்கன் (1), மயக்குச்சர்ப்பம் (1), முறுக்குச் சர்ப்பம் (1), சாரைப்பாம்பு (4), புடையன் (1), மண்ணுளிப்பாம்பு (1), காலியாங்குட்டி (1), கண்குத்திப்பாம்பு (1), மலைப்பாம்பு (1), ஆக 207-ம் அன்றி பௌமசர்ப்பங்களுக்குள்ளும் கௌதேரசர்ப்பங்களுக்குள்ளும் பிறக்கின்ற சங்கர சர்ப்பசாதிபேதங்களுக்குக் கணக்கில்லை.

சர்ப்பங்களுக்குக்காளி காளராத்திரி, எமன், எமதூதன் என 4 பற்களுண்டு, காளி பட்டால் புள்ளடிபோல் காயமுண்டாகி பனி நீர்போல் சலம் வடியும். அப்போது விஷம் தோலைப் பற்றி ஏறும்.

தியானத்தால் விஷமிறங்கும். காளராத்திரியும் அத்துடன் பட்டால் முக்கோணம் போல் காயமுண்டாகி மஞ்சள் ஜலம் வடியும். அப்போது விஷம் மாமிசத்தைப் பற்றி ஏறும், மணிமந்திரத்தால் விஷம் இறங்கும். எமனும் அவ்விரண்டுடன் பட்டால் தொரட்டி போல் காயமுண்டாகி செந்நீர் வடியும். அப்போது விஷம் எலும்மைப் பற்றி ஏறும். நசியம், கலிக்கம், மூலிகைகளால் விஷமிறங்கும். எமதூதனும் அம்மூன்றுடன் பட்டால் வில்லை - பிறைபோல் காயமுண்டாகி கழுநீரை ஒத்த ஜலம் வடியும். அப்போது விஷம் மூளைப் பற்றி ஏறும். மணி மந்திர அவுஷதாதிகளாலும் தெய்வ வலியாலும் விஷமிறங்கும்.

சர்ப்பம் கடித்த உடன் கசப்பு வஸ்துக்களை தின்றால் கசப்பாயிராது அன்றியும் சூர்யன் - சந்திரன் - தீபம் அக்கினி இவைகள் கண்ணுக்கு தோன்றாது.

சகல விஷக்கடிகளுக்கும் பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய ஆதிசேஷவிஷஹர மாத்திரை முதலியவைகள் கொடுக்க விஷமிறங்கும்.

ரத்தபித்த ரோகங்கள் - (7)

காரணம் : - ரத்தகெடுதி, ரத்தவிருத்தி, வாதாதிகளின் கூட்டம்,

இவைகளால் வெளிப்படுகின்ற ரத்தமானது வகந்தமாகவும், வேறு வண்ண மாகவும் இருக்கும். இது பீலிகஸ்தானத்திலிருந்தாவது, ரத்த ஸ்தானத்திலிருந்தாவது, எகுருதிஸ்தானத்திலி ருந்தாவது உண்டாகும்.

பூர்வ ரூபம் : தலைபாரம், தேகங்கறுக்குதல், இரைப்பு, இருமல், பிரமை, வாய் சிவப்பு - கவுச்சு - புளிப்பு - களிம்பு வாசனை உண்டாகும்.

பொது லக்ஷணம் : ரத்தபித்த ரோகமானது ஊர்த்துவமுகம், அதோமுகம், உபயமுகம் இம்மூன்று விதமாக கண் - காது - மலத்துவாரம் - மூத்திரத் துவாரம் - நாசி - ரோமம் - வாய் இவ்வெழு வழியாக ரத்தம் வெளிப்படும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதரத்த பித்தம்	நுரையுடன் உஷ்ணமான ரத்தம் வெளிப்படும்.
2.	பித்தரத்த பித்தம்	கசாயம் - கோமூத்திரம் வண்ணமாகவும் குழம்பாகவும் ரத்தம் வெளிப்படும்.
3.	சிலேஷ்மரத்த பித்தம்	வழுவழுப்பாகவும், வெளிறாகவும் ரத்தம் வெளிப்படும்.
4.	ஊர்த்துவமுகரத்த பித்தம்	வாய் - நாசி - கண் - செவி வழியாக ரத்தம் வெளிப்படும்.
5.	அதோமுகரத்த பித்தம்	மல - ஜல - ரோமத்துவாரங்களின் வழியாக ரத்தம் வெளிப்படும்.
6.	உபயமுகரத்த பித்தம்	ஊர்த்துவமுக - அதோமுக ரத்தபித்த ரோகத்தின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் உண்டாகும்.
7.	சன்னிபாதரத்த பித்தம்	வாதாதி ரத்த பித்த ரோகங்களின் லக்ஷணங்கள் ஒரே காலத்தில் உண்டாகும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளை கொடுக்க குணமாகும்.

ரத்தபித்த ரோகத்தில் சுரம், வாந்தி, காசம், சோபை உண்டாகில் அசாத்தியம்.

அசிர்க்கர ரோகங்கள் - (6)

காரணம் : துக்கம் - பட்டினி - அதிசையோகம் - இவைகளால் வாதாதிகள் அதிகரித்து ருதுகாலந்தப்பும்.

பொது லக்ஷணம் : அல்குலுக்குள்ளிருக்கும் துவாரமானது இராத்திரி காலத்தில் சுருங்கி மூடிக் கொள்வதால் முன்பு நரம்புகளில் வழியாக சிரவித்து சேர்ந்திருக்கின்ற உதிரம் கரிய நிறமாகி துர்க்கந்தமுண்டாகி 2வது ருதுகாலத்தில் அல்குல் வழியாக அதிவேதனையுடன் வெளிப்படும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதாசிர்க்கரம்	ஸ்திரீகளுக்கு வயிற்றுவலி உண்டாகி அல்குல் வழியாக கறுத்த ரத்தம் வெளிப்படும்.
2.	பித்தாசிர்க்கரம்	சுரங்கண்டு அல்குல்வழியாக நீல நிறமான ரத்தம் வெளிப்படும்.
3.	சிலேஷ்மா சிர்க்கரம்	அல்குல் வழியாக பிரேத நாற்றமுள்ள வெளிப்பான ரத்தம் வெளிப்படும்.
4.	வாதபித்தா சிர்க்கரம்	அல்குல் வழியாக வரும் ரத்தமானது கண்டவுடன் மறைந்துவிடும்.
5.	பித்தசிலேஷ்மா சிர்க்கரம்	அல்குல் வழியாக உருண்டையுருண்டையாக ரத்தம் விழும்.
6.	சந்நிபாதா சிர்க்கரம்	வாதாதி அசிர்க்கர ரோகங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாகும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளை கொடுக்க குணமாகும்.

4-5-6 இந்த நம்பர்களுள்ள ரோகங்கள் அசாத்தியம், மற்றவைகள் சாத்தியமாம்.

விக்கல் ரோகங்கள் - (5)

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	க்ஷுத்த்திர விக்கல்	ஆகாரம் சாப்பிடுகையில் வாயு சேர்ந்து அற்பவிக்கல் உண்டாகும்.
2.	அசனோற்பவ விக்கல்	கார- அஜீர்ண - தீக்ஷண - கடின வஸ்துக்களைச் சாப்பிடுவதால் விக்கல் உண்டாகி இருமல் காணும்.
3.	மகாவிக்கல்	மிகவிக்கலுண்டாகி கண் - புருவம் - நெறி தெரிந்து விழுவது போல் இருக்கும். சர்வாங்கமும் மரத்தல், முதுகு வளைதல் உண்டாகும்.
4.	எமளவிக்கல்	ஆகாரம் சீர்ணிக்குங்காலத்தில் கொஞ்ச நேரம் பொறுத்து 2 - 2ஆக பிறந்து அதிதாகம் - உப்பிசம் - வாந்தி - பிரலாபம் - பேதி மிக கொட்டாவி உண்டாகும்.
5.	கம்பீரவிக்கல்	நாபி அல்லது பக்கவாசயஸ்தானத்தில் உண்டாகி மிக கொட்டாவி விக்கல் தேகமுறுக்குதல் மகா விக்கல் ரோக லக்ஷணங்கள் உண்டாகும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய ராஜமார்தாண்ட லேகியம் முதலிய மருந்துகள் கொடுக்க குணமாகும்.

3 - 5 நம்பருள்ளவை அசாத்தியம் மற்றவைகள் சாத்தியமாம்.

குரற்கம்மல் ரோகங்கள் - (6)

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதக்குரற் கம்மல்	குரல் வளையானது வறண்டு சுட்கித்து முள் சொருகுதல் போல் நோதலும் நடுக்கலான தொனியும் உண்டாகும்.
2.	பித்தக்குரற் கம்மல்	தாள் வாய்த்தாளிலும் குரல்வளை யிலும் எரிவு வறட்டல் உண்டாகும்.
3.	சிலேஷ்மக்குரற் கம்மல்	குரல் வளைக்குள் கோழை பூசினது போல் இருக்கும். குறுகுறு சத்தம், கம்மல் வார்த்தை உண்டாகும்.
4.	திரிதோஷக்குரற் கம்மல்	குரல் வளையை இறுக்கிப் பிடிப்பது போல் இருக்குதல், கீச்சுக்குரல், இவைகளு மன்றி வாதாதி குரல் கம்மல் ரோகங்களின் லக்ஷணங்களையும் உண்டாக்கும்.
5.	மேதோகுரற் கம்மல்	குரல் வளையில் வழுவழுப்பும் சிலேஷ்மக் குரற்கம்மல் ரோகத்தின் லக்ஷணங் களையும் உண்டாக்கும்.
6.	க்ஷயக்குரற் கம்மல்	குரல்வளையில் அதிபுகை கம்மிக் கொண்டது போல் இருத்தலும் குரல் கம்மலும் உண்டாகும்.

மருந்து : வீரபத்திரசிந்தாமணி, உலகோத்தம செந்தூரம் முதலியவைகள் பிராண ரக்ஷாமிர்தசிந்துவில் நாம் சொல்லியபடி செய்து கொடுக்க குணமாகும்.

4 - 5 இந்த நம்பர்களுள்ளவைகள் அசாத்தியம், மற்ற வகைகள் சாத்தியமாம்.

அரோசக ரோகங்கள் - (15)

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாத அரோசகம்	வாய்துவர்ப்பு ஒக்காளம் உண்டாகும்.
2.	பித்த அரோசகம்	வாய் கசப்பு, ஒக்காளம் உண்டாகும்.
3.	சிலேஷ்ம அரோசகம்	வாய் தித்திப்பு, ஒக்காளம் உண்டாகும்.
4.	திரிதோஷ அரோசகம்	வாதாதி அரோசக ரோகங்களின் லக்ஷணங்களை ஒரே காலத்தில் உண்டாகும்.
5.	துக்க அரோசகம்	வாயில் கோழை ஜலம் ஊறுதல் உண்டாகும்.

மருந்து : பாவனக் கடுக்காய், இஞ்சிலேகியம், கதலி லேகியம் முதலியவைகள் பிராணரக்ஷாமிர்த சிந்துவில் காண்க.

ஆநாக ரோகங்கள் - (6)

காரணம் : அபான வாயுவும் உதான வாயுவும் ஒன்றாக சேர்ந்து வயிற்றை விகுத்தலுடன் இழுத்துக் கொள்ளும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	ஆநாக ரோகம்	வயிற்றில் இரைச்சல், சுவாசம் மலச்சிக்கல்
2.	அஷ்டிலா ரோகம்	ஆநாக ரோகம் அதிகரிப்பதாலுண்டாகி வயிற்றுக்குள் வீக்கம் கண்டு

		பந்துபோல் எழும்புவதும் கட்டியாகத் தோற்றப்படுவதுமாயிருக்கும்.
3.	பிரத்தியஷ்டிலா ரோகம்	ஆநாகரோக லக்ஷணங்களுடன் ஊர்த்துவமுகமாக எழும்புகிற கட்டியானது குறுக்காக வளர்ந்து 2 விலாக்களிலும் குறுக்கே ஓடி பாயும்.
4.	துனிரோகம்	வயிற்றில் குத்தலும் வீக்கமும் உண்டா யிருப்பதுமன்றி அதில் அடங்கிய வாயுவானது பக்குவாயச ஸ்தானத்தி லிருந்து அல்குல் ஆசனம் வரைக்கும் உபத்திரவத்தை உண்டாக்கி அதோமுக மாகக் கீழ் இறங்கிக் கொண்டேயிருக்கும்.
5.	பிரதிதுனி ரோகம்	வாயு குதஸ்தானத்தில் குடியாக இருந்து பக்குவாசயஸ்தான வரைக்கும் வியாபித்து உபத்திரவத்தை உண்டாக்கி ஊர்த்துவ முகமாக மேலே ஏறிக் கொண்டே இருக்கும்.
6.	சலக்கூர்ம ரோகம் (நீராமை)	சிலேஷ்மத்துடன் வாயுவும் சேர்ந்து வயிற்றுக்குள் ஆமையைபோல் ஒரு கட்டியாகி வலது அல்லது இடது பக்கத்திலிருந்துக் கொண்டு அசைந்தும் அசையாமலுமிருக்கும்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் மருந்துகளைக் காண்க.

விசர்ப்பிரோகங்கள் - (8)

பொது லக்ஷணம் : சோபை ரோகங்களில் விஷசோபை தவிர, மற்ற 8 வித சோபை ரோகங்களுடன் பலநிறக் கொப்பளங்களையும் சுரரோக குணங்களையும் அடைந்து சரீரத்தின் உட்புறம்-வெளிப்புறங்களில் ஒவ்வொரு காலத்திலாவது, இவ்விரு புறத்திலும் ஒரே காலத்திலாவது உண்டாகும்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதவிசர்ப்பி	தேக முற்றிலும் ஒரே காலத்தில் வீங்கி அதின் பேரில் கறுத்த கொப்பளங்கள் கண்டு அதிநோவு இரைப்பு ஆயாசம் தாகம் வாதசுரகுணம் காணும்.
2.	பித்தவிசர்ப்பி	தேக முழுவதும் சீக்கிரத்தில் வீங்கி அதின் பேரில் மஞ்சள் - சிவப்பு கொப்பளங்கள் கண்டு மிக துயரமும் பித்தசுர குணமும் காணும்.
3.	சிலேஷ்மவிசர்ப்பி	உடம்பெங்கும் வீங்கி அதின்பேரில் வெளுத்த கொப்பளங்கள் கண்டு தினவும் சிலேஷ்ம சுரகுணமும் காணும்.
4.	அக்கினிவிசர்ப்பி	தேகமுழுவதும் நெருப்பு கொப்பளங்கள் போல் கொப்பளங்களும் எரிச்சலும், இவ்வெரிச்சல் பிறந்த இடங்கருக்குதலும் இவ்வெரிச்சலில்லாத இடம் ரத்த நீலநிறமாயிருத்தலும் வாதபித்தசுர குணமும் காணும்.
5.	கிரந்திவிசர்ப்பி	தேகமெங்கும் கொப்பளங்கள் உண்டாகும் அல்லது நரம்புமாமிசத்திலுள்ள ரத்தம் பேதித்துத்தடிக்கப்பண்ணி நீண்ட - வட்ட - பருத்த - தடித்த வடிவமாக திரட்டி விடுவது மன்றி மேல் எங்கும் மாலையைப் போல் வரிசையாக அநேக கிரந்திகள் உண்டாகும். அன்றியும் வாத சிலேஷ்ம சுர குணமும் காணும்.
6.	பங்கவிசர்ப்பி	தேகம் தடித்து வீங்கி அவ்வீக்கத்தின் மேல் கறுப்பு - வெளுப்புக்கட்டிகள் கண்டு பழுத்து துர்கந்தமுண்டாகி மாமிசம் அழுகி பிரேத நாற்றத்துடன் தேகத்தின் மேல் சேற்றை

		பூசினது போல் நிறமுண்டாகும். அன்றியும் சிலேஷ்ம பித்த சுரகுணமும் உண்டாகும்.
7.	சர்வவிசர்ப்பி	வாதாதி விசர்ப்பிகளின் லக்ஷணங்களை ஏக காலத்தில் உண்டாகும்.
8.	க்ஷத விசர்ப்பி	தேகத்தில் கறுப்பு - சிவப்பு கொப்பளங்கள் உண்டாகி சர்வாங்க வீக்கம், சுரம், தாகம், நோவு முதலிய லக்ஷணங்களுண்டாகும்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் மருந்துகளைக் காண்க.

1-2-3 இந்த நம்பருள்ளவை சாத்தியம், 4-5-6 இந்த நம்பருள்ளவைகள் கஷ்டசாத்தியம். 7-8 இந்த நம்பருள்ளவைகள் அசாத்தியம்.

மேகக்கட்டி ரோகங்கள் - (9)

காரணம் : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளை கொடுத்து மேக ரோகங்களை நிவர்த்தி செய்யாவிடில் அந்நீரினால் ரோகிகளுக்கு 9 வித மேகக் கட்டிகள் உண்டாகும்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வலைக்கண் கட்டி	இது மொத்தாகாரமாக உண்டாகி அநேக நரம்புகளால் சூழப்பட்டு வலையைப் போல் கண்கள் கண்டு அதி உபத்திரவத்தைச் செய்யும்.
2.	மடக்குக்கட்டி	இது கீல் - மாமிசஸ்தானம் இவைகளில் உண்டாகி கறுத்து - அகன்று - உயர்ந்து மடக்கு கவிழ்த்தது போலிருக்கும்.
3.	ஆமையோட்டுக் கட்டி	இது குழிவிழுந்து அதிநோவு உண்டாகி ஆமையோட்டை கவிழ்த்தது போலிருக்கும்.

4.	அதோமுகக் கட்டி	வயிறு அல்லது இடுப்பில் கறுப்புநிறக்கட்டி உண்டாகி நிமிர வொட்டாமல் குனியப் பண்ணும்.
5.	பேய்ச்சுரைக் காய்க்கட்டி	தேகத்தில் தீயால் சுட்டது போல் எரிச்சல் கண்டு கொப்பளம் உண்டாகி பிறகு கறுப்பு சிவப்பு நிறமான கொப்பளங்கள் சர்வாங்கம் வியாபித்து பேதி, தாகம், சுரம் காணும்.
6.	கடலைக்கட்டி	சர்வாங்கம் சிறுகடலையொத்த கொப்பளங்கள் உண்டாகி வேதனை செய்யும்.
7.	புத்திராத்திக்கக் கட்டி	தேகத்தில் விஸ்திரித்து ஒன்றின் பின் ஒன்றாக அநேக கொப்பளங்கள் உண்டாகி எரிவு - வேதனை செய்யும்.
8.	கடுகுக்கட்டி	சர்வாங்கம் கடுகு அளவாக கொப்பளங்களுண்டாகி வேதனை செய்யும்.
9.	நிலப் பூசினிக் கிழங்கு கட்டி	வட்டமாகத் தடித்தக் கட்டிகள் உண்டாகி அதிவேதனை செய்யும்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் மருந்துகளைக் காண்க.

1-2-3 இந்த நம்பருள்ளவை சாத்தியம், 7 - 9 இந்த நம்பருள்ளவைகள் கஷ்டத்தின் மேல் சாத்தியம். மற்றவைகள் அசாத்தியமாம்.

யானைக்கால் ரோகங்கள் - (3)

காரணம் : மலசலம் ஊறியவஸ்து - சிலேஷ்மவஸ்து புசித்தலினாலும், அதிசையோகத்தினாலும் உண்டாகும்.

பொது லக்ஷணம்: தொடை நரம்புகளில் சிலேஷ்மம் அதிகரித்திருக்குங் காலத்தில் பாதங்களில் வாதமும் பித்தமும் சேர்ந்து புற்றுபோல் துர்மாமிசத்தை உண்டாக்கி அரோசகம் முதலியவைகளை உண்டாக்கும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதயானைக் கால்	ஒன்று இரண்டு பாதங்களில் வீக்கங் கண்டு கறுத்து துர்மாமிசமடைந்து கருணைக் கிழங்கு முளைகளைப் போல் கெட்டிப்பட்டு நோவைத் தரும்.
2.	பித்தயானைக் கால்	1-2 பாதங்களில் மஞ்சள் நிறமான வீக்கங் கண்டு எரிவு - சுரம் - பிதற்றல் - வாந்தி - பேதி உண்டாகும்.
3.	சிலேஷ்ம யானைக்கால்	1-2 பாதங்களில் வெளுப்பான வீக்கங் கண்டு அதின்மேல் சிறிதும் பெரிதுமானது மாமிசம் வளரும்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளைக் கொடுக்க குணமாகும்.

ஒரு வருஷத்திற்குமேல் படாததுமான யானைக் கால் ரோகத்தை சிகிட்சை செய்யில் சாத்தியமாகும்.

யோனி ரோகங்கள் - (21)

காரணம் : தேகத்திற்கு தகாத பதார்த்தங்களைப் புசித்தல், அதிசையோகம், மாதாந்தருது தோஷம், ஆண்குறி தோஷம் இவைகளாலுண்டாகும்.

நம்பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதயோனி	அல்குலில் வாயுசேர்ந்து உண்டாகி கறுப்பு சிவப்பான ரத்தம் வடிதல், அடிவயிறு கனத்தல், கவுட்டுகள் நோதல் காணும்.

2.	பித்தயோனி	அல்குலில் பித்தஞ்சேர்ந்து உண்டாகி மஞ்சள் கறுப்பான ரத்தம் வடிதல், தேகத்தில் அக்கினிச்சுவாலை வீசுதல், சுரம், தாகம் காணும்.
3.	சிலேஷ்ம யோனி	அல்குலில் சிலேஷ்மம் உண்டாகி வெளுப்பான ரத்தம் வடிதல், தினவு காணும்.
4.	உப்புதலுத யோனி	அல்குலியானது வெண்மையாகி சுட்கித்து வேதனையுடன் திரைந்திருக்கும்.
5.	உதாவர்த்த யோனி	அல்குலில் வேதனை உண்டாகி நுரைத்த ரத்தம் வடியும்.
6.	ரத்தயோனி	நிதம்ப ஸ்தானத்தில் அதிவேதனை உண்டாகி அதி ரத்தம் வடியும்.
7.	அந்தர்முகி யோனி	ஸ்திரீயானவள் மேடு பள்ளங்களான இடங்களில் படுக்கை போட்டுக் கொண்டு சையோகம் செய்வதால் இந்த ரோக முண்டாகி அல்குலில் வாயுதங்கி வேதனை - வயிற்றுசூலை காணும்.
8.	சாதக்கினி யோனி	அல்குல்வாயில் மிக சுடுகை, அதி வேதனை காணும்.
9.	சுட்கயோனி	ஸ்திரீயுடன் ருது காலத்தில் சையோகம் செய்வதால் சுபாவ ரத்தமானது மறிபட்டு மலஜலசிக்கல், கும்பல், வேதனை உண்டாகும்.
10.	வாமினியோனி	ஸ்திரீ பிரசவித்து 6-7 நாளில் கர்ப்பாசயத்திலுள்ள கோழை அல்குல் வழியாக விழும்.
11.	லோகிதசுட்க யோனி	அல்குலில் வாதாதிகள் அதிகரித்து அங்குள்ள ரத்தத்தை உலர்த்தி சுட்கித்து சிவப்பாக்கி எரிச்சலை உண்டாக்கும்.

12.	பரிப்புலுத யோனி	அல்குல் உப்பல் அதிவேதனை கறுப்பு மஞ்சள் நிறமான ரத்தம் வடிதல், சுரம் காணும்.
13.	நபோஜக யோனி	கர்ப்ப காலப் புணர்ச்சியால் அல்குல் வெந்து 2 ஸ்தனமும் உலர்ந்து போவதால் அந்தஸ்திரீ புருஷனை சொப்பனத்திலும் விரும்ப மாட்டாள்.
14.	மகாயோனி	அல்குல் துர்மாமிசத்தால் வளர்ந்து அதிநோவைத் தரும்.
15.	அதிசஞ்சரித்த யோனி	பருத்த ஆண்குறியுள்ள புருஷசை யோகத்தாலாகி அல்குலில் வீக்கம், அதிவேதனை உண்டாகும்.
16.	சூசிமுகயோனி	கர்ப்ப ஸ்தானத்தில் வாயு தங்கி மாமி-சந்தூலித்து அல்குலின் துவாரத்தை ஊசி நுழையுந் துவாரம் போலாக்கி சையோகத்துக்கு இடங்கொடாது.
17.	பராக்சரண யோனி	ருதுவாகாத ஸ்திரீ புருஷனைப் புணர்வதால் கருப்பாசயத்தில் சேருகிற ரத்தம் கெடுதியை அடைந்து முதுகில் குத்தல், தொடை-கவுட்டி நோவு உண்டாகும்.
18.	கண்டுலயோனி	அதிசையோகத்தால் அல்குலிலுள்ள ரத்தம் கெடுதியை அடைந்து கிருமிகளுண்டாகி நமைச்சல், சையோகத்தில் அதிவிருப்பம் உண்டாகும்.
19.	கர்ன்னிகா யோனி	அகால சையோகத்தால் வாயு அதிகரித்து ரத்தத்தை கெடுத்து அல்குலின் துவாரத்தில் திரண்ட ரத்தம் தாமரைக் காயைப் போல் தொங்கும்.
20.	சந்நிபாத யோனி	அல்குலிலும் கருப்பத்திலும் வாதாதிகள் அதிகரித்து அநேக ரோகங்களை உண்டாக்கும்.

21.	விப்புலுதயோனி	ஸ்திரீ அதிமோகங்கொண்டு தினம் பலதடவை புருஷனைப் புணர்வதாலாகி அல்குல் கலங்குவதும், மாறாது மதஜலம் வடிவதும், தேகம் துர்பலப்படுவதுமா யிருக்கும்.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளைக் கொடுக்க குணமாகும்.

பாதபேத ரோகங்கள் - (1)

காரணம் : வெகுநடை அதிஉஷ்ணம் இவைகளால் பாதத்திலுள்ள சிலேஷ்மமானது நாசமடைவதாலுண்டாகும்.

பிரதான லக்ஷணங்கள் : மேற்படி காரணத்தால் பாதத்தில் வாதமும் பித்தமும் அதிகரித்து உள்ளங்கால், குதிகால் முதலிய ஸ்தானங்களில் வெடிப்புகள் கீற்று கீற்றாக உண்டாகி நோவும் ரத்தம் வடிதலும் காணும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் நாம் சொல்லிய மருந்துகளை கொடுக்க குணமாகும்.

வெகுமூத்திர ரோகம் - (1)

காரணம் : அதிசையோகம், மனக்கவலை முதலியவைகளால் உண்டாகும்.

பிரதான லக்ஷணங்கள் : அடிக்கடி மூத்திரமிறங்குதல், பலவீனப்படுதல், உதடு முகம் கன்னம் சுட்கித்தல், நாக்கு வாய் வறளல், மிக தாகம், அரோசகம் உண்டாகும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லிய மருந்துகளை செய்து கொடுக்க குணமாகும்.

மார்பு ரோகங்கள் - (5)

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதமார்பு	மார்பில் குத்தல், நோவு, மரத்தல், அதிரல்.
2.	பித்தமார்பு	மார்பில் நோவு, எரிவு, தாகம், மூர்ச்சை, பிரமை வாந்தி, அரோசகம், சுரம்.
3.	சிலேஷ்ம மார்பு	மார்பைக் கெட்டியாக மூச்சு பிடித்ததுபோல் ஸ்தம்பமாக்கிப் பிடித்தல், சுரம், இருமல், கோழை, அக்கினி மந்தம், அரோசகம்.
4.	திரிதோஷ மார்பு	மார்பில் ஈட்டியால் குத்துவது போல் குத்தல், சுரம், பிரமை, தாகம், எரிவு.
5.	கிருமி மார்பு	பூச்சிகள் குடலிலுண்டாகி இருதய ஸ்தானத்துக்குமேல் ஏறுவதால் மார்பில் துடித்தல், அதிரல், வீக்கம், மார்பு வாளால் அறுபடுவது போலிருத்தல், கோழை.

மருந்து : பிராணரக்ஷாமிர்த சிந்துவில் சொல்லிய மருந்துகளைக் கொடுக்க குணமாகும்.

வாத பித்த சிலேஷ்ம மார்பு ரோகங்கள் - சாத்தியம், திரிதோஷ மார்பு ரோகம் - கஷ்ட சாத்தியம், கிருமி மார்பு ரோகம் - அசாத்தியம்.

மசூரிகை ரோகங்கள் - (8)

நம்பர்	மசூரிகையின் பெயர்கள்	மசூரிகைகளின் லக்ஷணங்கள்	அம்மை காணும் நாள்	அம்மை நீர் கட்டும் நாள்	அம்மை இறங்கும் நாள்	ஸ்நானஞ் செய்யும் நாள்
1.	கல்லு அம்மை	சங்களி போல் கொப்பளங்கள், வாந்தி, பேதி, சுரம்	3 - ம்	7 - ம்	10 - ம்	11 - ம்
2.	பால் அம்மை	கடூர சுரம், கொப்பளங்கள்	3 - ம்	7 - ம்	9 - ம்	15 - ம்
3.	வரகு அம்மை	சர்வாங்கம் வரகு அரிசியைப் போல் கொப்பளங்கள் ரத்த மூத்திரம் கடூர சுரம்	3 - ம்	7 - ம்	11 - ம்	13 - ம்
4.	கொள்ளுஅம்மை	கொள்ளு போல் கொப்பளங்கள் வலுப்பு, சுரம், சன்னி	3 - ம்	7 - ம்	13 - ம்	16 - ம்

5.	உப்பு அம்மை	சர்வாங்கம் உப்பை போலிருக்கும் சுரம்	3 - ம்	5 - ம்	7 - ம்	11 - ம்
6.	பாசிப் பயிறு அம்மை	பாசிப் பயிறு அளவாக கொப்பளங்கள் சுரம் பிதற்றல்	3 - ம்	7 - ம்	9 - ம்	17 - ம்
7.	வெந்திய அம்மை	வெந்தியம் போல் கொப்பளங்கள், சுரம்	3 - ம்	7 - ம்	9 - ம்	15 - ம்
8.	உமி அம்மை	உமிபோல் சர்வாங்கம் கொப்பளங்கள் பேதி வாந்தி சுரம்	3 - ம்	7 - ம்	9 - ம்	10 - ம்

மருந்து : மசூரிகையிலுண்டாகும் ரோகங்களுக்கு பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் மருந்துகளைக் காண்க.

மேற்படி 8 மசூரிகைத் தவிர கடுகு மசூரிகை வாத மசூரிகை முதலிய அநேக விதங்களாக சொல்வார்கள்.

செவ்வாப்புக்கட்டி ரோகங்கள் - (3)

பூர்வரூபம் : இவைகள் வித்திரிதிக்கட்டிகளை போலவே ஆரம்பித்து மாமிச தாதுவை அனுசரித்து உண்டாகி பழுக்கும்போது அவைகளில் பள்ளம் விழும்.

நம் பர்	ரோகங்களின் பெயர்கள்	பிரதான லக்ஷணங்கள்
1.	வாதசெவ்வாப்பு கட்டி	கறுப்பு நிறத்துடன் எழும்பி குத்தலும் சுரமும் காணும்.
2.	பித்த செவ்வாப்பு கட்டி	மஞ்சள் - சிவப்பு - நிறத்துடன் எழும்பி எரிச்சலை உண்டாக்கி பழுத்து உடைந்து ரத்தம் வடியும்.
3.	சிலேஷ்ம செவ்வாப்பு கட்டி	கனத்தும் வெளுத்தும் கோரமாக எழும்பி அதி உபத்திரவத்தைப் படுத்தும்.

மருந்து : பிராண ரக்ஷாமிர்த சிந்துவில் காண்க.

3வது நம்பருள்ளது கஷ்டசாத்தியம் மற்றவைகள் சாத்தியமாம்.

ரோக நிர்ணய சாரம் முற்றிற்று

தாமரை
நூலகம்